யாழ்ப்பாணம்
பொது சன நூலகம்
24 APR 1999
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2030 சித்திரை 11 சனிக்கிழமை (24-04-1999) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 48

# புதிய அரசு அமைக்கும் சோனியாவின் முயற்சி பிசுபிசுப்பு!



புதுடில்லி,ஏப்ரல் 24

**இந்தியாவில் புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி எடுத்த முயற்சி பெரும்பாலும் பிசுபிசுத்துப் போய்விட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.**

**பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதா அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் ஒரு வாக்கினால் தோல்வியுற்று ஆறு நாள்கள் கடந்த நிலையிலும் கூட மாற்று அரசு ஒன்றை அமைக்க முடியாத நிலையில் எதிர்க்கட்சிகள் திண்டாடுகின்றன.**

பாரதீய ஜனதா அரசை நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்கடித்த பின்னர் ஜனாதிபதியைச் சந்தித்த சோனியா காந்தி, எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 272 எம்.பிக்களின் ஆதரவு தமக்கு இருப்பதாக அவரிடம் தெரிவித்ததுடன் -

பிறகட்சிகள் வெளியில் இருந்து வழங்கும் ஆதரவுடன் தனது சிறுபான்மை அரசு ஆட்சி செய்யும் என்றும் கூறியிருந்தார்.

ஆனால் முலாயம் சிங் யாதவ் தலைமையிலான சமாஜவாதிக் கட்சியும், அதனோடு சேர்ந்த இரு சிறிய கட்சிகளும் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சிக்கு ஆதரவு கொடுக்க மறுத்துவிட்டன.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சு!

அரியாலை,ஏப்.24

யாழ்.குடாக் கடலை அண்டிய பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவிலும் பின்னர் அதிகாலை 1.30 மணியளவிலும் ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. குருநகர் கடற் பகுதியிலும் சரமாரியான துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

இதேவேளை -

யாழ். கடல் நீரேரிப் பகுதியில் நேற்று மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

## நேற்று 40பேர் சாட்சியம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்.பொலீஸ்நிலையத்தில் நடைபெற்றுவரும காணாமல போனோர் தொடர்பான விசாரணையில் நேற்று 40 உறவினர்கள் நேரில் தோன்றி சாட்சியமளித்தனர்.

கடந்த நான்கு நாள்களாக இந்த விசாரணைகள் கொழும்பிலிருந்து வந்த புலனாய்வுப் பொலீஸாரினால் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இன்று காலை 9 மணிக்கு இந்த விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்று யாழ்.பொலீஸ்நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5)

அடுத்த வாரம்

## அமைச்சரவையில் புதிதாக மூவருக்கு இடம்?

கொழும்பு,ஏப்.24

அடுத்த வாரமளவில் மேற்கொள்ளப்படவிருக்கும் அமைச்சரவை மாற்றத்தின் போது மூன்று புதிய முகங்கள் அமைச்சரவையில் சேர்க்கப்படவிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாணசபைத் தேர்தல்களின் முடிவுப்படி கூடுதல் ஆதரவைப் பெற்றுள்ளவர்களுக்கு அமைச்சரவையில் இடமளிப்பதென்று அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏழு புதிய பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவ்வயில் உள்ள சிலர் நீக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது. இவ்வார ஆரம்பத்தில் நடந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் சபைக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டு புதிய மாற்றங்கள் குறித்து முடிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

யாழ். விவசாயிகளிடம்

## சின்ன வெங்காயத்தை கொள்வனவு செய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப். 24

யாழ்.மாவட்ட விவசாயிகளிடம் இருந்து சின்ன வெங்காயத்தை கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் (சி.டபிள்யூ.ஈ) கொள்வனவு செய்யவிருக்கின்றது.

பருத்தித்துறையில் வைத்து இந்த வெங்காயத்தை அந்த நிறுவனம் பெற்று கப்பல் மூலம் அவற்றைக் கொழும்புக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்யும்.

தனியார் வர்த்தகர்கள், கூட்டுறவு அமைப்பினர் வெங்காயத்தை விவசாயிகளிடம் கொள்வனவு செய்து பருத்தித்துறையில் வைத்து அந்த நிறுவனத்திடம் கையளிப்பர்.

இந்த திட்டம் மூலம் விவசாயிகள் நியாயமான விலையைப்பெற யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்.செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் இந்த விடயம் ஆராயப்பட்டது. கடந்த காலங்களில் தனியார் வர்த்தகர்கள் கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் சென்ற சின்ன வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைக்காததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் -

இதன் காரணமாக இந்த புதிய திட்டம் நடைமுறைக்கு வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-5)

வன்னி போக்குவரத்து தடையால்

## ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வவுனியாவில் நிர்க்கதி

வவுனியா,ஏப்.24

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குச் செல்லும் உயிலங்குளம் ஊடான பாதை போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளதால் அப்பகுதியில் இருந்து வவுனியாவுக்கு வந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் திரும்பிச்செல்ல முடியாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உணவு மற்றும் செலவுக்கு பணம் இல்லாமலும், பாஸ பெறுவதில் உள்ள கெடுபிடிகளாலும் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளைச் செயலாளரிடம் அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இவர்களின் பிரச்சினைகளைக் கேட்ட பின்னர் அவர் இன்று வவுனியாவில் நடக்கும ஆளுநர் இடம்பெயர் சேவையின போது இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு மக்கள் செல்ல வசதியாக பாதையைத் திறக்குமாறு தாம் கோரவுள்ளதாகத் தெரிவித்தார்.

பாதை திறக்கத் தாமதம் ஏற்படும் பட்சத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறும் அவர் கோரவுள்ளார்.

(ஐ-3-164)

## கைதடி நவீல்ட் பாடசாலை பொருளாதார நெருக்கடியில்!

### பரோபகாரிகளின் உதவி கோரப்படுகிறது

யாழ்ப்பாணம்,ஏப்.24

இலங்கையில் தமிழ்ப் பிரதேசத்தில் செவிப்புலன் இழந்தோர், விழிப்புலன் இழந்தோர் வாழ்வுக்கான ஒரேயொரு கல்வி நிறுவனமான கைதடி நவீல்ட் பாடசாலை முன்னெப்போதுமில்லாத மிகக் கஷ்டமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதாக பாடசாலை நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் நூற்றியைம்பது செவிப் புலனிழந்தோர், விழிப்புலனிழந்தோரின் வாழ்வுக்கு வழிகாட்டியாக - ஒளி கொடுக்கும் நிலையமாக - விளங்கும் பாடசாலை பொருளாதார நெருக்கடி காரணமாக செயலிழக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பது குறித்து சமூகத் தொண்டு வட்டாரங்கள் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்திருக்கின்றன.

செவிப்புலன் இழந்தோர், விழிப்புலன் இழந்தோருக்கு இலவச தங்குமிட வசதி முதல் கல்வி வரை சகல வாழ்க்கை வசதிகளையும் இப்பாடசாலை வழங்கிவருகின்றது. இங்கு கல்வி பயின்ற விழிப்புலன் இழந்தோர் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர்.

அப்படியிருக்க -

பொருளாதார நெருக்கடி காரண

(7ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரண பரீட்சை முடிவு திங்களன்று வெளியாகும்

கொழும்பு,ஏப்.24

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சி.ஈ.(சாதாரண) பரீட்சையின் முடிவுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப பரீட்சைக்கான செய்முறைப் பரீட்சைப் புள்ளிகள் காலதாமதமாகக் கிடைத்ததால் முன்னர் அறிவித்தபடி வார இறுதியில் முடிவுகளை வெளியிட முடியாது போனதாகவும் -

பரீட்சை முடிவுகளை தயாரிக்கும் பணி தற்சமயம் நடைபெறுகின்றது என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த பரீட்சை முடிவுகளை பெரும்பாலும் மாத இறுதிக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-3)

## மன்னார் ஆயர் தலைமையில் வன்னிக்கு மருத்துவக் குழு

### உயிலங்குளம் ஊடாக இன்று பயணம்

கொழும்பு,ஏப்.24

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உள்ள சிறுவர் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு தடுப்பூசி போடுவதற்காக மன்னார் ஆயர் அதிவண.ராயப்பு யோசெப் தலைமையில் வைத்தியக்குழு ஒன்று இன்று அங்கு செல்கின்றது.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு உயிலங்குளம் ஊடாகச் செல்லும் பாதை தடைசெய்யப்பட்டதை அடுத்து விசேட அனுமதியுடன் அவ்வழியே அங்கு செல்லும் முதலாவது குழு இதுவாகும்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மன்னார் வைத்திய அதிகாரி மற்றும் தாதிகள் கொண்ட குழு ஒன்றும் ஆயருடன் செல்வதாகவும் -

அங்கு தடுப்பூசி ஏற்றும் பணி முடிவடைந்ததும் இன்று மாலையே அவர்கள் மன்னார் திரும்புவர் என்றும்- தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-164)

## வடமராட்சியில் போதைவஸ்துடன் சிப்பாய் கைது

நெல்லியடி,ஏப்.24

வடமராட்ச்சிப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் போதைவஸ்து வைத்திருந்த இரண்டு இராணுவத்தினர் இம்மாதம் 29ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி இராணுவ பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட இந்த இரண்டு சிப்பாய்களையும் பருத்தித்துறை பொலீஸார், பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் ஏ.கே. நடராசாவின் வாசஸ்தலத்தில் ஆஜர் செய்த சமயமே அவர்கள் இருவரையும் இம்மாதம் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-109)

யாழ்.பல்கலைக்கழகத்தில்

## வர்த்தக முகாமைத்துவத்துக்கு தனியான பீடம் நிறுவ அனுமதி

கொழும்பு,ஏப்.24

யாழ்.பல்கலைக்கழகத்தில் மற்றுமொரு புதிய பீடத்தை நிறுவ பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் நிலையியல் குழு நேற்று அனுமதி வழங்கியுள்ளது என்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

வர்த்தகத்துறை, முகாமைத்துவத் துறை என இரு துறைகளாகதற்போது இயங்கும் வர்த்தகமுகாமைத்துவத் துறையை பீடமாக இயங்கவைக்கவே அனுமதி கிடைத்துள்ளது என்றும் -

அடுத்த இரு மாதங்களில் இந்தப் பீடம் செயற்பட ஆரம்பிக்கும். என்றும்- அவர் தெரிவித்தார்.

தற்சமயம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நான்கு பீடங்கள் இயங்குகின்றன. இது ஐந்தாவது பீடமாக உருவாகின்றது.

(ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனில் ஆட்ஸ்

கலர் புகைப்படச் சுருள்கள் இம்மாதம் 26 ஆம் திகதி கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

உங்கள் கலர் புகைப்படங்களை நவீன முறையில் கழுவிப் பெற்றுக் கொள்ள

**சுனில் ஆட்ஸ்**

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/7294)


# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவன்
ராஜ்உமேஸ்
அவர்களின் அன்புச் சகோதரன்

## சிவராஜா ராஜ்மோகன்

அவர்கள் 22-04-99 இல் காலமானார். இந்நிகழ்வை யிட்டு துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின் றோம்.

நண்பர்கள்
யாழ். பல்கலைக்கழகம்.

(65124)

# மரண அறிவித்தல்கள்

## வயிரமுத்து நாகேந்திரம்

(கட்டுவன் வடலியடைப்பு)

பண்டத்தரிப்பு வடலியடைப்பைப் பிறப்பிடமாக வும் கட்டுவனை புகுந்த இடமாகவும் கொண்ட வயிர முத்து—நாகேந்திரம் 22-04-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடலி யடைப்பு வயிரமுத்து—சின்னம்மாவின் அருமை மக னும் கட்டுவன் முருகேசு பூரணம் ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற மகேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான நா. இலட்சுமி, வ கந்தையா, இ சிவக்கொழுந்து மற்றும் இ. அன்ன முத்து, மு. கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனு மாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது தற்போ தைய இல்லத்தில் 23-04-99 வெள்ளிக்கிழமை நடை பெற்று பூதவுடல் பண்டத்தரிப்பு விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. இராசசிங்கம்
(மைத்துனர்—கண்ணன்)
மு சரவணபவான்
(மருமகன்—ஆனந்தன்)

அரசடி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(65126)

திருமதி

## சிவநேசன் ஜெயலட்சுமி

(காரைநகர்)

காரைநகர் சந்தம்புளியடியைச் சேர்ந்தவரும் தற் போது அட்டகிரி வீதி, நவாலி வடக்கை வசிப்பிடமா கக் கொண்டவருமான திருமதி சிவநேசன் ஜெயலட் சுமி 21 – 04 – 1999 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவநேசனின் அருமை மனைவியும், காலஞ்சென்ற கிருஷ்ணசாமி — தெய்வநாயகி தம்பதி களின் மூத்த மகளும், காலஞ்சென்ற சிவசம்பு—பொன் னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சிவ குமார் மற்றும் சிவசீலன் (டென்மார்க்), சிவாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவபால னின் (பிரான்ஸ்) அன்பு மாமியாரும், சாதனாவின் அன்புப் பேர்த்தியும், கந்தராசா, பத்மநாதன் (சுவீடன்), யோகேஸ்வரி, சாந்தராணி (ஜெர்மனி), ஜெகதீஸ்வரி, சண்முகலிங்கம் (வவுனியா), விமல ராணி (வவுனியா) ஆகியோரின் சகோதரியும், திருமதி மகேஸ்வரி (மலேசியா), காலஞ்சென்ற சிவபாதம் (மலேசியா), சிவநாயகம் (மலேசியா), சிவராசா (இளைப்பாறிய மின்தொழில் உத்தியோகத்தர், காங் கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை), காலஞ் சென்ற சிவலிங்கம் (இளைப்பாறிய சுங்கத் திணைக் கள அதிகாரி) மற்றும் சிவராமன் ஆகியோரின் மைத் துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25-4-99) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு கல்கிசை மகிந்தா மலர்சாலையில் நடைபெற்று பூதவுடல் 9.30 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சிவராசா
சி. சிவராமன்
(மைத்துனர்)
கி. கந்தராசா
(சகோதரன்)

அட்டகிரி முருகன் கோயிலடி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(65127)

## பிரிவுபசார வைபவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

புத்தூர் மெதடிஸ்த தேவாலயத்தில் பல வருடங் களாக அருட்பணியாற்றிய சகோதரர் பென்பாவின் பணி யைக் கௌரவிக்கும் வகை யில் பிரிவுபசார வைபவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பரிபே துரு ஆலயத்தில் இடம் பெறும். (ஐ-7)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

யாழ். மாவட்டப் பாட சாலைகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி யில் இன்று காலை 8.00 மணி முதல் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடை பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு;-

★ 17 வயது — நெடுந்தீவு றோ. க. மகளிர் பாடசாலை எதிர் கம்பர்மலை அ. த. க. பாடசாலை

★ 19 வயது — நெடுந்தீவு றோ. க. மகளிர் பாடசாலை எதிர் சண்டிலிப்பாய் இந்து.

★ 15 வயது—சாவகச்சேரி டிறிபேக் எதிர் யாழ்ரன் கல் லூரி

★ 19 வயது—சாவகச்சேரி டிறிபேக் எதிர் கலாநிதி தியாகராசா ம. வி.

★ 17 வயது — சண்டிலிப் பாய் இந்து எதிர் யாழ். இந்து மகளிர் கல்லூரி

(உ-3)


**ராஜா**
யாழ்ப்பாணம்.
சூரியா - முரளி - ஜீவிதா
ரசிகா - மணிவண்ணன்
விவேக் - ராதிகா - நாஸர்
மற்றும் பலர் நடித்த
**காதலே நிம்மதி**
இன்று காட்சிகள்
10-30, 2-00, 5-00

**ராஜா 'B' திரை**
யாழ்ப்பாணம்.
ஒன்பதாவது நாளாக
ரஜனி - சிவாஜி
சௌந்தர்யா
மற்றும் பலர் நடித்த
**படையப்பா**
இன்று காட்சிகள்:
10-30, 2-30
(சி/7292)

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
இன்று
பிரபுதேவா - கயோல்
அரவிந்தசாமி நாஸர்
நடித்த
**மின்சாரக் கனவு**
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)
(65125)

**லிபேட்டி**
தியேட்டர்
அச்சுவேலி
இன்று 9-00 A.M.
ரஜனி - சௌந்தர்யா
**படையப்பா**
12-00 P.M., 3-00 P.M.
விஜயகாந், சூர்யா
**பெரியண்ணா**
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(64976)


## யோகர் சுவாமி வழிபாடு

யோகர் சுவாமிகளின் ஆயி லிய நட்சத்திரப் பூசை மற் றும் ஆராதனை வழிபாடுகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்புத்துறையில் உள்ள சுவாமிகளின் சமாதிக் கோயி லில் நடைபெறும்.

நல்லூர் தேரடி அறுபத்து மூவர் குருபூசை மடத்திலும் இன்று காலை 10.00 மணி முதல் விசேட பூசை, கூட்டுப் பிரார்த்தனை ஆகியன இடம் பெறும். (க-30)

## ரூபவாஹினியில் பேட்டி

தமிழீழ விடுதலை இயக் கத்தின் முதல்வரும், சட்டத் தரணியுமான என். சிறீகாந் தாவின் அரசியற் பேட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையின் நேரடி ஒளிபரப்பில் இடம் பெறவுள்ளது.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

யாழ். ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியத்தில் வாராந்த கருத் தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு ஒன்றிய பணிமனை யில் ப. குகராஜா தலைமை யில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'இந்து சமயமும் சமூகமும்' என்னும் பொருளில் யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை யைச் சேர்ந்த திருமதி கலை வாணி இராமநாதன் கருத் துரை வழங்குவார். (உ-5)

## சமயச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி ஆல யத்தின் வருடாந்த மகோற் சவத்தை முன்னிட்டு ஸ்ரீ சண் முகானந்த சபையால் நடத் தப்பட்டு வரும் சமயச் சொற் பொழிவில் இன்று சனிக் கிழமை 'மனத்தினால் முயன்ற கோயில்' என்னும் தலைப்பில் செஞ்சொற் கொண்டல் ஆறு. திருமுருகன் சொற்பொழிவாற்றுவார். (க)

# வெள்ளி விழா வாழ்த்து

குருத்துவப் பணி வாழ்வில்
வெள்ளி விழாக் காணும்

அருள் கலாநிதி
**யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம்**
அடிகளார்

பொன் விழாவையும் கண்டு பூரிப்படைய ஆசிப்ப தோடு, இடம்பெயர்வின் போது

**எம் பங்கில் ஆற்றிய இறை பணிகளை**

இன்றைய வெள்ளி விழா தினத்தில் நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்தி இறை ஆசி வேண்டி நிற்கின்றோம்.

கரவை
பங்குத் தந்தையும் பங்கு மக்களும்
கரவெட்டி.

(சி/7296)

# மரண அறிவித்தல்

## சின்னப்பு நவரத்தினம்

காரைநகர் மல்லிகையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பு முத்துமாரி அம்மன் வீதியை வதிவிட மாகவும் கொண்ட இளைப்பாறிய யாழ்ரன் கல்லூரி ஆசிரியர் சின்னப்பு — நவரத்தினம் 22-04-99 அன்று நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு- செல்லாட்சிப் பிள்ளையின் அன்புப் புதல்வரும் தனபாக்கியத்தின் அன்புக் கணவரும் பாக்கியராசா (ஓய்வுபெற்ற ஆசி ரியர்), ஸ்ரீகரலட்சுமி, தர்மராசா (M.G.R.), சாரதா (பரிஸ்) (முன்னாள் கட்டடப்பொருள் கூட்டுத்தாபன முகாமையாளர்), லலிதா, கோசனதை (சுவிஸ்), நிர் மலாதேவி, அரிகரராசா (பரிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகபூசணி (ஆசிரியை), குலசேகரம் (ஓய்வு பெற்ற கட்டட மேற்பார்வையாளர்), சுந்தராம்பாள், கனகசுந்தரம் (கட்டட மேற்பார்வையாளர்), நட ராசா (சுவிஸ்), பாலசுப்பிரமணியம், சிவமலர் (பரிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர் களான சுப்பையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சௌந் தரம் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, பரமசாமி, பரஞ் சோதி, மகாலிங்கசூரியர், நாகபூஷணி, நாகேஸ்வரி ஆகியோரினதும் நமசிவாயம், சிவசோதி, திலகவதி, கமலாதேவி ஆகியோரினதும் அன்பு மைத்துனரும் செல்வரட்ணம் (முன்னாள் S.K. பலநோக்கு கூட்டுற வுச் சங்கம், காரைநகர்) அவர்களின் சிறிய தந்தை யும் சுகிர்தராஜா (பரிஸ்), சற்குணராஜா (பரிஸ்), விமலராஜா (U.K), சிறிகுலராஜா (கனடா), கோபி ராஜ், பத்மஜா, கோபிரஞ்சன், பிரணவராஜ், தேவ ஜெனா, தேவரஜனி, தேவரஜீவ், தேவசஞ்சீவ், ஜனனி, ரேவதி, காயத்திரி, கௌரி, குகன், அபிநஜனி ஆகி யோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25-04-99) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு இல. 23, முத்து மாரியம்மன் வீதி, நீர்கொழும்பு இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் நீர்கொழும்பு பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
சு. செல்வரட்ணம்,
மனைவி, மக்கள், மருமக்கள்.

இடைப்பிட்டி, காரைநகர்.
T. P: 031-32389

[65128]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்திரு.

# கலாநிதி ஜஸ்ரின்பேனாட் ஞானப்பிரகாசம் அடிகளாரின் 25 ஆவது குருத்துவ வெள்ளிவிழா சிறப்பிதழ்

**24 - 04 - 1999**

## Message from the Emeritus Bishop of Jaffna

I am very happy to be associated with the Jubilee observance of Revd. Fr. Justin Gnanapragasam I have watched with interest his work at St. Henry's and I wish to congratulate him for the phenominal success of the school under his leadership.

I offer him my best wishes and prayers and blessings for the occasion and pray to God that he may continue to spend himself totally for the growth of the Kingdom of God.

**Rt. Revd. Dr B. Deogupillai,**
Emeritus Bishop of Jaffna

## யாழ். ஆயரின் ஆசிச் செய்தி

கடந்த இருபத்தைந்து ஆண்டுகள் எமது மறை மாவட்டத்தில் பல்வேறு பங்குத்தளங்களில் அருள் திரு. ஜஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆற்றிய அருள் பணிக்கு இறைவனுக்கு நன்றி சொல்கிறேன். இவரது ஆளுமையையும், தலைமைத்துவ பண்பையும் அறிவுத் திறனையும், தன்னலம் கருதாத இறை அன்புக்காகவும் மக்களின் நலனுக்காக அர்ப்பணத்தோடு ஆற்றியதையும் பெருமிதத்தோடு குறிப்பிட விரும்புகின்றேன்.

இக் கொடூரயுத்தத்தால் இடம்பெயர்ந்த புனித ஹென்றியரசர் கல்லூரியை மானிப்பாயில் தற்காலிக பாடசாலையாக நடத்தியதோடு மீண்டும் கொண்டுவர அரும்பாடு பட்டதையும் நினைவு கொள்கிறேன். இறையாசியை வேண்டி உங்கள் மகிழ்ச்சியில் இணைகிறேன்.

இறைபணியில் இணையும் உங்கள் ஆயர்
**பேரருள் திரு. தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ் ஆயர்

## திருச்சபைக்கு பெருமைசேர்த்தவர்

வண. பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரின் குருத்துவப் பணி நிறைவின் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவினை அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நான் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபராக இருந்தவேளை அவரை அதிபர் கூட்டங்களில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரின் அமைதியான சுபாவம், கடமை, கண்ணியம் என்பன என்னை மிகவும் கவர்ந்தது.

அடிகளாரின் முதுமாணி ஆய்வு, கலாநிதிப் பட்ட ஆய்வும், அவற்றின் பரந்த மனப்பாங்கு திருச்சபை ஒருமைப்பாட்டு உணர்வுகள் என்பவற்றைக் கல்வி உலகுடன் இணைத்துக்காட்டுவதாக விளங்குகின்றன. பதற்றம் எதுவுமின்றி நிதானத்துடன் கருத்துக்களை முன்வைக்கும் வல்லாளனாகிய அதிபர் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராகவும் செயலாற்றி வருகின்றார். இந்தக் கல்விமான் இதுவரை எங்கே இருந்தார் என்று எண்ணும்படியாக அவர் முடிவுகள் பல்கலைக்கழகப் பேரவையில் அமைந்திருந்தன.

என்சார்பாக எனது மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துவதோடு அவர் நீடூழி வாழ்ந்து தனது பெற்றோர், உற்றார், உறவினர், குடும்பத்தவர் யாவருக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக திருச்சபைக்கும் பெருமை தேடித்தர வேண்டுமென்று அப்பன் யேசுவின் நாமத்தினால் இறைவனை வேண்டுகின்றேன்.


அதிவந்தனைக்குரிய
**கலாநிதி எஸ். ஜெபநேசன்,** பேராயர்
தென் இந்தியத் திருச்சபை (யாழ்ப்பாணம்)

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

யாழ். புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபரும், வணக்கத்துக்குரிய பிதாவுமான ஜ. பே. ஞானப்பிரகாசம் அடிகளாரின் குருத்துவப் பணியில் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை நினைவு கூரும் முகமாக வெள்ளி விழா கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அடிகளார் அவர்கள் 25 வருடங்கள் குருத்துவப் பணி மூலமாக மக்களை ஆன்மீகப் பாதையிலும் இட்டுச் சென்ற பெருமைக்கு உரியவர் நல்லதொரு குருவாகவும் அதிபராகவும் இருந்து 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற வாக்கிற்கு இணங்கக் கல்விப் பணியையும் சமயப்பணியையும் ஒருங்கே ஆற்றி வருகின்றமை குறிப்பிடக் கூடியதாகும்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்**
நல்லை ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானம்



## வெள்ளிவிழாவில் பா மல்லிகைப் பந்தல்

திருமகனார் ஜஸ்ரின் எனும் செயல்வீரன்;
சீர் சிறந்த
குருமகனார்; கல்லூரிக் கோபுரமாய்ப்
போற்றிடுமோர்
பெருமகனார்; மனுவேந்தன் பீடத்தில்
கண்டமணி;
ஒருமகனார் அன்புதயை ஒழுக்கநெறி
ஆசிரியன்
மலையின் விளக்கெனவே மங்காது கல்லூரி
நிலையாக வாழுவதற்கு நேரமொன்று
வந்துவிடும்
அலைகள் அடித்தாலும் அடிகளார் ஜஸ்ரின்
எனும்
சிலைகள் எம்நெஞ்சினிலே செதுக்கி
மினுக்கிடுவோம்!

**கவிமணி — அமுது**
அன்பரங்கம், லண்டன்.

## மன்னார் ஆயரின் மனம் நிறைந்த வாழ்த்து

குருத்துவ வாழ்வில் கால் நூற்றாண்டை நிறைவு செய்யும் அருட்திரு. ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளார் எனக்கு நன்கு அறிமுகமானவர். இம் மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியிலே அடிகளாரை வாழ்த்துவதில் பேருவகை அடைகிறேன்.

வெளிநாட்டில் சொகுசான வாழ்க்கை வாழக்கூடிய வசதி வாய்ப்புக்கள் இருந்தும் அவற்றை எல்லாம் தேடி ஓடாது, தம் மண்ணில் பணி செய்ய வேண்டுமென்ற தாகத்தோடு இவர் தாயக மண்ணில் பணி புரிந்து வருகிறார் இவர் ஆற்றிவரும் கல்விப்பணி மகத்தானது.

இவருடைய யூபிலி விழா சிறப்புறவும், இவர் உடல், உள, ஆத்மீக வளம் பெற்று இன்னும் பல்லாண்டுகள் மகிழ்ச்சியுடன் பணியாற்றவும் இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

கிறிஸ்துவின் பணியில்
**பேரருள் திரு இரா. யோசவ்**
மன்னார் ஆயர்

## கல்விப்பணிப்பாளரின் வாழ்த்து மடல்

குருத்துவப் பணியில இருபத்தைந்து ஆண்டுகள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது போலவே கல்லூரி வளர்ச்சியிலும் இருபத்தைந்தாண்டுகள் தனது சேவையைத் தொடருகின்ற அடிகளார் கல்விப்பணியும், சமயப்பணியும் தனது இரு கண்களாகக் கொண்டவர்.

கல்வி, சீரியசமய ஒழுக்கக் கட்டுப்பாடு என்பவற்றுடன் மாணவர்கள் முழுமைபெற உழைக்கும் பெருமைக்குரியவர், அடிகளாரது விடா முயற்சி, செயல்திறன், பரந்த நோக்கு என்பன அவரது பணிக்கு மெருகூட்டுகின்றன. இவரது சமய, சமூக, கல்வித்துறைச் சேவைகள் மேன்மேலும் பல்கிப் பெருக — உடல், உளப்பலம் நிறைந்து விளங்க — இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**வி. இராசையா**
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் வலயம்
மருதனார்மடம் சுன்னாகம்.

## MESSAGE OF FELICITATION

It is with great pleasure that I am able to give this message on the occasion of the Silver Jubilee of priesthood of Revd. Fr. Justin Gnanapragasam. Rector of St. Henry's College, Ilavalai. I had known him from his childhood days and accompanied him in his journey through life upto the present moment of his 25th year of priesthood.

I do join him his beloved members of his family, his friends, the ataff and students of St. Henry's College, in thanking the Lord for the great gift of priesthood and for all graces and blessings showered on him, enabling him to be a 'good and faithful steward'.

His simplicity of life and a spirit of compliance with God's will expressed through his superiors and a deep-seated love for generations of God's children are a clear expression of his faith and dedication to his priestly calling.

I wish Fr. Justin many more years of selfless service to God and His people.

**Rt. Revd. Dr. J. Kingsly Swampillai**
Bishop of Trincomalee Batticaloa.

## Message from the Vice Chancellor

It is a great pleasure and privilege to send a message on the Silver Jubilee Year of the Priesthood of Revd. Fr Justin Gnanapragasam Principal, St. Henry's College, Ilavalai and Council Member ot the University of Jaffna. I had known him for many years, but during the last three years he has been workIng' Closely in association with me in the University Council. He is a very respected Clergy well-versed in Theological Educational and Higher Educational matters. He is a scholar and endowed with administrative Capabilities. He was a good Sportsman, trainer and manager. I am happy to say that Revd Fr Gnanapragasam is contributing significantly in the University Council deliberations.

After his education in Sri Lanka, he studied his M A in the University of Hull and Ph.D. in the University of Southampton. His postgraduate studies abroad gave him an enlighten outlook in social, economical and political matters. He is one of the priests who possesses dual characteristics of a clergy and an academician. As a priest and a teacher, he is very popular among the Tamil community - Christian as well as Hindus He is constructive social worker without much publi city.

I wish his dedicated services will continue in the fields of education, religious activities and social areas. I pray the Almighty will shower upon him a healthy and long productive life.

**Prof. P. Balasundarampillai,**
Vice Chancellor,
University of Jaffna

## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

யாழ். புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் குருத்துவப் பணி நிறைவின் வெள்ளிவிழாக் காணும் பாக்கியம் பெற்றுள்ளமை எனது மனதில் மட்டற்ற மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கின்றது.

கல்விமான் என்ற ரீதியில் என்னுடன் தொடர்பு கொள்ளத் தொடங்கிய அதிபர் இன்று என் மனதில் நீங்காத இடம்பிடித்துக் கொண்டார். அவருடைய தோற்றப் பார்வை குரல் என்பவற்றுடன் அவரது ஆற்றல், அறிவு அனுபவம், ஒழுக்கம், செயல் யாவுமே உன்னதமாக விளங்குகின்றன. இவை யாவும் இறைவனால் வழங்கப்பட்ட பெரும் கொடைகளே.

தன்னம்பிக்கை, தற்துணிவு என்பவற்றுடன் கூடியவரான அதிபர் பல இடர்பாடுகள், இடிபாடுகள், அவலங்கள் என்பவற்றின் மத்தியிலும் புனித ஹென்றியரசர் கல்லூரியை நிர்வகித்து வருகிறார். இத்தகைய பெருமைக்குரியவராகிய அருட்திரு. கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளார் மேலும் தனது திருப்பணியில் சிறப்புற்று வளர வாழ்த்துகின்றேன்.

**க. கந்தசாமி,**
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவலைகள்



உதிப்பு 20 – 11 – 1926

உதிர்வு 26 – 03 – 1999

## திருமதி யோசப் மாகிரேட்

(முத்தம்மா)

அன்னாரின் ஆத்மசாந்தி வழிபாடு இன்று (24-4-99) சனிக்கிழமை காலை 9-45 மணிக்கு முகமாலை புனித ஆரோக்கிய மாதா தேவாலயத்தில் நடைபெறும். நாளை (25-4-99) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

முகமாலை,
எழுதுமட்டுவாழ்.

(சி/7280)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா முத்துக்குமாரசாமி

(முன்னாள் மதுவரி அத்தியட்சகர்)

வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா முத்துக்குமாரசாமி 22-04-99 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சுகிர்தலக்ஷ்மியின் (மணி) அன்புக் கணவரும் சுகுமாரன் (லண்டன்), கௌரி சிவசுப்பிரமணியம் (கனடா), ஜெயசிறி நவரட்ணம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
சுகிர்தலக்ஷ்மி (மணி)
(மனைவி)

"சௌரி வாசா"
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

[65106)

## காசித்தம்பி கனகரத்தினம்

(தோட்டக் கணக்கர், நவுண்டான் - பளை)

விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும், பளையை வசிப்பிடமாகவுங்கொண்ட காசித்தம்பி கனகரத்தினம் 22– 04 1999 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கமுத்து, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாலிங்கம் [பாங்கொக முன்னாள் சிறாப்பர், சுங்கத் திணைக்களம், கொழும்பு], கமல ரபிகை [முன்னாள் உப தபாலதிபர் விடத்தற்பளை] சிவ பாக்கியம் [ஓமான், முன்னாள் பருந்தாளர், கொழும்பு], தங்கேஸ்வரி [கனடா, ஓய்வு பெற்ற வருமானவரி உத்தியோகத்தர்], ஞானேஸ்வரி [எழுதுவினைஞர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்], சாந்த நாயகி [கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர், சாவகச்சேரி] சச்சிதானந்தசிவம் [சுவிஸ்], விஜயகுமாரி [கனடா. முன்னாள் ஆசிரியர் முழங்காவில் மகாவித்தியாலயம்], காசிநாதன் [இத்தாலி], ருக்மணி [சுகிர்தா — கனடா] ஆகியோரின் அன்புத்தந்தையாரும், மலர் [இந்தியா, ஓய்வு பெற்ற பிரசும எழுதுநர், பிரதேச செயலகம், பளை], குணரத்தினம் [ஓய்வு பெற்ற உப தபாலதிபர், கனகராயன் குளம்], கதிர்காமநாதன் [கனடா], நவயேசுராஜா மீன்பிடித் திணைக்களம், யாழ்ப்பாணம்], தயாபரி [சுவிஸ்] சிவானந்தம் [கனடா], பாலசுப்பிரமணியம் [நவம்–கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், குணறூபன் [எழுதுநர், பிரதேச சபை பளை], சாந்தீபன் [லண்டன்] குணதர்சனா, அகல்யா [இந்தியா], குணவித்தியா [மாணவி பளை மத்திய கல்லூரி], நக்கீரன் [மாணவன், அமிர்தாம்பிகை வித்தியாலயம், நுணாவில்], கனடாவில் வசிக்கும் நிருத்திகா, நிருபிகா, அபிசாந், அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 23-04-99 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
சி குணரத்தினம்
[மருமகன்]

ஸ்ரேசன் றோட்,
பளை.

(65111)

## சைக்கிள்கள் திருட்டு

அரியாலை, ஏப்ரல் 24

கச்சேரி கிழக்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அடுத்தடுத்து இரு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், மறு நாள் சனிக்கிழமையும் வீட்டு முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்களே திருடப்பட்டன.

இதேசமயம் — அரியாலை, கொழும்புத்துறை, சுண்டிக்குளி பகுதியிலும் ஆள்கள் இல்லாத வீடுகளுக்குள் திருடர்கள் புகுந்து ஓடுகள் மற்றும் பொருள்களை களவாடிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)

## அணை அமைக்கும் வேலை தொடங்கும்

தென்மராட்சி, ஏப்ரல்24

கடந்த வருடம் பெய்த கடும் மழை வெள்ளம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த கைதடி நுணாவில் உவர் நீர் தடுப்பு அணை அமைக்கும் வேலைகள் மீண்டும் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதராலயத்தினால் இந்தத் தடுப்பு அணை அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

(ஐ-117)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு உரும்பிராயிலுள்ள வயாவிளான் ம.ம. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

(ஐ-ரி-30)

## தவறவிட்ட தங்க நகை

கோப்பாய், ஏப்ரல் 24

கோப்பாய்ச் சந்திக்கு அண்மையில் மானிப்பாய் வீதியில் இம்மாதம் முதலாம் திகதி தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டு கோப்பாய் தெற்கு கிராம அலுவலர் கிதயாபரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு கிராம அலுவலர் கேட்டுள்ளார்.

(ஐ-72)

## சமுர்த்தி முத்திரைக்கு உலர் உணவு

தென்மராட்சி ஏப்ரல் 24

தென்மராட்சி பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரண முத்திரைக்கான உலர் உணவுப் பொருள்கள் அந்தந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ 117]

## பஸ் சேவையை நீடிக்கக் கோரிக்கை

அளவெட்டி, ஏப்ரல் 24

காங்கேசன்சாலை வழியாக மல்லாகம், அளவெட்டி ஊடாக இளவாலைக்குச் செல்லும் 769 இலக்க பஸ் சேவையை தொடர்ந்து முழு நாள் சேவையாக மாற்றுமாறு இப்பகுதி மக்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காலை இளவாலையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் இ. போ. ச. பஸ்வண்டி மீண்டும் ஒருமுறை இளவாலைக்குச் சென்று திரும்பி வருவதுடன் தனது சேவையை இடை நிறுத்தி விடுகின்றது.

(ஐ-13)


# GLOBAL COMMUNICATIONS
## குளோபல் தொலைத் தொடர்பு சேவை

8-4-99 இல் கொடிகாமத்தில் தொலைத் தொடர்பு சேவையை ஆரம்பித்த எமது நிறுவனம் தற்போது வாடிக்கையாளர்களுக்கு இலவச இரவு தங்குமிட வசதிகளையும் வழங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

POINTPEDRO ROAD,
KODIKAMAM.
Te.l 070 - 21 - 2437

(65114)

# புதிய தொகுதி டிஷ்அன்டெனாக்கள் விற்பனைக்கு உண்டு

அமெரிக்க, கொரிய தயாரிப்புகளான Eurostar, Alfagold, மற்றும் Samsung டிஷ்அன்டெனா செற்கள் விற்பனைக்கு உண்டு.

Receiver, LNB, Feed Horn
போன்றவையும் தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
Audio CD கள் மலிவு விற்பனையில் (ரூ 400 – 550)

Audio CD Set up கள்
AK 25 (1000 w)
GRX 7 (1500 w)

புதிய தொகுதி
Euromind Active Antenna க்கள்
விற்பனைக்கு உண்டு

அருண் வீடியோ மூவி
பிரதான வீதி,
நெல்லியடி.

(65117)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## வேலுப்பிள்ளை பொன்னையா

[ஓய்வுபெற்ற அதிபர்]

தாயின் மடியில் 03-11-1925

இறைவன் அடியில் 25-03-1999

எமது அன்புத் தெய்வத்தின் மறைவின் போது அஞ்சலி, அனுதாபங்கள் தெரிவித்தவர்கள், வேண்டிய உதவிகள் செய்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (24—04—99) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி,
குடும்பத்தினர்.

"ஜயபதி",
கல்வயல்,
சாவகச்சேரி.

(சி/7287)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

பெறுமதியற்ற பொருள்களைப் பொது மக்கள் மீது கட்டியடிக்கும் விடயத்தில் நடைபாதை வியாபாரிகள் பெரும் சூரப்புலிகள் என்று பெயரெடுத்தவர்கள். எத்தனுக்கும் எத்தன் இருக்கின்றானல்லவா? அது பற்றிய சுவையான தகவல் இது.

கடந்த புத்தாண்டு தினம். காலை 10 மணி. சாவகச்சேரி நகரப் பகுதி புத்தாண்டு தினம் என்பதால் காலையில் வருபவர்கள் மீது கட்டியடிப்பதற்காக சில வியாபாரிகள் காத்திருந்தனர். இளைஞர் ஒருவர் வந்தார். தமிழ் இயக்கம் ஒன்றின் அடையாள அட்டையை அவர் வைத்திருந்தார். கே. ரமேஷ் என்ற பெயரும், இயக்கத்தின் இலக்கம் 2001 என்றும், இயக்கத்தின் பெயரும் அதில் தெளிவாக எழுதப்பட்டிருந்தன. அந்த அடையாள அட்டையை அந்த இளைஞர் வியாபாரிகளிடம் காட்டினார். பின்னால் வாகனத்தில் தமது இயக்கத்தின் ஏனைய உறுப்பினர்கள் பணத்துடன் வருவதாகத் தெரிவித்து சுமார் 18 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு சாரம், சேர்ட், உடுபுடைவைகள் என்பவற்றை வாங்கினார்.

புதுவருட நாள் வியாபாரத்திற்காகத் திறந்திருந்த உணவுக்கடைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றையும் கூட அந்த இளைஞன் விட்டுவைக்கவில்லை.

உடுபுடைவையிலிருந்து, இறைச்சி, உணவுப் பொருள்கள் வரை சுருட்டிக் கொண்டு மாயமாய் மறைந்து விட்டான் இளைஞன்.

புதுவருட வேளை — நான் வியாபாரத்தின் போது பறிகொடுத்த பொருள்களுக்கு உரிய பணத்தை யாரிடம் அறவிடுவது, யாருடன் போய் முட்டி மோதுவது என்று தெரியாமல் முழித்துக் கொண்டு இருக்கின்றார்கள் வியாபாரிகள்.

ஏனைய வியாபாரிகளுக்கு இது ஓர் எச்சரிக்கைத் தகவல். உஷாராக இருங்கள்!

★ ★ ★ ★ ★

ஆஸ்பத்திரி சிற்றூழியர் ஒருவர் நேரில் உதயன்—சஞ்சீவி அலுவலகத்துக்கு வந்து தெரிவித்த முறைப்பாடு இது.

''1997 மார்ச் மாதம் நாம் எழுபது பேர் ஆஸ்பத்திரிச் சிற்றூழியர்களாகச் சேர்க்கப்பட்டோம். இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் எமது உரிமைகள் — ஏன் சாதாரணமாக வழங்கப்படவேண்டிய சாதாரண விடுமுறையைக்கூட — தருகின்றார்கள் இல்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால் 'நீங்கள் இன்னும் அமையத் தொழிலாளியாகத்தான் இருக்கின்றீர்கள். உங்களுக்கு விடுமுறை தரமாட்டோம்' என்று நிர்வாகத் தரப்பில் கூறப்படுகின்றது. இது என்ன நியாயம்?''—என்று அந்த ஊழியர் கேட்கிறார்.

இது விடயத்தில் நிர்வாகத் தரப்பிலும் ஏதேனும் நியாயம் இருக்கக்கூடும். தந்தால் பிரசுரித்து நிலையைத் தெளிவுபடுத்தலாம். இல்லாவிட்டால் தொழிலாளர்களுக்கு உரியதை வழங்கி அவர்களின் ஆதங்கத்தைத் தீர்த்து வைப்பதே நியாயம்.

★ ★ ★ ★ ★

அவர் ஓர் ஆசிரியர் Cum அதிபர்.

இதற்கு முன்னர் வங்கி ஊழியர், கிராம சேவையாளர் என பல பதவிகளில் இடறுப்பட்டு, குழம்பி ஆசிரிய சேவைக்கு வந்து, பல 'சைட் பிஸ்னஸ்'களும் செய்து பலருக்குத் 'தண்ணி' காட்டிக் கொண்டிருப்பவர்.

சலசலப்பு உண்டாக்கிய கல்விப் பணிப்பாளர் ஒருவர் கதிரையை அலங்கரித்த போது — அதிபர் தரம் உடைய பலர் பாடசாலைகள் இன்றி ஆசிரியராகப் பணி புரிந்து கொண்டிருக்க — தரம் ஏதும் இல்லாத இந்த ஆசிரியர் அதிபரானார். கல்வி உலகம் மூக்கில் விரலை வைத்தது!

அதிகாரிகள் கதிரையில் மாற்றம் வந்தது. புதிய கல்விப் பணிப்பாளர் வந்தார். நிலைமையை ஆராய்ந்தார்; தில்லுமுல்லு வெளிப்பட்டது. அந்த ஆசிரியர் Cum அதிபர், மீண்டும் அதிபர் Cum ஆசிரியரானார்;

மீண்டும் அதிகாரிகளில் மாற்றம். நிலைமையை நேர்சீராக்கிய கல்விப் பணிப்பாளர் ஒய்வு பெற்றார்; புதிய வலயங்கள் பிறந்தன.

இடமாற்றம் பெற்றுக் கொண்ட சம்பந்தப்பட்ட அதிபர், மீண்டும் — தரமின்றியே — ஆசிரியர் Cum அதிபரானார்.

இவ்வளவும் யாழ். கல்விப் பகுதியிலே அடிக்கடி நடக்கும் சம்பவங்கள்தான். இதற்குப் பின்னர் நடந்ததுதான் யாழ். கல்விச் சமூகத்தையே துணுக்குற வைத்திருக்கின்றது.

சம்பந்தப்பட்ட — ஒய்வுபெற்ற— கல்விப் பணிப்பாளர் நேற்று முன்தினம் முற்பகல் தானுண்டு, தன்பாடு உண்டு என யாழ். பிறவுண் வீதியில் வந்து கொண்டிருந்தார்.

அதே சமயம் மோட்டார் சைக்கிளில் அவ்வழியே வந்து கொண்டிருந்த ஆசிரியர் Cum அதிபரின் கண்ணில் அவர் பட்டுவிட்டார். அவ்வளவுதான்!

அதிபரின் பார்வையில் சம்பந்தப்பட்ட ஒய்வு பெற்ற அதிகாரிக்கு ஏழரைச் சனியின் பார்வை விழுந்து விட்டது.

மோட்டார் சைக்கிளை நிறுத்திய அதிபர், பாய்ந்து ஒய்வு பெற்ற கல்விப் பணிப்பாளரைத் தாக்கினார்; சைக்கிளிலிருந்து நிலை குலைந்த அவர் கீழே விழுந்தார்.

இதுவரை ஆருடத்தால் ஆள்களை விழுத்தியவர் இப்போது நேரடியாகவே அதிகாரியைப் புரட்டினார்.

இவ்வளவும் இரண்டு கிராம சேவையாளர்கள், அப்பகுதியில் உள்ள தையற் கடையில் பணியாற்றிக் கொண்டிருந்த பல பெண் ஊழியர்கள் ஆகியோர் முன்னிலையில் கணப்பொழுதில் நடந்து முடிந்தன. என்ன நடக்கின்றது என்று புரியாமல் முழித்துக் கொண்டிருந்த கிராம சேவையாளர்கள் சுதாரித்துக் கொண்டு பாய்ந்து சென்று ஒய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் மேலும் தாக்கப்படாமல் காப்பாற்றினர்.

சில கல்வி அதிகாரிகள் கொடுக்கும் முண்டில் எழுந்து நின்று ஆடும் இத்தகைய அதிபர்கள், ஆசிரிய சேவைக்கே இழுக்கானவர்கள். இனிமேலும் இத்தகையோரைத் தாங்கிப் பிடிப்பது கல்வி அதிகாரிகளுக்கு அழகல்ல. வியாழனன்று நடந்த சம்பவம், இப்போது கதிரையை அலங்கரிக்கும் அதிகாரிகளுக்கும் நாளை நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஆகவே இந்த விடயத்தில் உடன் நடவடிக்கை தேவை. உங்கள் நடவடிக்கை என்ன என்பதை அறியக் கல்வி உலகம் காத்திருக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சாட்சியங்கள் தேவைப்பட்டால் ஆஜர் செய்ய ''உதயன்'', ''சஞ்சீவி'' தயாராக இருக்கின்றது.

''வீதியில் நடந்த சம்பவத்துக்கு நாம் என்ன செய்வது? தேவையானால் நீங்களே பொலீஸுக்குப் போங்கள்'' என்று கூறி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஜாகா வாங்கலாம்.

அது சரி, அப்படியானால் வீதியில் அதிகாரிகளைத் தாக்கும் வன்முறையியலுக்கு பின்கதவால் கொடுத்த அதிபர் பதவியையாவது அவரது 'நன்னடத்தை' (?) கருதி வாபஸ் பெறலாமல்லவா?

— மின்னல்

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

அரியாலை, ஏப்ரல் 24

யாழ். பிரதம தபாலக விளையாட்டுக்கழகம் கிரிக்கெட்சுற்றுப்போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

11 ஓவர்கள் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட இந்த மென்பந்து சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 30 ஆம் திகதியும், மே முதலாம் 2 ஆம் திகதிகளிலும் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் ஆகியவற்றின் மைதானங்களில் நடைபெறவுள்ளன.

(ஐ-17)

## கிராம அபிவிருத்திச் சங்கம்

வேலணை, ஏப்ரல் 24

மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் வேலணை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் ஒழுங்கு செய்யப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட வேலணை பிரதேச செயலர் செ. இரத்தினம் மேற்படி சங்கத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இச்சங்கத்தின் புதிய தலைவராக சி. சிறிபத்மநாதன், செயலாளராக ச. தர்மசகாயம்பிள்ளை, பொருளாளராக செ. ஜெயதாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் த. தெட்சணாமூர்த்தி, மண்டைதீவு கிராம அலுவலர் மற்றும் கடற்படை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மண்டைதீவில் தற்பொழுது வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளான போக்குவரத்து, மருத்துவ வசதியின்மை, குடிதண்ணீர் தட்டுப்பாடு போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன.

(ஐ-167)

# குடாநாட்டில் 960 ஹெக்டேயரில் இம்முறை சிறுதானியச் செய்கை

## தற்போதைய மழை விளைச்சலைக் கூட்டும்

அரியாலை, ஏப்ரல் 24

யாழ். மாவட்டத்தில் இம்முறை 960 ஹெக்டேயர் நிலப் பரப்பில் சிறுதானியப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

பெரும்போக நெல் லறுவடை முடிந்ததும் வயல் நிலங்களில சிறுதானியப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

150 ஹெக்டேயர் நிலப் பரப்பில் கௌபியும் —,

130 ஹெக்டேயர் நிலப் பரப்பில் பயறும் —,

680 ஹெக்டேயர் நிலப் பரப்பில் எள்ளும் —

விதைக்கப்பட்டுள்ளன.

விதைக்கப்பட்ட சிறுதானியப் பயிர்கள் நல்ல நிலையில் இருப்பதாகவும் —

தற்போது பெய்துள்ள மழையினால் சிறுதானியச் செய்கையின் விளைச்சல் அதிக லாபத்தை ஈட்டிக் கொடுக்கலாம் எனவும் —

விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-17)

## மீனுக்குத் தட்டுப்பாடு

நயினாதீவில் மீனுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. பிடிக்கப்படும் மீன்கள் விற்பனைக்காக யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்படுவதால் அங்கு மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-167)

## உப்பு விநியோகம்

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் அயடீன் கலந்த உப்பு போதியளவு விற்பனைக்குள்ளது. ஒரு கிலோ அளவுள்ள பைக்கட்டுகளில் [illegible] 12 ரூபா [illegible] விநியோகிக்கப்படுகின்றது.

(ஐ-154)

## வலிகாமம் வலயத்தில்

# பாடரீதியாகத் தனியான உதவிப் பணிப்பாளர்கள்

வலி. வடக்கு ஏப்ரல் 24

வலிகாமம் கல்வி வலயத்தில் பாட ரீதியாக ஆறு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பாட ரீதியான அபிவிருத்திகளைக் கணிப்பீடு செய்து மேற் பார்வை செய்வதற்கு வசதியாக இந்த நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன —

வலய கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையைத் தொடர்ந்து நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ், ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம் ஆங்கிலம், சமயம், முறைசாராக் கல்வி ஆகியவற்றிற்கே நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே உடற்கல்விக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ஐ-86)

## குடாநாட்டில்

# காணாமற்போனோர் பற்றி கொழும்பிலும் விசாரணை

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பாக கொழும்பில் எதிர்வரும் 28 ஆம் திகதி தனது விசாரணைகளை நடத்தவுள்ளது.

இந்த ஆணைக்குழு கடந்த மாதம் 13 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தனது விசாரணைகளை மேற்கொண்டது. எனினும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்த அனைவரும் விசாரணைகளின் போது சாட்சியமளிக்கவில்லை. எனவே முறைப்பாடு செய்தவர்களில் இடம் பெயர்ந்து வாழ்பவர்ள் தமது இருப்பிடங்களைத் தெரிவித்தால் அப் பிரதேசங்களில் விசாரணைகளை நடத்த முடியும் என்று ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

இதனை அடுத்து கொழும்பில் வசிக்கும் 5 முறைப்பாட்டாளர்களின் முறைப்பாடுகளை ஆணைக்குழு எதிர்வரும் 28 ஆம் திகதி விசாரணை செய்யவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எம். சி. எம். இக்பால் தெரிவித்துள்ளார்.

நெல்லிப்பழை, வவுனியா அனலைதீவு, உடுப்பிட்டி, கிளாலி ஆகிய இடங்களில் வைத்து இராணுவத்தினராலும், கடற்படையினராலும், இனந் தெரியாதவர்களாலும் தமது கணவன்மார் கடத்தப்பட்டதாக 5 பெண்கள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த முறைப்பாடுகளே கொழும்பில் விசாரணை செய்யப்படவுள்ளன.

இந்த ஆணைக்குழுவில் சட்டத்தரணி மனோரி முத்தெட்டு வேகம, ஒய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி பி. பாலவடிவேல், ஒய்வுபெற்ற சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் எச் ஜி தர்மதாச ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

(ஐ-6)

## தீயில் எரிந்து காயம்

தனக்குத்தானே தீமூட்டி எரிந்து படுகாயமடைந்த நிலையில் கடந்த புதனன்று ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் செல்வராசா சிவராசா (வயது 17) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

(ஐ -17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நவக்கிரி சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் அச்சுவேலி இராச வீதியில் 16 பரப்பு வீடு வளவு பிரயோசனங்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. சரவணமுத்து, நவக்கிரி, புத்தூர். (சி/7275)

நல்ல நிலையில் உள்ள வெஸ்பா ஸ்கூட்டர் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 181, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் (ஞானம் ஆட்ஸ் அருகில்). (65109)

15 K W 3 பேஸ் லிஸ்ரர் எஞ்சின் விற்பனைக்கு உண்டு தொடர்பு: மேஜர் ஷண் (ஷண் றெக்கோடிங்ஸ் பொட் அருகில்) 24/2, பெரியகடை, யாழ்ப்பாணம். (65084)

## காணி குத்தகைக்கு

பருத்தித்துறை பிரதான வீதி, சிவன் கோயிலுக்கு முன்பாக உள்ள கடை கட்டுவதற்கு ஏற்ற காணி முழுமையாகக் குத்தகைக்குக் கொடுக்கப்படும் உடன் தொடர்பு கொள்க க. சிவராஜா 325 பிரதான வீதி, பருத்தித்துறை (651 8)

## வீடு தேவை

சுண்டுக்குளி, யாழ்.நகர், உடுவில், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் ஏதாவது ஓரிடத்தில் வீடு வாடகைக்குத் தேவை. வாடகை 500/-ற்கு உள் இருப்பின் நலம் தொடர்பு: துரைசிங்கம் ஸ்பென்சர் [இலங்கை மத்திய வங்கி ஊழியர்], டச்சு வீ, உடுவில. (64995)

## இலகு திருமணசேவை

1967, மூலம், செவ்வாய் 8 ஜேர்மனியில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் ஜேர்மனியில் தேவை சுயமாகச் செல்லக்கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம். சகல உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களுக்கு தொடர்பு ஞாயிறுகளில் துளசி விலா K K S வீதி. நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம். (65035)

## விண்ணப்பப் படிவம்

திறமை மேசை மூப்பு அடிப்படையில் இலங்கை அதிபர்கள் சேவையின் 1 ஆம் தரத்திற்கான படிவம் விற்பனையாகிறது. நாயகபாலன், மானிப்பாய் (65113)

## பிறந்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

பௌளகுரு கடவுள் சுவாமியின் 94 ஆவது பிறந்த தின நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் செல்வி மலர் பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது

அன்றைய தினம் பூஜைகள், ஆராதனைகள் மற்றும் சொற்பொழிவுகள் இடம் பெறவுள்ளன.

(க - 133)

## விசேட அடையாள அட்டைகள்

குருநகர், ஏப்ரல் 24

யாழ்ப்பாணம் றெக்கிளமேசன் கிழக்கு (ஜே-68) றெக்கிளமேசன் மேற்கு (ஜே 69) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்குரிய விசேட அடையாள அட்டைகள் நாளை சனிக்கிழமை காலை 10 00 மணி தொடக்கம் 12 00 மணி வரை சின்னக்கடை இராணுவ முகாமில் வைத்து வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-51)

# தையற்றொழிலாளர் தேவை

இணுவில் கே கே எஸ் வீதியில் இயங்கி வரும் ஆடை தயாரிக்கும் தொழிலகத்துக்கு அனுபவமுள்ள பெண் தையற்காரர் நற் சான்றிதழ்களுடன், விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

**விளம்பரதாரர் இல 877,**
**மே/பா உதயன்.**

(65083)

# அரசாங்க அறிவித்தல்

## சுகாதாரத் திணைக்களம்

யாழ்ப்பாணம்

## தளபாடம் வழங்கல் - 1999

சுகாதாரத் திணைக்களத்திற்கு மரத்தளபாடங்கள், இரும்புத் தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் என்னால் 25 - 05 - 1999 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 1-30 மணிக்கு திறக்கப்படும். இதற்கான கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் மீளளிக்கப்படாத பிணைப்பணமாக ரூபா 25 தும் மீளளிப்புடனான கேள்வி கட்டுப்பணமாக ரூபா 5,000 செலுத்தி 26 - 04 - 1999 ஆம் திகதி முதல் இப்பணிமனையில் பெற்றுக்கொள்வதுடன் மாதிரிகளையும் பார்வையிடலாம். படிவங்கள் 24 - 05 - 1999 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை வழங்கப்படும் இக்கேள்விப்பத்திர உறைகள் அரக்கு முத்திரை இடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''யாழ் சுகாதாரத் திணைக்களத்திற்கு தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடல் வேண்டும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விதாரர் ஒரு மாத காலத்திற்குள் குறிப்பிட்ட தளபாடங்களைத் தாங்களே எமது பணிமனையில் ஒப்படைக்க வேண்டும் தளபாடங்கள் யாவும் வேப்ப மரத்தினால் செய்யப்பட்டு இரு தடவை வாணிஸ் பூசப்படல் வேண்டும். மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் பணிமனை நேரத்தில் எமது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி**
**செல்வி உ. சிவபாதசுந்தரம்**
பிராந்திய பல் வைத்திய அதிகாரி,
மாகாணப் பிரதிப் பணிப்பாளருக்காக

சுகாதார சேவைகள்,
இல. 46, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம். [சி/7286]

# ஈராண்டு நினைவலைகள்



திருமதி

## நாகேஸ்வரி சதாசிவம்

| | |
|---|---|
| எமக்காக | இறைவனுக்காக |
| 20 06–1940 | 15–04–1997 |


திதி: 24-04-1999

ஈராண்டு சென்றதம்மா துடிக்கும் நெஞ்சுடன்
ஈவிரக்கமில்லாமல் உங்களை
ஈஸ்வரனார் கூட்டிச் சென்றார்.
ஈடில்லா உங்கள் பாசம்
ஈட்டிபோல் குடையுதம்மா எம் நெஞ்சை
ஈர்த எம் இனிய வாழ்வு
ஈமைக்கிரிகையில் முடிந்ததம்மா
உங்கள் ஆத்ம சாந்திக்காக
உமையவளைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் வாடும்
**கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**தாய், தந்தை, சகோதரன்**

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி (65073)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## வீ. முத்துலிங்கம்

(லிங்கம்ஸ் உரிமையாளர், சாவகச்சேரி)

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 25–01–1932 | 29–04–1993 |

திதி:24–04–1999

அறிவு வழிகாட்டி எமை அவனியிலே உயரவைத்தீர்
அன்பு வழிகாட்டி எமை அரவணைத்து வளர்த்தெடுத்தீர்

பண்பு வழியதனில் நீங்கள் பாங்குடனே நடந்தீர்கள்
வன்பு வழிஎதுவென்று வாழ்வினிலே அறிந்திடாத
அன்புருவே அப்பாவே ஆருயிர்த் தெய்வமே!
ஆண்டாறு ஆனபோதும் ஆறவில்லை எம்துயரம்
அஞ்சலிகள் செய்கின்றோம் அரனடிக்கீழ் இன்புறவே;

**குடும்பத்தினர்**

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (65085)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



செல்வன்

## செல்வரத்தினம் இலங்கேஸ்வரன்

(யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆண்டு 10 மாணவன்)

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 21–02–1983 | 26–03–1999 |

இவர் புலோலி மந்திகை ஆஸ்பத்திரி முன் வீதியில் வசித்தவரும், தற்சமயம் உடுப்பிட்டி கிழக்கு குஞ்சர் கடைக்கு அருகில் உள்ள ஜெயந்தி வாசா இல்லத்தில் வசித்தவருமாவார்.

நாளை [25—04—99] ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன வைபவத்திலும் ஆசிரியர்கள், மாணவர்கள், உற்றார், உறவினர், நண்பர்களைக்கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனித் தனியே அழைப்பு அனுப்ப முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்
**வே. செல்வரத்தினத்தின்**
**குடும்பத்தினர்**
**V. S. P. குமார்**
கல்பனா ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்.

'ஜெயந்தி வாசா',
உடுப்பிட்டி,
இமையாணன் கிழக்கு. [64928]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐ. நா. திட்ட ஏற்பாட்டில்

# இளம் பெண்களுக்கு இலவச கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24 ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் யாழ்ப்பாண மீளமைப்பு மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தினால் யாழ். குடா நாட்டில் தகுதிவாய்ந்த 240 வறிய இளம் பெண்களின் கணனி அறிவை விருத்திசெய்யும் பொருட்டு இலவச கணனிப் பயிற்சி நிலையமொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 'பாபறா மல்வேணி கணனிப் பயிற்சி நிலையத்தில் ஜூன் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு டிசம்பர் 18 ஆம் திகதிவரை இடம்பெறும் என்றும்—

இந்த நிறுவனத்திற்கான பயிற்றுநர்களாக 72 விண்ணப்பதாரிகளிலிருந்து 16 பேர் தெரிவுசெய்யப்பட்டு பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்ட இரு நிபுணர்களினால் பயிற்றப்பட்டுள்ளனர். பயிற்றப்பட்ட 11 பெண்கள் பயிற்சி நிலையத்தை நடத்த உள்ளனர். 5 ஆண்கள் பிரதேச செயலகங்களுக்கும் வேறு நிறுவனங்களுக்கும் பயிற்றுநர்களாக அனுப்பப்படவுள்ளனர் எனவும்— தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டிலுள்ள, 18 முதல் 35 வயதிற்குட்பட்ட 240 பெண்கள் தெரிவு செய்யப்பட்டு, இரு பிரிவுகளாகப் பயிற்றப்படவுள்ளனர். இவர்களுக்கான இலவச போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன. இப்பயிற்சி நெறியில் Windows 95, Ms Office ஆகியவற்றிற்கான விரிவுரைகள் போதிய செய்முறைவிளக்கங்களுடன் அளிக்கப்படவுள்ளன. பயிற்சிக் காலத்தில் மாணவர் அறிவு விருத்திக்காக, நூலக மற்றும் வீடியோ விளக்கப்பட வசதிகளும் செய்யப்பட்டுள்ளன — என்று ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### மல்லாகம் கிராம அபி. சங்கம்

# அதிகார சபைக்கு எதிராக மனு தாக்கல் செய்ய முடிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24 மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் வடமாகாண மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபைக்கு எதிராக நஷ்டஈடு கோரி வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யப் போவதாக கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் அறிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1953 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குரிய கட்டடங்கள் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலினால் முற்றாகச் சேதமடைந்தன.

இது குறித்து உடனடியாக அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவரும் அன்றைய புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சருக்கு இவ்விடயம் குறித்து அறிவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் 1996 இல் இடம்பெற்ற மீளக் குடியமர்வுக்குப் பின்னர் மேற்படி சங்கக் கட்டடத்தின் புனரமைப்புத் தொடர்பாக வடமாகாண மீள் குடியேற்ற அதிகார சபையுடன் தொடர்பு கொண்ட போது ஒரு பகுதிக் கட்டடத்தின் புனரமைப்புக்கென நிதியுதவி வழங்கப்பட்டது.

மிகுதிக் கட்டடங்களைப் புனரமைப்பதற்குத் தேவையான நிதியுதவி வழங்குவது குறித்து மீள் குடியேற்ற அதிகார சபை இதுவரை எந்த விதமான தகவலையும் வெளியிடவில்லை.

எனவே இது குறித்து ஆராய்ந்த எமது சங்கத்தின் செயற்குழு ஒரு மாத காலத்துக்குள் மிகுதிக்கட்டடப் புனரமைப்புக்கான நிதியுதவியை வடமாகாண மீள் குடியேற்ற அதிகார சபை தராவிட்டால் அதற்கு எதிராக முன்னோடியாக நீதிமன்றம் ஒன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதென முடிவு செய்துள்ளது என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

### பனை அபிவிருத்திச் சபை

# தலைமையகம் இடம் மாற்றப்படாது

## அதன் தலைவர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24 பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக்காரியாலயம் யாழ்ப்பாணத்திலேயே தொடர்ந்து இயங்கும் என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மு. பாக்கியநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் சபையின் தலைமையகத்தின் செயற்பாட்டினை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்காக இதுவரை காலமும் கொழும்பில் வைக்கப்பட்டிருந்த 50 இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திர சாதனங்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பனை அபிவிருத்திச்சபையின் தலைமையகத்தினை யாழ்ப்பாணத்தில் கட்டுவதற்கு காணி ஒன்று வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கட்டடம் கட்டுவதற்கு நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்படியான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டிருக்கும்போது 'சபையின் தலைமையகம் திருகோணமலைக்கு இடம் மாற்றம்' என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது வியப்பாக இருக்கிறது.

இந்த இடம்மாற்றச்செய்தி பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் என்ற வகையில் எனக்குத் தெரியாமல் பத்திரிகையில் வெளிவந்தது மிகவும் விசனத்துக்குரியதாகும்— இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-5)

# யாழ். வேலையற்ற பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் முற்பகுதியில் நியமனம்

வலி. தென்மேற்கு, ஏப். 24 நாலாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில்உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் 5 ஆம் திகதி நியமனம் வழங்கப்படவிருப்பதாக தேசிய வரவு செலவுத் திட்டப்பணிப்பாளர் நாயகம் எஸ். பி. திவாரத்தினா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் அவருடன் நேறுத் தொடர்பு கொண்ட சமயமே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அடுத்த 14 நாள்களுக்குள் யாழ். அரச அதிபர் ஊடாக இந்த நியமனம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். [இ-3-185]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24 வலி. வடக்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர்தல், மீளக் குடியமர்வு நிதி, சேதவிவர மதிப்பீடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 29 ஆம் திகதி காலை 10 மணிக்கு வலி. வடக்குப் பிரதேச சபையில் வலி. வடக்குப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. (க)

★ ★ ★

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில மேதினம் தொடர்பான கலந்துரையாடல்இன்று காலை 10 மணிக்கு பேரவையின் பணிமனையில் நடைபெறவிருக்கின்றது. (உ-30)

## கிரிக்கெட் அணி ஒழுங்குத்தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24 யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் 15, 17 வயதுப் பிரிவு ரீதியாக பாடசாலை அணிகளுக்கு இடையில் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அணி ஒழுங்குத் தெரிவு எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று சங்கச் செயலாளர் சண். தயாளன் அறிவித்துள்ளார்.

அணி ஒழுங்குத் தெரிவு கடந்த 16 ஆம் திகதி இடம்பெறவிருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

## சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24 தீவக லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண் சிகிச்சை மற்றும் மருத்துவ சிகிச்சை முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சிகிச்சை முகாமில் கண் பரிசோதனை, இரத்த அமுக்கம், நீரிழிவுப் பரிசோதனை மற்றும் பொது மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (க)

## தடுப்பு முகாமுக்கு அதிகாரி விஜயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24 மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கம் காங்கேசன்துறைத் தடுப்பு முகாமிற்கு எதிர்வரும் 28ஆம் திகதி விஜயம் செய்யவுள்ளார்.

அங்குள்ள கைதிகளைச் சந்திக்கவுள்ள இவர் கைதிகளின் சேமநலன் பற்றி அவர்களுடன் கலந்துரையாடவுள்ளார். (ஐ-5-173)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24 வடமாகாண வங்கி ஒய்வூதியர் சங்கத்தின் வருடாந்த விசேட கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி [illegible] நடைபெறவுள்ளது. (க)

## பூப்பந்து இறுதியாட்டமும் பரிசளிப்பும்

யாழ். மாவட்டபூப்பந்தாட்டச் சங்கம் கழக அணிகளுக்கு இடையில் நடத்தும் பூப்பந்தரட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 1.00 மணி முதல் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆடுதிடலில் நடைபெறும்.

வேலணை பிரதேச செயலர் செ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சங்கத் தலைவர் சண். தயாளன் தலைமையில் பரிசளிப்பு நிகழ்வு நடைபெறும்.

நேற்று காலை 9 மணிமுதல் நடைபெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து சுண்டுக்குளி மகளிர் அணி மோதியது.

இன்று நடைபெறும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஜொலீஸ்ரார்ஸ் வி. க. அணியை எதிர்த்து காமாட்சி வி. க. அணி மோதுகின்றது. (உ)

### புதிய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்)

இதனால் காங்கிரஸ் புதிய ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு மிக அருகிவிட்டதாக அவதானிகள் தெரிவித்தனர்.

முலாயம் சிங் யாதவ் அணியில் 27 எம்.பிக்கள் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் —

நேற்று மாலை ஜனாதிபதி கே. ஆர். நாராயணனைச் சந்தித்த சோனியா காந்தி தமக்கு ஆதரவளிக்கத் தயாராக இருக்கும் 233 எம்.பிக்களின் பெயரிப் பட்டியலை அவரிடம் சமர்ப்பித்தார்.

முதலில் தமக்கு 272 எம். பிக்களின் ஆதரவு இருப்பதாக ஜனாதிபதியிடம் கூறிய சோனியா காந்தி இப்போது 233 எம்.பிக்களின் ஆதரவு விவரம் அடங்கிய பட்டியலைக் கையளித்திருப்பதன் மூலம் அரசமைப்பதில் தமக்குள்ள இயலாமையை ஒப்புக்கொண்டுவிட்டார் என பாரதீய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ளது.

தமது அணியில் உள்ள 270 எம். பிக்களும் வாஜ்பாய்க்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதில் உறுதியாக இருப்பதாகவும் அக்கட்சி தெரிவித்தது.

தற்போதைய நிலையில்— இடதுசாரிகள் அடங்கிய மூன்றாவது அணி அமைக்கும் கூட்டணி அரசு ஒன்றை ஆதரிப்பதற்குக் காங்கிரஸ் இணங்காவிட்டால், புதிய தேர்தல்கள் நடைபெறுவது தவிர்க்க இயலாததாகிவிடும் என்றும்—

தற்போதைய பாரதீய ஜனதா அரசு கவிழ்க்கப்படுவதற்கு அடித்தளம் இட்டவரான சுப்பிரமணிய சுவாமி நேற்றுத் தெரிவித்தார்

இதனிடையே—

புதிய அரசு ஒன்றை அமைத்து நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்வதற்கு வாஜ்பாய்க்கு ஜனாதிபதி மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சியும் கூட்டணிக் கட்சிகளும் கோரியிருக்கின்றன. (உ-ஐ-3-7)

## இன்று

அரியாலை புனித யூதாததேயு ஆலய திருநாள் நிகழ்ச்சியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு நற்கருணை ஆராதனையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

## மிருதங்க செய்முறைப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24 யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு நடைபெற இருந்த வடஇலங்கை சங்கீத சபையின் தரம் ஒன்று, இரண்டுக்கான மிருதங்க செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கும் அடுத்த மாதம் முதலாம் இரண்டாம் திகதிக்கும் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

—மேற்படி பரீட்சைகள் குறித்த தினத்தில் யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும்.

### கைதடி...

(முதலாம் பக்கத் தொடர்)

மாக இது செயல் இழக்குமானால் அத்தகைய நிகழ்வு யாழ்ப்பாண சமூகத்துக்கே பேரிழுக்கு என்று சுட்டிக் காட்டிய தொண்டு நிறுவன வட்டாரங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள பரோபகாரிகள் தாமாக முன்வந்து இப்பாடசாலைக்கு நிதி உதவி வழங்கி அது தொடர்ந்து செயற்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்ற பகிரங்கக் கோரிக்கையையும் முன்வைத்தன.

பெரும்பாலும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த — வலது குறைந்தோரே— இங்கு கல்வி பயில்கின்றனர். அவர்களுக்கு கல்வி, தங்குமிடம், உணவு, மருத்துவ வசதிகளை இப்பாடசாலை இலவசமாக வழங்குவதோடு அவர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாகவும் நின்று அவர்களைத் தாங்குகின்றது.

வலது குறைந்தோருக்கு போதனை வழங்குவதில் விசேட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இங்கு பணிபுரிகின்றனர்.

அங்கிலிக்கன் திருச்சபையால் ஸ்தாபிக்கப்பட்டு, அதன் உதவியால் செவ்வனே இயங்கி வந்த இக்கல்லூரி இப்போது ஏற்பட்ட நிதிப்பற்றாக்குறை காரணமாகமாணவருக்கு உரிய— அத்தியாவசிய—தேவைகளை நிறைவு செய்யமுடியாத இக்கட்டான நிலையில் இருக்கின்றது.

பொது தொண்டு அமைப்புகளும், வர்த்தகர்களும் இப்பாடசாலைக்கு உதவுவதற்கு நிதி திரட்டி வழங்க முடியும் பரோபகாரச் சிந்தையுடையோர் யாழ். வர்த்தக வங்கியின் கணக்கு இலக்கம் 5463 இல் தமது நிதி உதவிகளை வைப்பிலிட்டு நமது சமூகத்தில் பாதிக்கப்பட்ட இளஞ் சிறாருக்கு உதவ முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு போதிக்கும் மேலதிக விசேட ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்குவது கூட கஷ்டமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் முடிந்த மாகாணங்களில்

# 5 புதிய முதலமைச்சர்கள் நேற்று பதவியேற்றனர்

கொழும்பு,ஏப்.24

அண்மையிலதேர்தல் நடைபெற்ற தெற்கின் ஐந்துமாகாணசபைகளுக்கு மான புதிய முதலமைச்சர்கள் நேற்று பதவிப்பிரமான் செய்து கொண்டனர்.

மேல் மாகாண முதலமைச்சராக சுனில் பிரேம்ஜயந்த நேற்றைய தினம் ஆளுநர் ஏ.கே. விக்னராஜா முன்னி லையிலும் மத்திய முதலமைச்சராக சரதட எக்கநாயக்க ஆளுநர் சாந்த திலகரட்ண முன்னிலையிலும் -

சப்பிரகமுவ மாகாண முதலமைச் சராக உதயபாதகுணதிலக ஆளுநர் சாலினி மத்தியூ முன்னிலையிலும் -

வடமத்திய மாகாண முதலமைச் சராக திருமதி டயனல் திஸேராதிஸா நாயக்க ஆளுநர் ரி.என்.சமரவிர முன் னிலையில்-

ஊவாமாகாண முதலமைச்சராக லாலவி வீரவன்னியும் ஆளுநர் ஆனந்த தஸநாயக்க முன்னிலை யிலும்-

பதவிப்பிரமாணம் செய்து கொண் டனர்.

இதேவேளை

ஊவா மற்றும் மத்திய,வடமத்திய மாகாணசபைகளைச் சேர்ந்த சில அமைச்சர்களும் நேற்றைய தினம் பதவிப்பிமாணம் செய்து கொண்டனர்.

(ஐ-7)


UNIVERSITY OF JAFFNA
CAREER GUIDANCE OFFICE

The Career Guidance office of the University of Jaffna has recommenced its activities.

All the underemployed and unemployed graduates of the University of Jaffna who seek assistance from this office, to get short/long term employment in puplic and private sector and to improve managerial and technical skills are requested to register their names with this office at the earliest convenience.

Registrar. (C/7297)



என்றும் உங்கள் தெரிவு

கபிலா காலணி அகம்

கபிலா சூ பலஸ்

இல. 4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். நகரில் உங்கள் உள்ளம் கவர்ந்த காலணித் தெரிவுகளுக்கு புகழ்பெற்ற ஸ்தாபனம்

கபிலா

பாடசாலை மாணவர்கள், மாணவிகளுக்கு உகந்த சகல விதமான வெள்ளை, கறுப்பு சப்பாத்து வகைகளை நியாய விலையில் பெற்றுக்கொள்ள

கபிலா

உங்கள் தோற்றத்தில் மாற்றத்தைத் தோற்றுவிக்க, வித விதமான காலணிகளுக்கு இதோ! முந்துங்கள்!!

கபிலா

உள்நாட்டு, வெளிநாட்டு காலணிகளை கொழும்பிலிருந்து நேரடியாகத் தருவித்து விநியோகிப்பவர்கள்தான்

கபிலா காலணியகத்தினர்

உங்கள் மெருகு - கபிலாவின் தெரிவு

கபிலா சூ பலஸ்

இல.4,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7293)


## சிமெந்து ஆலைக்கு உயர்மட்ட குழு இன்று விஜயம்

வலி-வடக்கு,ஏப்.24

காங்கேசன் சிமெந்துத் தொழிற் சாலையின் தற்போதைய நிலையை நேரில் ஆராய உயர்மட்டகக் குழு ஒன்று இன்று அங்கு செல்லவிருக் கின்றது.

சிமெந்துக் கூட்டுத்தாபன ஆலோச கரான பொறியியலாளர் எஸ்.அசோக ராஜா தலைமையில் செல்லும் இக்குழு தொழிற்சாலை வளங்களைப் பார்வையிட்டு தொழிற்சாலையை மீள இயக்குவது தொடர்பாக ஆராயும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-86)

## அல்வாயில் சங்கக் கிளையில் பொருள்கள் சூறை

நெல்லியடி,ஏப்.24

ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த நேரம் பார்த்து சங்கக்கடையின் கூரை பிரித்து உள்புகுந்த திருடர்கள் அங்கி ருந்துஉடுபிடைவைகள், பால்மா வகை கள் உட்பட 75ஆயிரம் ரூபா பெறுமதி யான பொருள்களைச் சூறையாடிக் கொண்டு தலைமறைவாகினர்.

இத்துணிகரத் திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு முன் பாக உள்ள கிளைக்கடையில் இடம் பெற்றது.

கட்டைவேலி பலநோக்குக் கூட்டுற வுச் சங்கத்தின் கீழ் இயங்கும் இரண் டாம் இலக்கக் கிளையிலேயே இத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

இது குறித்து, கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கப் பொது முகாமையாளர் நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் புகாரிட்டுள்ளார்.

(ஐ-109)

## இரு இளைஞர்களை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.24

கோப்பாய் ஆனைக்கோட்டைப் பகுதிகளில் இருந்து இரு இளைஞர் கள் காணாமற்போய்விட்டதாக அவ் விளைஞர்களது உறவினர்களினால் நேற்று யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்த குணராசா சுபாஸ்கரன் (வயது 15) என்பவர் கடந்த 21 ஆம் திகதி யாழ்நகரில் தாம் வேலை செய்யும் நகைக் கடைக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

விளையாட்டரங்க வீதி கோப்பாய் தெற்கில் வசிக்கும் இராஜரட்ணம் சுதர் சன் (வயது 15) இப்பகுதியில் உள்ள நூலகம் ஒன்றுக்குச் சென்று வருவ தாக கடந்த 22ஆம் திகதி புறப் பட்டவர் இது வரைக்கும் வீடு திரும்ப வில்லை என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

(ஐ-5-173)


விண்ணப்பப் படிவம்

கல்லூரி அதிபர்கள் சேவைமூப்பு அடிப்படையில்

தரம் III இலிருந்து தரம் II இற்கும்

தரம் II இலிருந்து தரம் I இற்கும்

பதவியுயர்வு பெறுவதற் கான விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது.

பாரதி பதிப்பகம்
430, காங்கோசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7295)



DCS

College of Computer Technology
Jaffna

1999/2000 Scholarship Examination

Candidates who have not yet received results of the above exam by post should contact the DCS Jaffna office immediately. Courses for those candidates who are not sitting the A/L exam in August will commence on Sunday 2nd May 1999. Courses for those sitting the A/L exam will commence in September 1999. All candidates even those enrolling in September, who have been admitted should register on or before 2nd May 1999.

DCS
P.O. Box 144,
Jaffna,
Telephone: 021-2604, 021-2596.

Director (AD),
DCS,
124/2, Palaly Road,
Thirunelvely.

(6110)



Institute of Informatics Studies
Jaffna, Sri Lanka
(Affilliated with IMIS, UK)

Computer Courses

New Batches Commence on
30 th April 1999 at 10.00 a.m

Diploma Courses:
1. Advanced Diploma in Applied Computer Science.
2. Diploma in Computer Programming.
3. Diploma in MS - Office.
4. Technician Diploma in Computer Hard ware.

Certificate Courses:
1. MS - WORD  2. MS - EXCEL  3. MS - ACCESS
4. AUTO CAD  5. VISUAL BASIC  6. C++
7. PAGE MAKER  8. COREL DRAW  9. PASCAL

Special classes for Teaching and other working staff will be conducted on week days at 4.30 p.m to 6.30 p.m.



For further details contact,

Director
Institute of Informatics Studies

* 100, Clock Tower Road, Jaffna.
* Navalar madam, Nelliyady.
* 'Circle Centre', Chankanai.
* Nunavil East, Nunavil.

( C/ 7290)



ஜெசிபா ஏஜென்சியினரின் மகிழ்ச்சி தரும் நற்செய்தி!

டோக்கியோ சிமெந்து கம்பனியின் சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO)

முதல் தர MITSUI மிற்சுயி சிமெந்து

* யாழ்குடா நாட்டுக்கு இரண்டொரு தினங்களில்
* ஓடர்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்

மேலதிக விவரங்களுக்கு

ஜெசிபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி, தொலைபேசி இல. 021-2407 யாழ்ப்பாணம்.

(சி-7276)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-04-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சிகை

24-04-1999 சஞ்சீவி

ராகம்ஸ்
பட்டுச் சோலை

திருமணப் பட்டுப்
புடைவைகளின் சோலை
ராகம்ஸ் பட்டுச் சோலை
24-நவீனசந்தை, யாழ்ப்பாணம.

## கருத்துக் கலசம்

மயூரா

### நட்பு

**கோட்டுப்பூப் போல மலர்ந்து**
**பிற் கூம்பாது,**
**வேட்டதே வேட்டதா நட்**
**பாட்சி; தோட்ட,**
**கயப்பூப் போன்முன்மலர்ந்து**
**பிற்கூம்பு வாரை,**
**நயப்பாரு நட்பாரு மில்.**

-நாலடியார்

நட்பு என்பது ஒருவர் மீது மற்றவர் கொள்ளும் அன்பின் பிரதிபலிப்பு.அதாவது அன்பின்விளைவே நட்பு. ஒருவர் அடுத்தவருடன் சேர்ந்து பழகுவதற்கு ஆதாரமாக, அடித்தளமாக விளங்குவதுஅன்பே.

ஒருவர் நமக்குத் தெரிந்தவர் அல்லது அந்தஸ்த்தில் உள்ளவர் என்பதற்காக நட்புக் கொள்ளுதல் ஆகாது. நட்பு நன்மையும் தரும்; உரியவாறு உயராவிடில் தீமையும் தரும்; எனவே நட்புக் கொள்வதில் அவதானமும் ஆராய்வும தேவை.

ஒருவருடைய குணாம்சங்களை ஆராயாமல், அவரது அடி மனதில் ஆழவேரூன்றியுள்ள தன்மைகளைக் கண்டறியாமல் நட்புக்கொள்ளுதல் ஆகாது. அதனாலேயே முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பதே நட்பு என்று அறிவிவுறுத்தப்பட்டுள்ளது; எச்சரிக்கப்பட்டுள்ளது.

நண்பன் வசதி வாய்ப்புக்களுடன் இருக்கும் போது அன்பு சொரிந்து ஆசைகாட்டியபின்,அவன் நொந்து நொடிந்து போனவேளை விட்டகன்று உறவை வெட்டிக் கொள்பவர்களும் உள். தம்முடைய சில தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, விட்டகலாது ஒட்டிக் கொண்டு காரியமானதும் விலகிவிடுவோரும் உள்.

இதன் பொருட்டு துதி பாடவும், முகமன் செய்யவும் முன்வருபவர் பலர். அவர்களே தமது குறிக்கோள் நிறை வேறாவிடில், தமக்கு ஏற்றவாறு வளைய மறுக்கும் போது, தூற்றவும் பழி சுமத்தவும், அவமரியாதை உண்டாக்கவும் துணிவர்.

ஆகையால் நட்புக் கொள்ளுதல் நன்றாக ஆராய்ந்து செய்யப்படவேண்டியஒன்று என்பதனை மறந்து விடலாகாது. 'நல்லவர்களின் நட்பு ஒருவனுக்கு காவலாக அமையும்; காப்பரணாக, பாதுகாப்பாக அமையும்.

அறிவில்லார், பண்பில்லாருடனான நட்பு ஒவ்வாதது; அது ஆபத்தை விளைவிக்கும்அதனால்தான் அத்தகையோரது பகைமை நட்பை விட நல்லது என அறநூல்கள் கூறும். பண்பில்லாதார், அன்பில்லாதாருடனான நட்பு தற்காலிகமானதாகிவிடும்; நிரந்தரமின்றி இடைநடுவில் கழன்று விடும். அத்தகைய நட்பு ஆகாது.

அதனையே மேற்கண்ட நாலடியார் பாடல் விளக்கிறது. மரக்கொப்பில் மலரும பு, தான் மலரும் வேளை விரிந்திருந்தது போலவே உதிரும் வரை விரிந்திருக்கும். ஆனால் தாமரை போன்ற நீர்ப் பூக்கள் மலரும் போது விரிந்திருந்து, நேரம் கழியக் கழிய சுருக்கம் கண்டு கொண்டிருக்கும்; தொடர்ச்சியாகக் கூம்பிக் கொண்டிருக்கும்.

அறிவுடையாருடன் நட்புக் கொண்டால் அது இறுதிவரை மாறாது. பண்பில்லாதவர்களுடன் கொள்ளும் நட்பு இடையில் நலிந்து போய்விடும்; கூம்பிப்போய் விடும் என்பதனையே இப்பாடல் எடுத்துச் சொல்கிறது.

ஆகையால் நட்பு என்பது ஆய்ந்து, உணர்ந்து, தெரிந்து கொள்ளவேண்டியது. அன்பின் மிகுதியால் பிறக்கும் நட்பு மாண்புடையது. ஒத்த மனமுடைய, ஒத்த உணர்ச்சியுடையவர்களிடையேயான நட்பு நீண்ட காலம், உயிருள்ள வரை நிலைக்க வல்லது.

# இளமையும் வளமையும்

இளமைப் பருவம் - துடிப்பான பருவம்; துள்ளுகின்ற பருவம்; விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் செயற்படுகின்ற - கனவுகள் காணும் - கற்பனைகள் வளர்த்துக் கொள்ளும் - உற்சாகம் மட்டுமே நிரம்பிய - பருவம். சுருங்கக் கூறின் உலக வாழ்க்கை பற்றி எதுவும் தெரிந்து கொள்ளாத - தெரிந்து கொள்ளவிரும்பாத - பருவம்.ஏனெனில் வரவில்லாமல் செலவு செய்து வாழ்ந்திருக்கப் பழகிவிட்ட அவர்களுக்கு பொறுப்புக்களை உணர்த்துவதற்கு அல்லது உணர்வதற்கு வாய்ப்புக்கள் இல்லையென்றே கூறிவிடலாம்.

ஒவ்வொரு மனித வாழ்க்கையிலும் பல படிகளைததாண்டித்தான்மேலே செல்ல வேண்டியிருக்கிறது. இவ்வாறான பல படிகளில் மிகவும் முக்கியமானதும், நாம் நமது சிந்தனைகளை ஆழ ஊன்றி சாதனைகள் படைக்க வாய்ப்பானதுமான நிலைதான் 'இளமைப்படி'. இந்த இளமைப் படியிலேதான் எம் எதிர்காலத்துக்கான அத்திவாரத்துக்கு வலுவான உரம் போடப்பட வேண்டும். திடமாக உள்ளம உறுதிப்பட வேண்டும். இந்தப் பருவத்திலே வலுப் பெறவேண்டிய மனதிற்குப் பதிலாக, எமது உயர் வாழ்வுக்கு எதிராக, எமது வளர்ச்சியின் முதிர்ச்சிக்கு முரணாக, பல எதிர்ப்புக்கள் வந்து குவிந்துவிடும். அவ்வாறான எதிர்ப்புக்களை நாம் சந்தித்தே ஆகவேண்டும். அப்படிச் சந்திக்காமல் செல்வது கடினம். இந்த வேளையிலேதான் ஜொலிக்கும் தங்கமாகப் புடமிடப்பட்டு, புதிய கருவியாக மாற்றமடைவோம். இளமை எனும் பருவத்தினை சிறந்த முறையில் செதுக்கி, சீரான பாதையில் வழிநடத்தப் படுபவனே வாழ்க்கையில் வெற்றியடைகின்றான். வாழ்க்கையையும் வென்று முடிக்கின்றான்.

"பலருடைய தோல்விக்குக் காரணம் அறிவுக் குறைபாடல்ல, கவனக் குறைவே" என ஓர் அறிஞர் மொழிந்துள்ளார். அந்தக் கவனக் குறைவை அகற்றி, வெற்றி காணும் பருவமும் இப்பருவமேதான். சிறப்பாக இந்த இளமைக் காலத்திலே ஊக்கமுடைமையுடன் செயற்பட்டவர்களே நேற்றைய, இன்றைய தலை சிறந்த தலைவர்களாக தரணியையே ஆளுகின்றனர்.

இளையவர்களாகிய எம்மிடம் எத்தனையோ பொறுப்புக்களுமகடமைகளும ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றினை முழு மனது கொண்டு சிறப்பாக செய்து முடிக்க வேண்டும். இதைத் தான் ஹேரி மேடாகஸ் என்பவர் "உங்களுக்கு எவ்வளவு தெரியும் என்பது முக்கியமல்ல: உங்களுக்குத் தெரிந்ததைக் கொண்டு எவ்வளவு செய்து முடித்தீர்கள் என்பதுதான் முக்கியம்" - எனக் கூறுகிறார்.

"இளமைப் படியில் காலடி எடுத்து வைத்திருக்கும் இளையவனே! இன்று உன்னால் முடிந்த மட்டும் நன்றாகச செய்: நாளை அதனிலும் பார்க்க பெரிய வேலை உன்னைத் தேடியேவரும்."

எனவே எமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும். சந்தர்ப்பத்திற்காக கடைசி வரையும் காத்திராமலவெற்றியின் பக்கம எம கவனத்தைச் செலுத்துவோம்.

'இளமையிற் கல்வி சிலை போல் எழுத்து'- இந்த இளமையிற் கற்கும் ஒவ்வொரு படிப்பினையும் பசுமரத்தில் ஆணியை அறைந்தது போன்றது. சில காலங்களினபின அவ்வணியை எவ்வாறு கழற்ற முடியாதிருக்கிறதோ, அதே போன்றுதான் இளமையிற் கற்ற கல்வியும் அழியாத சிகரமாகிறது.

அறிவின்மையும் பல விடயங்களை அறிய வேண்டும் என்ற பூர்த்தி செய்யப்படாத அவாவும் கூச்சமும் தவறான வழிகாட்டல்களும் பல இளைஞர்களையும் யுவதிகளையும் சீரழித்து வருவதை நாம் அறிவோம். அவர்களின் நாளைய எதிர் காலத்தினை சிந்திக்காத சில விஷமிகளினால் இளையவரின் சிந்தனை விருத்தியும் ஆக்கத்திறனும் குறுகிய வட்டத்தினுள் உள்ளடக்கப்படுகின்றன. நாளைய விடிவின் முதற் கனிகளாக வெழவிருக்கும் இளைஞர்களுக்கு [illegible] யாக இருப்பது சூழல். அச்சூழலே அவனைக் குட்டிச்சுவராக்கி விட்டால், அவன் வாழ்வதும், வளர்வதும் எப்படி? இதனை சமூகம் நன்கு சிந்திக்க வேண்டும்.

நம்மிடம் வெறுமைதான் குடிகொண்டுள்ளது என்ற பிரமையை நாம் நமது அடி மனதில் ஆழப் பதித்துவிட்டோம். அதையே பழகியும் விட்டோம். அதனால் அந்தத் தாழ்வு மனபான்மையிலிருந்து விடுபடமுயல்வதில்லை; அதற்காக முயற்சிப்பதுமில்லை. வாழ்க்கையில் நொந்து வருந்திப் பல அனுபவங்களைப் பெற்றவர்களின் வரலாற்றுச் சுவடுகளின் படிப்பினைகளை அறியும் போது, எம் போன்ற இளமைத் துடிப்புப் பொருந்திய அல்லது 'வாழ்வில் அர்த்தமேயில்லை என அலைந்து அருமந்த வாழ்வினை அநியாயமாகக் கெடுத்துக் கொண்டிருக்கின்ற இளைஞர்களுக்கு அது ஒரு படிப்பினையாக அமைந்து விடுகின்றது.

பட்டம் பெறாமலேயே பேறிஞரானவர்தான் உலகப் புகழ்பெற்ற பேர்னாட் ஷா. எழுந்து




தன் வேலைகளைத் தானே செய்ய முடியாத முடவனான நெல்ஷன் வாழ்வில் வெற்றி பெறவில்லையா? ஏழ்மையில் துவண்டு, தச்சுத் தொழில் புரியும் குடும்பத்தில் பிறந்து உலகமே வாயில் கை வைக்குமளவிற்கு ஜனாதிபதியாக வாழ்ந்து காட்டியிருக்கிறார் என்றால் நம்மால் மட்டும் ஏன்முடியாது? நாமும் சாதித்துக் காட்ட, எமது திறமைகளை வெளிப்படுத்த ஏன் தயங்க வேண்டும்?

முதலில் நாம், நம்மிலும், நமது திறமைகளிலும் நம்பிக்கை வைக்க வேண்டும்.

விவேகானந்தர் "தன்னிடம்நம்பிக்கை கொள்ளாதவனுக்கு பிறரிடமும் கடவுளிடமும் நம்பிக்கையுண்டாகாது." என்கின்றார்.

எனவே நாம் ஒவ்வொருவரும் எம்மிலே முழு தன்நம்பிக்கையுடன் கூடிய உயர் சிந்தனை கொண்டிருத்தல் அவசியமாகும்.

இளம்வயது என்பது இளகிய மெழுகுபோன்றது. சூடாறுவதற்குள நாம் விரும்பும் உருவத்தை ஆக்கிவிட வேண்டும். சூடாறினால் அதை மாற்றி அமைப்பது மிகவும் கடினம். எனவே எமது எதிர்கால வாழ்வு எதுவாக வேண்டும் என்பதை நிறுதிட்டமாக எண்ணிக் கொண்டால், நாம் அதுவாகவே ஆகிவிடுவோம். ஆகவே இது இளகிய மனது; இளம் வயது; [illegible] உயர்வான நிலையை எண்ண வேண்டும். அதனால் வாழ்வில் உயர் நிலை அடையலாம். 'ரீன்ஏஜ்' என்ற எம்மினிய வாழ்வுப் பகுதியை தகுந்த முறையில் பயன்படுத்திச் சுவைக்க வேண்டும். 'இளமை என்பது அணியாமல் புதிதாய் வைத்திருக்கக் கூடிய ஆடை போன்றதல்ல. இளமை உள்ள போதே அதை அணிந்து கொள்ள வேண்டும். அன்றேல், அது விரைவில் கந்தையாகிவிடும்.

எனவே, எமது இளம் பருவத்தை தகுந்த முறையில் நெறிப்படுத்தி வாழ்வில் உயர்வோம்.

எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்காத வரை இறந்த கால செயற்பாடுகளை எண்ணி வியப்பதில் பயனேதுமில்லை. இன்று யுத்த அனர்த்தமும், பொருளாதாரத் தடை களும், நவீன விஞ்ஞான வளர்ச்சிகளின் அனுபவ அறிவின் மந்தமும், சுயசிந்தனையை நீதியான முறையில் வெளியிட - பிரசுரிக்க - முடியாத சுதந்திரச்சிக்கலும் படித்துப் பல பட்டங்களைப் பெற்றுக் கொண்ட போதிலும் அன்றாட உணவிற்கு உழைக்க கௌரவமான வேலையில்லாத் திண்டாட்டமும் இன்னும் அடுக்கிக் கொண்டே போகக் கூடிய பல கஷ்டங்களும் நிறைவு செய்யப்படாத தேவைகளும் இருப்பது, இன்றைய இளைஞர்களின் துர்ப்பாக்கிய நிலை என்றே கூறலாம்.

வானத்து விண்மீன்களில் அல்ல, எம்மிலேதான், எம் தலைவிதி தங்கியுள்ளது. துன்பம எமது வாழ்வில் வருவது இயல்பே, துன்பங்கள் நிரந்தரமானவையல்ல; அவை எப்போதும் பாலத்தின் அடியில் ஓடும் தண்ணீரைப் போன்றவை.

செழுமை நிறைந்த உள்ளம் படைத்த இளைஞர்கள், எம்மை எதிர்க்கும் சமூக விரோத சக்திகளுக்கு பதிலடி கொடுக்கவேண்டும். முடிந்து போனவற்றை நினைத்தோ, கடந்து சென்ற நாள்களைக் குறித்தோ கவலைப்படாதே! நாளைக்காக காத்திராதே! ஒவ்வொரு நாளும் நன்கு வாழ்ந்திடு! எதிர்காலம் உனதே! நாம் இளையவர்கள். வறுமையிலும் வாழ வேண்டும்; வழமையிலும் வாழவேண்டும்.

மாணிக்கக் கல்லுக்கு சிவப்பு நிறத்தைக் கொடுப்பது குரோமியம் ஒக்சைட்டு என விஞ்ஞான அறிவினூடாக அறிகின்றோம். அதே போன்றுதான், இளைஞர்கள் என்ற நல்மாணிக்கங்களும் முன்னேறும் விருப்பு, தேடலுக்குரிய ஆர்வமும் முயற்சியும், புதியவிடயங்களை அறியும் நோக்கம் போன்ற வாயுக்களால் நிரம்பும் போது, வாழ்வில் அசைக்க முடியாதஅடித்தளத்துடன் கூடிய செழுமை நிறைந்த, பசுமை பொருந்திய, வலுவான வாழ்வினை அமைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அவ்வாறு சிறப்பான எதிர்காலம் அமைய, எதிர்காலத்தில் நம்பிக்கை, வளைந்து கொடுக்கும் இயல்பு, விரைவாக தீர்மானத்திற்கு வரும் எண்ணம், புன்னகை செய்யும் முகம், நற்பண்புகள் போன்றவை தேவை.

**ல.அமலானந்தகுமார்**
(கலைப்பிரிவு மாணவன், யா.சென் பற்றிக்ஸ் கல்லூரி)

'அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமென்பதில்லையே' என இள நெஞ்சங்களை, பாட்டுக்கோர் புலவன் பாரதி ஊக்கப் படுத்துகின்றான்.

'கறந்த பால் மடிபுகா; கடைந்த வெண்ணெய் மோர் புகா; விரிந்த பூவும் உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம்புகா.' எனவே தரப்பட்ட சொற்ப காலத்தில், இளமைத் துடிப்புடன், இளகிய இதமான மனதுடன் இனிய உயர்ந்த எண்ணங்களை நினைத்து இமய மலை போல வாழ்வின் சவால்களை எதிர்த்து வென்று சாதனைகள் பல படைக்க இன்றே புறப்படுவீர்!

'வளமான வாழ்விற்கு
இதமான இளம் நெஞ்சம் வேண்டும்' -
மறந்து விடாதீர்கள்!

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் மாற்று அரசா? இடைக்காலத் தேர்தலா?

இந்தியாவில் பாரதீய ஜனதா ஆட்சி கவிழ்க்கப்பட்டுவிட்டது. அ.தி.மு.க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவும் ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமியும் இணைந்து மேடையேற்றிய ஆட்சிக் கவிழ்ப்பு நாடகம் வெற்றிகரமாக நிறைவேற்றுப்பட்டுள்ளது.

இதனை எழுதிக் கொண்டிருந்த சமயம் மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் தீவிரமாக ஈடுபட்டிருந்தது.

மாற்று அரசு அமைப்பது தொடர்பாக காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியை அழைத்து ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் கலந்தாலோசனை நடத்தியுள்ளார். மாற்று அரசு அமைப்பதற்குத் தேவையான உறுப்பினர் பட்டியலை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு சோனியாகாந்திக்கு இரண்டுநாள் அவகாசம் வழங்கப் பட்டது.

பாரதீய ஜனதா அரசைக் கலைப்பதில் பெரும் இழுபறிகளின் மத்தியில் ஒற்றுமை கண்ட எதிர்க்கட்சிகள் மாற்று அரசு ஒன்றை அமைப்பதில் ஒற்றுமைகாணத் தவறியதில் ஆச்சரியம் இல்லை. மாற்று அரசு ஒன்றை ஏற்படுத்தினால் மட்டுமே தமது நோக்கத்தை நிறைவேற்றலாம் என்று செல்வி ஜெயலலிதா மட்டுமல்ல சோனியா காந்தியும் கருதுகிறார்.

ஆனால் பகுஜன் சமாஜவாதிக் கட்சி உட்பட பல எதிர்க்கட்சிகள் நிபந்தனையுடனேயே காங்கிரஸை ஆதரிக்க விருப்பம் தெரிவித்துள்ளன. காங்கிரஸுக்கு இது எதிர்பாராத பின்னடைவு ஆகும்.

இத்தகைய நிலையில் மாற்று அரசு அமைக்கும் முயற்சியில் தற்பொழுது மற்றொரு அணியும் ஈடுபட்டுள்ளது. காங்கிரஸ் தவிர்ந்த எதிர்க் கட்சிகளின் அணியே அது ஆகும்.

காங்கிரஸினால் மாற்று அரசு அமைக்க இயலாது போனால் காங்கிரஸின் ஆதரவுடன் ஆட்சிஅமைக்க இந்த அணி முயற்சி செய்யும்.

முன்னாள் பிரதமர்கள் சந்திரசேகர், தேவகௌடா, ஐ.கே.குஜ்ரால் மற்றும் ரஷ்ட்ரிய ஜனதாதள் தலைவர் லாலுபிரசாத்யாதவ், சமாஜவாதித் தலைவர் முலாயம்சிங் யாதவ், மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாஸு ஆகியோர் காங்கிரஸ் தவிர்ந்த எதிர்க் கட்சிகளின் ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்திருப்பது இந்திய அரசியல் நெருக்கடியில் ஒரு திருப்பம் என்பதில் சந்தேகம் இல்லை.

மொத்தம் 545 உறுப்பினர்களைக் கொண்டது இந்திய நாடாளுமன்றம். இரண்டு ஆசனங்கள் வெற்றிடமாக உள்ளன. சபாநாயகர் நீங்கலாக 542 உறுப்பினர்களில் 272 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றால் மட்டுமே ஆட்சி அமைக்க முடியும். நம்பிக்கைத் தீர்மானத்தில் பெற்ற வாக்குகளுக்கு மேலதிகமாக எதிர்க்கட்சிகளுக்கு இரண்டு வாக்குகள் தேவை. பாரதீய ஜனதாக் கட்சிக்கு அடுத்ததாக 140 உறுப்பினர்களைக் கொண்டது காங்கிரஸ். ஆட்சி அமைப்பதற்கு மேலும் 132 உறுப்பினர்களின் ஆதரவை காங்கிரஸ் பெறவேண்டும்.

## 2 கட்சிகள் பின்னடிப்பு

கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்பில் பாரதீய ஜனதா அரசுக்கு எதிராக வாக்களித்த கட்சிகளில் புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சியும், போவேட் புளொக்கும் அடங்கியுள்ளன. ஆனால் காங்கிரஸ் தலைமையில் மாற்று அரசு அமைக்கப்படுவதற்கு ஆதரவு அளிக்க இந்த இரு கட்சிகளும் மறுத்து வருகின்றன. இந்த இரு கட்சிகளுக்கும் நாடாளுமன்றத்தில் ஏழு உறுப்பினர்கள் உள்ளனர்.

காங்கிரஸ் தலைமையில் மாற்று அரசு உருவாவதில் தடங்கல் ஏற்பட்டதற்கு இதுதான் காரணம்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் பாரதீய ஜனதா அரசுக்கு ஆதரவாக வாக்களித்த சில கட்சிகளை தம்வசம் இழுப்பதில் அல்லது அப்படியான சில கட்சிகளை உடைப்பதில் தற்பொழுது மும்முரமாக காரியங்கள் நடைபெற்றுவருகின்றன. பாரதீய ஜனாதா அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்கிய தெலுங்கு தேசம் ஏற்கனவே இத்தகைய நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது. ஓர் உறுப்பினர் காங்கிரஸ் பக்கம் சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. தமது கட்சியை உடைப்பதற்கு காங்கிரஸ் முயற்சிப்பதாக சந்திரபாபு நாயுடு குற்றஞ்சாட்டியுள்ளார்.

## ஒரு வாக்கினால் தோல்வி

கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பு ஒரு வாக்கினாலேயே தோல்வியடைந்தது. 26 மணி நேர காரசாரமான விவாதங்கள், அமளி துமளிகளுக்கு பின்னர் வாக்கொடுப்பு நடத்தப்பட்டது.

அ.தி.மு.க. விலக்கிக் கொண்ட 18 உறுப்பிர்களின் ஆதரவுக்குப் பதிலாக இந்தியதேசிய லோக்தள்ளின் 4 உறுப்பினர்களினதும், தி.மு.க.வின் 6 உறுப்பினர்களினதும், தமிழ் மாநில காங்கிரஸின் 3 உறுப்பினர்களினதும் ஆதரவைப் பெறமுடியும் என்று பாரதீய ஜனதாத் தலைவர்கள் எதிர் பார்த்தனர். எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று தி.மு.கவும், ஓம்பிரகாஷ் சௌதாலா தலைமையிலான இந்திய தேசிய லோக்தள் கட்சியும் நம்பிக்கைத் தீர்மானத்தில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தன. ஆனால் மூப்பனார் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸ் எதிராகவே வாக்களித்தது.

## மாயாவதியின் மனமாற்றம்

கன்ஷிராம் தலைமையிலான பகுஜன் சமாஜவாதிக்கட்சி நம்பிக்கை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது நடுநிலைமை வகிக்கப் போவதாகவே கடைசி நாள் வரை தெரிவித்து வந்தது. ஆனால் அந்தக்கட்சியின் உப தலைவர் செல்வி மாயாவதியை காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி சந்தித்துப் பேசிய பின்னர் நிலைமையில் திடீர் மாற்றம் ஏற்பட்டது. நம்பிக்கைத் தீர்மானத்துக்கு எதிராக பகுஜன் சமாஜவாதிக்கட்சி உறுப்பினர்கள் வாக்களித்தனர். நாடாளுமன்றத்தில் இந்தக் கட்சிக்கு 5 உறுப்பினர்கள் உள்ளனர்.

காங்கிரஸ் உறுப்பினரும் ஒரிஸா முதலமைச்சருமான கிரிதர் கொமாங் நம்பிக்கைததீர்மானத்தில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டது -

தேசிய மாநாட்டுக்கட்சி உறுப்பினர்களில ஒருவரான சாய்புதீன சோஸ் கட்சியின் முடிவுக்கு மாறாக நம்பிக்கைத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்து - ஆகியவை வாக்கெடுப் பின் போது பாரதீய ஜனதா அரசு சந்தித்த எதிர்பாராத பின்னடைவுகள் ஆகும்.

## வாக்கெடுப்பில் தப்பியிருக்கலாம்

காங்கிரஸ் உறுப்பினரான கிரிதர் கொமாங் தற்பொழுது ஒரிஸா மாநில முதலமைச்சராக இருக்கிறார். அவர் முதலமைச்சராக பதவி ஏற்றபோதிலும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்காததால் அவருக்கு வாக்களிக்க அதிகாரம் உண்டு என்று எதிர்க்கட்சியினர் வாதிட்டனர். பாரதீய ஜனதாகட்சி உறுப்பினர்கள இதனை எதிர்த்தனர்.

நீண்ட நேரம் இடம்பெற்ற வாதப் பிர்திவாதங்களின் பின்னர் கிரிதர் கொமாங் தனது மனச்சாட்சியின்படி வாக்களிக்கலாம் என்று சபாநாயகர் பி.எம். பாலயோகி தீர்ப்பு வழங்கினார். இந்தத் தீர்ப்பை பயன்படுத்தி கிரிதர் கொமாங் அரசுக்கு எதிராக வாக்களித்தார்.

சபாநாயகர் இந்த விவகாரத்தில் தவறிழைத்துவிட்டார் என்று பாரதீய ஜனதாக்கட்சி கருதுகிறது. கிரிதர் கொமாங் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படாதிருந்தால் நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசு தரப்பினரும் எதிர்த் தரப்பினரும் தலா 269 வாக்குகளைப் பெற்றிருப்பர். தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த சபாநாயகா தமது வாக்கைப் பயன்படுத்தி அரசைக் காப்பாற்றியிருக்க முடியும்.

## 3 வருட காலத்தில் 5 ஆவது அரசு

மாற்று அரசு ஒன்று பதவி ஏற்றால் அது கடந்த 3 ஆண்டுகளில் இந்தியாவில் பதவியேற்கும் 5 ஆவது அரசாக இருக்கும். 1996இல் நடைபெற்ற தேர்தலின் பின்னர் பதவியேற்ற பாரதீய ஜனதா அரசு 13 நாள்கள் மட்டுமே ஆட்சியில் நீடித்தது.

இதன் பின்னர் தேவகௌடா தலைமையில் ஐக்கிய முன்னணிஅரசு பதவியேற்றது. இந்த அரசுக்கு காங்கிரஸ் வெளியில் இருந்து ஆதரவு வழங்கியது. 1997ஏப்ரலில் தேவகௌடா அரசுக்கு வழங்கிய ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொண்டது. 11 மாத கால ஆட்சியின் பின்னர் தேவகௌடா அரசு பதவி இழந்தது.

பின்னர் ஐ.கே.குஜ்ரால் தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டது. அந்த ஆட்சி 7 மாதங்கள் மட்டுமே நீடித்தது. அதில் அங்கம் வகித்த தி.மு.க. அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கோரிக்கை விடுத்தது. குஜ்ரால் இதனை எதிர்பாராத விதமாக நிராகரித்தபோது குஜ்ரால் அரசையும் காங்கிரஸ் கவிழ்த்தது. 1997 நவம்பரில் குஜ்ரால் அரசு பதவி துறந்ததை அடுத்தே 1998 பெப்ரவரியில் மீண்டும் தேர்தல் நடைபெற்று வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதா அரசு பதவிக்கு வந்தது. காங்கிரஸ் தேர்தலை சந்திக்க தயார் இல்லாத நேரம் தேர்தலைச் சந்தித்தமை சீதாராம கேசரி அப்பொழுது செய்த பெரும் தவறு ஆகும்.

ஜெயா அரசை பதவி கவிழ்ப்பதில் தி.மு.க. விவகாரத்தை ஓர் அஸ்திரமாக காங்கிரஸ் பயன்படுத்தியதால் காங்கிரஸை எந்தக் கட்டத்திலும் ஆதரிக்கும் நிலையில் தி.மு.க. இல்லை. அத்துடன் அ.தி.மு.க. கூட்டுச்சேரும் அரசில் இணையவும் தி.மு.க. தயார் இல்லை.

## சூத்திரதாரி சுப்பிரமணியசுவாமி

பாரதீய ஜனதா அரசு கவிழ்ப்பின் சூத்திரதாரி சுப்பிரமணிசுவாமி என்றே கருதப்படுகின்றது. அமைச்சர் பதவியை எதிர்பார்த்தே சுப்பிரமணிய சுவாமி பாரதீய ஜனதா ஆட்சிக்கு முதலில் ஆதரவு வழங்கினார். ஆனால் அவர் எதிர்பார்த்தது கிடைக்கவில்லை. பாரதீய ஜனதாத் தலைவர்கள் அவரை நம்பிக்கைக்குரியவராகக் கருதவில்லை.

ஜெயலலிதா மீதான ஊழல், மோசடிகள், வழக்குகள், போபர்ஸ் பீரங்கி ஊழல் வழக்குகள் ஆகியவை சுப்பிரமணியசுவாமிக்கு கைகொடுத்தன. ராஜீவ் காந்தி சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் போபர்ஸ் பீரங்கிப் பேர ஊழல் விவகாரம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இத்தாலிய நாட்டவரான குவத்ரோச்சி என்பவருக்கு இந்திய உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. அப்போது ராஜீவ் காந்தி சம்பந்தப்பட்ட மேலும் பல விடயங்கள் அம்பலமாகலாம்.

## கரணம் தப்பினால் மரணம்

ஜெயலலிதாவைப் பொறுத்தவரையில் கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையிலேயே இந்த அரசியல் சதுரங்க விளையாட்டில் இறங்கினார்.

நம்பிக்கைத் தீர்மானத்தில் பாரதீய ஜனதா அரசு வெற்றி பெற்றிருந்தால் நிலைமை வேறாக மாறியிருக்கும்.

உலக உலா

சிலசமயம் சட்ட அமைச்சர் பதவி தி.மு.க.வுக்கு வழங்கப்பட்டிருக்கும். தம்மீதான வழக்குகளில் இருந்து மீள முடியாத நிலைமை ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டிருக்கும். அவரின் அரசியல் வாழ்வே முற்றுப் பெற்றிருக்கும்.

ஜெயலலிதாவுக்கு உள்ள பிரதான பிரச்சினை அவர் மீதான வழக்குகள் தான். இந்த வழக்குகளில் ஒன்றிலாவது குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டால் அவர் அரசியலில் ஈடுபட முடியாது.

பார்தீயஜனதா ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அ.தி.மு.க., சட்ட அமைச்சர் பதவியைக் கேட்டுப் பெற்றுக் கொண்டதும் இதனால்தான். ஆனால் ஜெயலலிதாவின் நெருக்குதல்களின் போது அற்பசொற்ப சலுகைகளை மத்திய அரசு வழங்கியதே தவிர முழு அளவில பணிந்து போய்விடவில்லை. கடைசியாக ஜெயலலிதா மீதான வழக்குகள் தனி நீதிமன்றத்தில் இருந்து மத்திய அரசு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டன. ஆனால் அவருக்கு எதிரான வழக்குகள் எதுவும் வாபஸ் பெறப்படவில்லை.

## தேர்தலுக்கு காங். தயாரில்லை

மாற்று அரசாங்கம் அமைக்க காங்கிரஸ் மேற்கொள்ளும் முயற்சிகள் அது இன்னும் தேர்தலுக்குத் தயார் இல்லை என்பதையே காட்டுகிறது. சில மாநில சட்டசபைத் தேர்தல்களிலும் இடைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றது உண்மை தான். ஆனால் பொதுத்தேர்தல் ஒன்றினை எதிர்கொள்ளும் நிலையில் அது இன்னும் இல்லை. தேர்தல் ஒன்றுக்குத் தயாராகும் வரை மாற்று அரசு ஒன்றுக்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்குவது அல்லது மாற்று அரசு ஒன்றை அமைப்பதே காங்கிரஸின் நோக்கம்.

## வெளிநாட்டு சக்திகள் தலையீடு?

ஆட்சிக் கவிழ்ப்புக்கு வெளிநாட்டு சக்திகள் துணைபோய் இருக்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் குற்றஞ்சாட்டியுள்ளார். ஆட்சி கவிழ்த்த போது அமெரிக்காவிலும் சீனாவிலும் சில வட்டாரங்களில் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டதாக பாரதீய ஜனதாத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

அணுவெடிப்புப் பரிசோதனைகள் சமீபத்திய ஏவுகணைப் பரிசோதனைகள் பாரதீய ஜனதா அரசு மீது அமெரிக்கா காழ்ப்புணர்வு கொள்ளக் காரணமாக இருந்தன. இந்தியா தன்னுடன் ஆயுத சமபலம் பெற்று வருவதையிட்டு சீனா அச்சம் கொண்டிருந்தது.

சோனியா காந்தி (52வயது) ஒரு வெளிநாட்டவர். அதுவும் ஒரு கிறிஸ்தவர். இத்தகைய நிலையில் ஆட்சிக் கவிழ்ப்பில் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடு குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு அரச சார்பு வெகுஜன தொடர்புச் சாதனங்கள் பெரும் முக்கியத்துவம் கொடுத்திருப்பது சோனியா காந்தி ஆட்சி அமைக்கும் பட்சத்தில் அவர் மீதான நெருக்குதல் எப்படி இருக்கும் என்பதை கோடி காட்டுகிறது.

பாரதீய ஜனதா அரசு பதவி ஏற்ற நாளில் இருந்தே அது கவிழ்ந்து விடும் என்று ஜோஸ்யம் தெரிவிக்கப்பட்டு வந்தது. எனினும் ஒரு வருடத்தை பூர்த்தி செய்த நிலையில் முழுப் பதவிக் காலத்தையும் பூர்த்தி செய்யும் நம்பிகையை பாரதீய ஜனதாத் தலைவர்களான வாஜ்பாயும் அத்வானியும் சமீபத்தில் வெளியிட்டனர். இதனால் தனது பிரதான கோரிக்கைகளை நிறைவேற்றாது அரசு காலத்தைக் கடத்தப் போகிறது என்ற முடிவுக்கு வந்தார் ஜெயலலிதா. அதன் விளைவே தற்போதைய ஆட்சிக் கவிழ்ப்பு ஆகும்.

சோனியா காந்தி தலைமையில் மாற்று அரசு ஏற்படுவதையே ஜெயலலிதா விரும்புகிறார் என்று தெரிகிறது.

தேவகௌடா அரசையும் குஜ்ரால் அரசையும் காங்கிரஸ் வெளியில் இருந்து ஆட்டிப்படைத்தது.

சோனியா தலைமையில் மாற்று அரசு அல்லது மூன்றாவது அணி ஒன்றின் தலைமையில் மாற்று அரசு ஏற்பட்டாலும் அ.தி.மு.கவின நெருக்குதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்.

## மாற்று அரசா? தேர்தலா?

இன்றைய நிலையில் இந்திய அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாண இருவழிகளே உள்ளன. ஒன்று மாற்று அரசு. மற்றது இடைக்காலத் தேர்தல். *



தனது ஆதரவாளர் ஒருவர் வழங்கிய மலர்ச் செண்டுடன் சோனியா காந்தி.



நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்த பின்னர் வாஜ்பாய் பத்திரிகையாளர்களுடன் பேசுகிறார்.



பாரதீயஜனதா அரசுக்கு வழங்கிய ஆதரவை விலக்கிக் கொள்ளும் அறிவிப்பை ஜெயலலிதா விடுக்கிறார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு மக்களுக்கு பயணிகள் கப்பல் வாங்க காசுக் கணக்குப் பார்க்கின்றது அரசாங்கம்!

## ராணுவம் நடத்தும் குடிசனக் கணக்கெடுப்பால் மக்கள் மத்தியில் மனக்குழப்பமும் சந்தேகமும்

உள்ளும் புறமும்

குறுமுனி

'கப்பல் வந்தது. கப்பல் வந்தது கடலில் வந்தது பார்' என்று சிறுவர்கள் பாடி மகிழ்வர்.

துறைமுகங்களுக்குச் சென்றால் அல்லது கடற்கரைக்குச் சென்றால் மட்டுமே கப்பலைக் காணலாம் என்றில்லாமல், அவர்கள் காகிதத்தில் கப்பல் கட்டி விளையாடியும குதூகலிப்பது உண்டு.

கப்பலை நேரில் காணமுடியாவிட்டாலும் கற்பனையில் காணச்செய்கிறது பாடல். நேரில் காணமுடியாத குறையைத் தீர்ப்பதற்காக கப்பலை காகிதத்தில்கட்டி அதைத தண்ணீரில ஓட விட்டு அந்தக்காட்சியைப் பார்த்து மகிழ்வதில் ஒரு திருப்தி.

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த மக்கள். மேற்கண்ட இரண்டில் எதைச் செய்து திருப்தி காண்பது? இரண்டுமே அவர்களின் கடற்பயணத்துக்கு எந்த வகையிலும் உதவாது!

ஆம். காங்கேசன்துறை - திருகோணமலை கப்பற் சேவை கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்ற நிலையைக் கடந்து, கற்பனைக்கும் எட்டாத விடயமாக மாறிவருகிறது. பயணிகள் கப்பற்சேவை எனப் பிரத்தியேகமாக ஒரு சேவை இந்த ஆண்டிலேனும் நடைபெறுமா என்பது மிகவும் கலங்கலாகவே உள்ளது.

சரக்குக் கப்பல்களிலேயே குடாநாட்டு மக்கள் பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம், அசௌகரியம் ஏற்பட்டுள்ளது. அதனை ஒரு குறையாக எவ்வாறு எடுத்துக்கொள்வது? ஒன்றுமே இல்லாதிருப்பதை விட ஏதோ கிடைப்பது பரவாயில்லை என்ற நிலை. சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப்பணத்துத் தாலி போதாதா என்று கேட்பது போல.

ஆனால் சரக்குக் கப்பலைப் பயணிகள் சேவைக்குப் பயன்படுத்தினால் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் வந்து சேர்வதில் தடங்கல் உண்டாகும். இப்பொழுதே பொருள்களின் விலைகள் மக்கள் கைகளுக்கு எட்டாதிருக்கின்றன. கப்பல் இல்லை என்பதால் பொருள்கள் வரமுடியவில்லை எனில் நிலைமை மேலும் மோசமடைந்துவிடும்.

இதனை உணர்ந்து பயணிகள் கப்பற் சேவை ஒன்றை நடத்த வேண்டும் என்று அரசாங்கம் கொள்கையளவில் முடிவு செய்தது ஏதோ உண்மைதான்.

அரசாங்கத்தின் பொறுப்பில் அல்லாமல செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அனுசரணையுடன் அதன் பாதுகாப்பில் பயணிகள் கப்பற் சேவையை நடத்துவதற்கும் அரசாங்கம் (பல மாத் தாமதத்தின் பின்னர்) முன் வந்தது.

### உடையும் தாழி

சித்திரைப் புதுவருடத்திற்குப் பின்னர் காங்கேசன்துறை - திருகோணமலை பயணிகள் கப்பற் சேவை நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. குடாநாட்டு மக்களும் மிக்க நம்பிக்கையுடன் புதிய சேவை எப்போது ஆரம்பமாகும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் கிடைத்தது ஏமாற்றம்தான்.

நெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்த கதையாக, கப்பலைக் கொள்வனவு செய்வது முடங்கலுற்றுள்ளது. அதனைக் கொள்வனவு செய்வதற்கே இன்னும் ஆறு மாதங்கள் செல்லும் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறானால் இந்த வருடத்தில் பயணிகள் கப்பற் சேவை நடைபெறும் என்று எள்ளளவும் எதிர்பார்க்க முடியாது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திணைக்களம் பயணிகள் கப்பற் சேவை நடத்தும் என்பதே அரசாங்கம் செய்த ஏற்பாடு. அதன் பொருட்டு கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு முடிவாகியது. கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன. அமைச்சரவையால் நியமிக்கப பட்ட குழுவே கேள்விப் பத்திரங்களைக் கோரியது.

வெளிநாட்டு நிறுவனங்கள் சில தமது கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தன. கேள்விப் பத்திரக் குழு அவற்றைப் பரிசீலனை செய்தது. கிடைத்த கேள்விப் பத்திரங்களில் ஆகக் குறைந்த தொகைக்குரிய கப்பலை வாங்கினாலும் அரசுக்குக் கட்டுப்படியாகாது என்றவாறு அக்குழு கருத்துத் தெரிவித்தது.

கப்பலின் கொள்விலை, அந்தப் பணத் தொகைக்கான வட்டி மற்றும் செலவினங்களைக் கணக்கிட்டால், ஒரு பயணியை ஒரு வழிப் பாதையில் கூட்டி வருவதற்கு சுமார் ஐயாயிரம் ரூபா செலவாகும். அவ்வாறு அதிக கட்டணம் அறவிடுவது சாத்தியமில்லை என்பது ஒரு புறம்.

அவ்வாறு பெருந்தொகையை அறவிடுவது என வைத்துக் கொண்டாலும், கப்பற் கொள்வனவுக்கு நிதி வழங்க முன்வந்த வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைக்கு அது கட்டுபடியாகாது. கப்பலைக் கொள்வனவு செய்வதற்கு பணம் வழங்கினால், சபையின் இந்த வருடச் செலவுகளுக்கென அரசினால் ஒதுக்கப்பட்ட பணம் முற்றாகத் தீர்ந்துவிடும். அதன் பின்னர் இவ்வருடத்தில் திட்டமிட்ட பணிகள் எதனையும் செய்யமுடியாது: பணம் கிடையாது: ஸ்தம்பித்துவிடும்.

இந்தக் காரணத்தை முன்வைத்து பயணிகள் கப்பல் கொள்வனவு செய்யும் முயற்சியை வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபை கைவிட்டுள்ளதாக மிக நம்பிக்கையாக அறியவருகிறது.

### கணக்குப் பார்க்கும் அரசு

பயணிகள் கப்பற் சேவை குறித்து ஆராய்ந்த உயர் மட்டக் கூட்டத்திலும் பாதகமான நிலையே ஏற்பட்டது. இம்மாதம் 20ஆம் திகதி நடைபெற்ற பிரஸ்தாப கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, அத்தியாவசிய சேவைகள் நாயகம் திணைக்களம், வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். அவர்கள் இப்போதைய கேள்விப் பத்திரங்களை நிராகரிக்க முடிவு செய்தனர்.

மீண்டும் ஒரு முறை கப்பல் கொள்வனவுக்கான கேள்விப் பத்திரங்களைக் கோருவதென முடிவு செய்யப்பட்டது. இவ்விடயம் புத்துணர்வு பெற்று மீண்டும் கேள்விப் பத்திரங்களைக் கோரி, கப்பலைக் கொள்வனவு செய்வதற்கு எப்படியும் ஆறு மாதங்கள் செல்லும் என்பது கணக்கு!

இப்போதைக்கு குடாநாட்டிலிருந்து பயணிகள் கப்பலில் பயணம் செய்யமுடியாது: உள்ளவாறு சரக்குக் கப்பலே தஞ்சம் எனக் கொண்டு பிராணிகளைவிடக் கேவலமாக கடல் கடக்க நேரிடும். என்ன செய்வது? தமிழர் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஏனோதானோ போக்கு ஒரு புறமிருக்க கணக்கும் பார்க்கிறது அரசாங்கம்!

போருக்குக் கோடிக் கணக்காகச் செலவிடும் அரசு குடாநாட்டு மக்களுக்கு வசதியுள்ள கப்பற் சேவை ஒன்றை நடத்துவதற்குக் கணக்குப் பார்க்கிறது.

அரசாங்கத்தினால் பயணிகள் கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்ய முடியாவிடில், தனியாருக்குச் சொந்தமான கப்பலை சேவைக்கு அமர்த்தலாமா என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் பரிசீலனை செய்து வருவதாகப் பிந்திக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

தனியார்துறையினர் ஒருவர் ஏற்கனவே கொள்வனவு செய்த "குட்வில் ஹைட்" என்ற கப்பலை காங்கேசன் - திருமலை பயணிகள் சேவைக்கு வழங்குவதற்கு அவர் விருப்பம் தெரிவித்துள்ளார் என்று அறியப்படுகிறது. எனினும் இது குறித்து அரசுத் தரப்பு உடனடியாக முடிவு செய்யவில்லை.

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் லண்டனில் நடைபெறும் கருத்தரங்கு ஒன்றுக்குச் செல்கிறார். அவர் அங்கிருந்து திரும்பி வந்ததும், காங்கேசன் - திருமலை பிரயாணிகள் கப்பற் சேவை குறித்து ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவார் என்று அறியப்படுகிறது.

அதிகார சபையின் தலைவர் ஒபடகே ஜனாதிபதியிடம் ஏற்கனவே தனியார் கப்பலை சேவைக்கு அமர்த்துவது குறித்து பிரஸ்தாபிதத்துள்ளார் என்றும் சொல்லப்படுகிறது.

எல்லாம் சாதகமாகவே நடைபெறுமாயின் தனியார் கப்பல், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் சேவை ஆற்றுவதற்கும் ஏற்பாடு செய்யப்படும் என்று நம்பப்படுகிறது. இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் தரப்புடனும் தொடர்பு கொண்டு வழி முறைகள் (Modalities) வகுக்கப்படலாம் என அறியப் படுகிறது.

எப்படியோ எல்லாத்தரப்பினர்களும் குடாநாட்டு மக்களுக்கு வசதியான, பாதுகாப்பான லாபகரமான கப்பற் பயணத்துக்கு வழி செய்ய வேண்டும். அது சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் உள்ள தட்டிக்கழிக்க முடியாத பொறுப்பாகும். நன்றே நடக்கும் என நம்புவோமாக.

*   *   *

குடிசன மதிப்பீடு என்பது வெறும் புள்ளி விவரம் பேணுதல் மட்டுமன்று. அது நாட்டின் அபிவிருத்தி மற்றும் பிரதேச வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிப்படையாக அமைவது. கல்வி, தொழில் மேம்பாடு, வேலைவாய்ப்பு தொடர்பான வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்படும் போது குடிசன மதிப்பீட்டில் இருந்து பெறப்படும் புள்ளி விவரம் முக்கிய பங்கு வகிக்கிறது.

உதாரணத்துக்குச் சிலவற்றை இங்கே குறிப்பிடலாம். ஒரு மாவட்டத்தின் குடிசன எண்ணிக்கையின் அடிப்படையிலேயே அந்த மாவட்டத்துக்குரிய மக்கள் பிரதிநிதிகளின் (எம்.பிக்களின்) எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது. அரசாங்கத் திணைக்களங்கள் மேற்கொள்ளும் அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி ஒதுக்கப்படும்போது மாவட்டத்தின் குடிசன எண்ணிக்கையும் கணக்கில் எடுக்கப்படுகிறது. பல்கலைக்கழக அனுமதியிலும் மாவட்டச் சனத்தொகை பங்கு வகிக்கிறது.

மேலும் குடிசன மதிப்பீடு மேலெழுந்த வாரியாக அன்றி மிகவும் திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படும் முக்கிய பணியாகும். இலங்கையில் முதன்முதலாக 1886 ஆம் ஆண்டில் குடிசன மதிப்பீடு நடத்தப்பட்டது. சர்வதேச சனத்தொகை மதிப்பீட்டு ஸ்தாபனத்தின் உதவியுடன் அப்பணி செய்யப்பட்டது. அதன் பின்னர் குடிசன மதிப்பீடு, புள்ளி விவரத் திணைக்களமே மதிப்பீடு நடத்துவதற்கு முற்றிலும் பொறுப்பாக உள்ளது. மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர் குடிசன எண்ணிக்கையைக் கணக்கெடுக்கும் பணிக்குப் பொறுப்பாக இருப்பார்.

முதலில் ஏழு வருடங்களுக்கு ஒரு முறை குடிசன மதிப்பீடு நடத்தப்பட்டு வந்தது. இப்போது பத்து வருடங்களுக்கு ஒரு முறை இக்கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. குடிசன மதிப்பீடு நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் ஒரே காலப்பகுதியிலேயே நடத்தப்படுவது விதிமுறை.

இலங்கையில் நாடு முழுவதிலுமான குடிசன மதிப்பீடு 1981 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. முறைப்படி அடுத்த கணக்கெடுப்பு 1991 இல் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

### போரினால் தடங்கல்

வடக்கு - கிழக்கில் போர் நடைபெற்றதால் இங்கு குடிசன மதிப்பீட்டை நடத்தமுடியவில்லை. எல்லா மாவட்டங்களிலும் ஒரே வேளையில் குடிசனக் கணக்கெடுப்பு நடைபெற வேண்டும் என்ற விதிமுறைக்கு ஏற்ப நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அது நடத்தப்படவில்லை. எனினும் இந்த விதியில் விதிமுறையைத் தளர்த்தி 1994 ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் குடிசன மதிப்பீடு நடத்தப்பட்டது.

இத்தகைய பின்னணியில் எதிர்வரும் 2001 ஆம் ஆண்டில் நாடளாவிய முறையில் சனத்தொகை மதிப்பீடு நடத்துவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில், குடிசன மதிப்பீடு புள்ளிவிவரத் திணைக்களத்தின் மூலம் சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேற்படி திணைக்கள அதிகாரிகள் வன்னி சென்று தமது பணியைச் செய்வதற்கு விடுதலைப் புலிகள் அனுமதியும் வழங்கியிருந்தனர். (சஞ்சீவி - உள்ளும் புறமும் -30.1.1999) குடிசன மதிப்பீட்டுக்கு மட்டுமன்றி நிவாரணம் வழங்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கையை சரிவர அறிந்து கொள்வதும் இந்தப் பணியின் நோக்கமாக இருந்தது.

குடிசன மதிப்பீடு புள்ளிவிவரத் திணைக்கள அதிகாரிகள் கடந்த மார்ச் மாதத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் வழித்துணையுடன் வன்னிக்குள் செல்வது: அவ்வேளை இராணுவமும் விடுதலைப் புலிகளும் தாக்குதல் நிறுத்தம் செய்வது என்ற இணக்கப் பாட்டுடனேயே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால் இராணுவத்தினர் மார்ச் முதல் வாரத்திலேயே யுத்தகோஷம் - 1 இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்ததோடு அந்த முயற்சி தடைப்பட்டது. தவிடு பொடியானது.

போர் காரணமாக வடக்கு - கிழக்கில 1981 ஆம் ஆண்டின் பின்னர் குடிசன மதிப்பீடு நடைபெறமுடியாதிருக்கும் சூழ்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் குடிசன மதிப்பீடு ஒன்று படையினரால் இப்போது மின்னாமல் முழங்காமல் திடீரென மேற்கொள்ளப்ப்ட்டு வருகிறது.

இதற்கென மும்மொழிகளிலும் அச்சிடப்பட்ட படிவங்களைப் படையினர் கிராமசேவை உத்தியோகத்தர்கள் மூலம் குடியிருப்பாளர்களுக்கு விநியோகித்துள்ளார்.

சில பகுதிகளில் குறிப்பிட்ட திகதியன்று இராணுவத்தினர் வீட்டுக்கு வருவர் என்றும் அவ்வேளையில் வீட்டில் வசிக்கும் சகலரும் தவறாது அங்கு பிரசன்னமாக இருக்க வேண்டும் என்றும் கிராமசேவகர்கள் தெரிவித்திருந்தனர்.

அவ்வாறே அந்தத் தினங்களில் கிராம சேவை உத்தியோகத்தர்களுடன் இராணுவத்தினரும் வீடுகளுக்குச் சென்று "கணக்குப்" பார்த்திருக்கின்றனர். சில இடங்களில் படையினர் ஒரு வீட்டில் தங்கிநின்று அந்த ஒழுங்கையில் உள்ள ஏனைய குடியிருப்பாளர்களை வரச்சொல்லி சரிபார்த்ததும் உண்டு!

### மக்கள் குழப்பம்

இச்சம்பவங்களால் குடிசன மதிப்பீடு எடுப்பதற்கும் இராணுவத்தினருக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டு மக்கள் பெரும் குழப்பம் அடைந்துள்ளனர். அச்சமும் கொண்டுள்ளனர். குடிசன மதிப்பீடு நடத்தும் உத்தியோகபூர்வமான பொறுப்பு அரச அதிபருக்கும், உதவி அரச அதிபர்களுக்கும், குடிசன மதிப்பீடு புள்ளி விவரத் திணைக்கள அதிகாரிகளுக்கும் இருக்கும் போது இராணுவத்தினர் ஊடாக இந்தப் பணியை அரசு செய்விப்பது எதற்காக? எந்த உள்நோக்கத்துடன்? - என்று பொதுமக்கள் சந்தேகமும் கொள்கின்றனர்.

இப்போது வழங்கப்பட்ட படிவங்களுக்கும் குடிசன மதிப்பீடு புள்ளி விவரத் திணைக்களத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று யாழ். செயலக வட்டாரங்கள் தொவித்தன. இத்த[illegible] வழங்கப்படுவது குறித்து தமக்கு எவ்வித தகவலோ அறிவித்தலோ கிடைக்கவில்லை என்று யாழ். அரசாங்க அதிபர் சண்முகநாதன் தெளிவுபடுத்தினார்.

இப்படிவங்கள் கொழும்பில் உள்ள இராணுவ அதிகாரிகளால் பெரிய பொதிகளில் கொண்டு வரப்பட்டு, இங்குள்ள அந்தந்தப் பகுதிக்குரிய இராணுவப் பொறுப்பதிகாரிகளின் அலுவலகங்களில் வைத்து, கிராம சேவை உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டன. இராணுவப் பொறுப்பதிகாரிகள் அழைத்ததன் நிமித்தமே கி.சே.உத்தியோகத்தர்கள் அங்கு சென்றனர்.

சிவில் நிர்வாகம் ஒருபுறம் இயங்க, அதற்கு எவ்வித அறிவிப்பும் இல்லாமல் இராணுவம் தன்னிச்சையாக குடிசன மதிப்பீடு நடத்துகிறதெனில் -

சிவில் நிர்வாகத்துக்குச் சமாந்தரமாக இராணுவ நிர்வாகமும் நடைபெறுவதற்கு அரசு வழி செய்கிறது, அடிகோலுகிறது - என்றே குடாநாட்டு மக்கள் கருதுகிறார்கள்.

இராணுவம் நடத்துவது உத்தியோகபூர்வமான குடிசன மதிப்பீடு அல்ல, வேறு ஒரு தேவைக்கான கணக்கெடுப்பு என்று கொண்டாலும் இங்குள்ள சிவில் நிர்வாக இயந்திரத்தின் மீது நம்பிக்கை இல்லாமல் அரசு சந்தேகம் கொள்வதாகவே அர்த்தம் பிறக்கிறது அல்லவா?

### கழுகுப் பார்வையா?

குடியிருப்பாளர் அட்டவணை போன்ற படிவங்கள் பாதுகாப்புச் சம்பந்தப்பட்டவை என்பதால் மக்கள் அவை குறித்துச் சந்தேகப்படவில்லை. ஆனால் குடாநாட்டு மக்கள் எல்லோரும் இன்னமும் மீளக் குடியமராத நிலையில், வன்னியில் இன்னும் சுமார் (ஆகக் குறைந்தது) ஒன்றரை லட்சம் மக்கள் அகதிகளாக உள்ள நிலையில், குடிசன மதிப்பீடு என்ற பெயரில் கணக்கெடுப்பு நடத்துவது எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல. குடாநாட்டு மக்களையும் அவர்களின் அதிகாரிகளையும் அரசு சந்தேகத்துடன் பார்க்கிறது என்பதால் இந்த நடவடிக்கை - என்று ஸ்ரீமான் பொதுசனம் கேட்கிறார்!

இந்தக் கணக்கெடுப்பு நிவாரணத்தை வெட்டுவதற்காகவா அல்லது யாழ்ப்பாணத்தின் சனத்தொகையை அரசு தான் நினைத்தவாறு நிர்ணயிப்பதற்காகவா அல்லது வேறு பாதுகாப்பு சம்பந்தமான சந்தேக நோக்கத்துடனா என்று மக்கள் குழம்பிப் போயுள்ளனர்; அச்சமடைந்துள்ளனர்.

குடாநாட்டு மக்களை விடுவித்துள்ளோம், அவர்களின் இதயங்களை வெல்வோம் என்று அரசுத் தலைவர்கள் கூறுவதற்கு முற்றிலும் முரணான, எதிரான கழுகுப் பார்வை இது! இதனைப் பற்றி உண்மையான, தெளிவான விளக்கத்தை அரசு கொடுக்காவிடில் குடாநாட்டு மக்கள் அதனை உரிய இடத்தில் வைக்கத் தவறமாட்டார்கள்.

மேலும், இப்போது நடைபெறும் கணக்கெடுப்பால் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறுவோர் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும், அந்தந்தப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் பிரதிநிதியே அடுத்த மாதத்திற்கான நிவாரணச் சீட்டை வழங்குவதற்கு சிவில் நிர்வாக இயந்திரம் ஏற்பாடு செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. கிராம சேவையாளர் அலுவலகத்துக்கு உதவி அரச அதிபரின் பிரதிநிதி சென்று மேற்குறிப்பிட்ட சீட்டை வழங்குவார்.

எவ்வாறெனினும், இப்போதைய கணக்கெடுப்பு குறித்து மக்கள் மத்தியில் தோன்றியுள்ள மனக்குழப்பங்கள் அரசினால் உத்தியோகபூர்வமாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

---

### தமிழ் ஆய்வி.....

*(கடந்த வார சஞ்சீவியின் முதலாம் 'பக்கத்தில் வெளியான 'தமிழ் ஆய்வில் - நேற்று - இன்று - நாளை' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது. இப்பகுதி அன்றைய சஞ்சிகையில் தவறுதலாக இடம்பெற வில்லை.)*

........ தாங்கிய சிந்தனைகள் தமிழ் ஆய்விலும் திறனாய்வியலிலும் இன்று பயில்கின்றன. படைப்பாக்கத்துக்கு அடிநாதமான உள்ளமைப்பை இனங்காணும் முயற்சி அமைப்பியல். அத்தகு உள்ளமைப்பை இனங்காண முடியுமா என வினா எழுப்புவது பின் அமைப்பியல். சமூகத்தின் மையப்படுத்தப்பட்ட இடத்தினின்று விளிம்பை நோக்கிப் பார்வையை நகர்த்துதல், அனைத்துலகு சார்ந்த பொதுப்பார்வையினின்று பிரதேச - உள்ளூர் சார்ந்த சமூக நிலைகள் வரை பார்வையைக் கிளைவிட்டுச் செல்லத் தூண்டுதல், பேரரசியலிலிருந்து நுண்ணரசியலுக்கு அழைத்தல் முதலிய பல்வேறு கருத்து நிலைகளை உள்ளடக்கியதாக அமையும் சிந்தனை பின் - நவீனத்துவம். (இது தனியாக விரிவாக பேசவேண்டிய பொருட்பரப்புடையது. இச் சில கட்டுரையில் அது சாத்தியமில்லை)

இவ்வாறான புதிய வரவுகள் சில கூறுகளில் மார்க்சியம் சார்ந்த சமூகப் பார்வையை மேலும் நுட்பமாக கூர்மைப்படுத்தி வளர்த்துச் செல்வது தெரிகிறது. அதே வேளை சில கூறுகள் மார்க்சியத்தை மட்டுமல்ல பொதுவான சமூகப் பெறுமானங்களையும் மறுக்கும் அல்லது பின் தள்ளும் பண்பு கொண்டவையாகவும் உள்ளன என்பதையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டியுள்ளது. இவற்றை எப்படிக் கணிப்பது? எப்படி ஏற்பது?

இன்றைய நிலையில் தமிழ் ஆய்வியல், திறனாய்வியல் சூழலில் முக்கிய விவாதத்திற்குரிய பிரச்சினைகள் இவைதான். நாளைய ஆய்வுலகு இப்பிரச்சினையை எதிர்கொண்டு கடந்து செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தி வந்தது!

ஓர் ஊரிலே வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் உலக அனுபவம் மிக்கவர். நல்ல புத்திசாலியாகவும் விளங்கினார். ஒரு நாள் அவருடைய மகன் தன் நண்பன் என்று ஒருவனை அழைத்து வந்தான். அந்த நண்பனின் குணங்களைச் சிறிது நேரத்தில் அறிந்து கொண்ட வியாபாரி, தனது மகன் அவனுடன் நட்பாய் இருப்பது நல்லதல்ல என்று எண்ணினார். அதை மகனிடமும் கூறினார்.

அதற்கு அவரது மகன், "ஒருவனை முதல் தடவை பார்த்த மாத்திரத்தில் உங்களால் அவனைப் பற்றி என்ன தெரிந்து கொள்ள முடியும்? எனக்கு அவனை வெகுநாட்களாகத் தெரியும். அவன் மிகவும் நல்லவன்" என்றான்.

அதற்கு வியாபாரி, "மகனே உன்னால் அறிந்து கொள்ள முடியாததை என் அனுபவத்தால் அறிய முடியும். அதனால்தான் சொன்னேன்." என்றார். ஆனால் மகனோ கோபம் கொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டான்.

வியாபாரிக்கு மகனின் பிடிவாதம் கவலையளித்தது. அதனால் மனதிற்குள் ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டார். மகனிடம் சென்று "மகனே! நாமிவரும் வியாபார விஷயமாக வெளியூருக்குச் செல்ல வேண்டும். அதனால், நம்முடைய பொக்கிஷங்களை ஒரு பெட்டியில் போட்டுப் பூட்டி, நம்பிக்கையான ஒருவரிடம் கொடுத்து நாம் வரும்வரையில் பாதுகாப்பாக வைக்கச் சொல்ல வேண்டும். யாரிடம் கொடுக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

அதற்கு அவருடைய மகன், "என் நண்பன் இருக்கிறானே. அவனிடம் கொடுத்து வைப்போம். அவன்தான் நம்பிக்கையானவன்" என்றான்.

வியாபாரியும் நன்கு இறுக்கமாகப் பூட்டுக்களைக் கொண்டு பூட்டப்பட்ட மரப்பெட்டி ஒன்றை மகனிடம் கொடுத்து, அவனுடைய நண்பனிடம் பாதுகாப்பாக வைக்கும்படி சொன்னார்.

வியாபாரியும் மகனும் சிலமாதங்கள் வெளியூர்களில் பயணம் செய்தனர். பின்னர் ஊர் திரும்பியதும், "மகனே! பொக்கிஷங்களை உன் நண்பனிடமிருந்து திரும்ப வாங்கிக் கொண்டு வா" என்றார் தந்தை.

நண்பனின் வீட்டுக்குச் சென்ற மகன் கோபமாகத் திரும்பிவந்தான். "ஏன் இப்படிச் செய்தீர்கள்? வெறும் கல்லையும், மண்ணையும் பெட்டியில் போட்டு வைத்துப் பொக்கிஷம் என்று எதற்கு என் நண்பனை ஏமாற்றினீர்கள்? என் நண்பன் என்னிடம் சரியாகப் பேசக் கூட இல்லை. எல்லாம் உங்களால் வந்த வினைதான்" என்று கோபாவேசமாகப் பேசினான்.

"அது சரி, பெட்டியின் பூட்டுக்களைத் திறந்து பார்க்காமல் எப்படி அதனுள் இருக்கும் பொருள்களைப்பற்றி உன் நண்பனால் கூற முடிந்தது? நம்பிக்கையானவன் என்று அவனிடம் கொடுத்த பொருளை நம்மைக் கேட்காமல் அவன் எப்படித் திறந்து பார்க்கலாம்? இதிலிருந்தே அவனது கயமைத்தனம் உனக்குப் புரியவில்லையா?" என்று மகனைப் பார்த்துக் கேட்டார் தந்தை.

மகனும் யோசித்தான். தன் நண்பன் மோசக்காரன் என்பதைப் புரிந்து கொண்டான். உலக அனுபவம்மிக்கவரான தந்தையின் வார்த்தைகளை மதிக்காமற் போனதற்கு வருந்தி அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

- நம்பி -

# நொடிப்பொழுது

1. செலவில்லாமல் வீடுகட்டி நிலையில்லாமல் வாழ்பவன் யார்?
2. கிட்டக் கிட்டத் தெரியும். கிட்டப் போக முயன்றால் எட்ட எட்டப் போகும். அது என்ன?
3. வெட்டலாம்: கட்டலாம்: ஆனால் கொண்டு வர முடியாது. அது என்ன?
4. விழுந்தால் வெளுக்கும்: வெயிலால் சிவக்கும்: வறுத்தால் மணக்கும்: சுவைத்தால் இனிக்கும். அது என்ன?
5. நீரிலே பிறந்து நீரிலே அழிந்து போகிறவன். அவன் யார்?

*பு.வனிதா*
*கட்டப்பிராய்.*

**விடைகள்**

1. சிலந்தி. 2. வானம். 3. வரம்பு. 4. இலுப்பம் பூ 5. உப்பு.


# சொற்றேடல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள தசவல்களை வைத்துக் கொண்டு 25 கட்டங்களிலுமுள்ள சொற்களை நிரப்ப வேண்டும். ஒவ்வொரு சொல்லிலும் வரவேண்டிய "பி" என்ற எழுத்து அந்தந்தப் பெட்டிக்குள் காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக முதலாவது கட்டத்துக்குரிய சொல் "பிறப்பு". எங்கே உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள் பார்க்கலாம்.


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பி | | | |
| 2. | | பி | | |
| 3. | | | பி | |
| 4. | | | | பி |
| 5. | | | பி | |
| 6. | | பி | | |
| 7. | பி | | | |
| 8. | | பி | | |
| 9. | | | பி | |
| 10. | | | | பி |
| 11. | | | பி | |
| 12. | | பி | | |
| 13. | பி | | | |
| 14. | | பி | | |
| 15. | | | பி | |
| 16. | | | | பி |
| 17. | | | பி | |
| 18. | | பி | | |
| 19. | பி | | | |
| 20. | | பி | | |
| 21. | | | பி | |
| 22. | | | | பி |
| 23. | | | பி | |
| 24. | | பி | | |
| 25. | பி | | | |

1. தோற்றம்.
2. விருப்பம்.
3. பெண்தெய்வம்.
4. தலையில் கட்டுவது.
5. திரிகடுகத்தில் ஒன்று.
6. நிறவுதல்.
7. ஒத்த உருவம்.
8. இவளும் பெண் தெய்வமே.
9. வணங்கு.
10. பேரிகை.
11. அழை.
12. சாபம் கொடுத்தல்.
13. பெண் யானையின் நடை.
14. ஒரு நிறம்.
15. கையால் தாங்கு.
16. நொதியத்தைத் தருவது.
17. தேய்ந்து செல்லும் மதி.
18. விருப்பம் கொண்டவன்.
19. சச்சரவு.
20. திருவள்ளுவன் சகோதரன்.
21. ஒரு சமுத்திரம்.
22. எண்ணெய் வள நாடு.
23. ஆபிரிக்க நாடு.
24. முஸ்லிம்களின் வழிகாட்டி.
25. இரைப்பையில் சுரக்கப்படுவது.

(விடை XIV ஆம் பக்கத்தில்)




# வித்தியாசங்கள் எவை?



மேலேயுள்ள இரண்டு படங்களுக்கும் இடையில் குறைந்தபட்சம் ஒன்பது வித்தியாசங்கள் உள்ளன. அவை எவையெனக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

(விடைXIV ஆம் பக்கத்தில்)

# உலகக் குழந்தைகள் உறுதிமொழி

சுண்டியே குடலும் காயச்
சுடுகிற பசியும் ஓயக்
கொண்டிடும் கூழைக்கூடக்
குளிக்காமல் புசிக்கமாட்டோம்!

கண்டதும் நாவில் நீரும்
கரை மீறிய ஆறாய் ஊறும்
பண்டமாய் இருந்தால் கூடப்
பசிக்காமல் புசிக்க மாட்டோம்!

என்னதான் பாசத்தோடு
இன்சுவைப் பாலும்தேனும்
அன்னையே கொடுத்தால்கூட
அளவின்றிப் புசிக்க மாட்டோம்!

எண்ணமும் மனமும் வேறு
இலக்கினில் திரியச் சோறு
உண்பதோர் கடனே என்று
ஒப்புக்குப் புசிக்க மாட்டோம்!

விண்ணவர் அமிழ்தைக்கூட
விருந்தினர் தம்மைவீட்டுத்
திண்ணையில் அமர்த்திவிட்டுத்
தெரியாமல் புசிக்க மாட்டோம்!

தன்னுடல் பெருக்க எண்ணித்
தவறியும் கருணைஇன்றி
இன்னொரு உயிரைக் கொன்று
இறைச்சியைப் புசிக்க மாட்டோம்!

வன்புயல் வறுமை சீறி
வாழ்க்கையின் திசைகள் மாறித்
திண்டாடி அலைந்தால் கூடத்
திருடியே புசிக்க மாட்டோம்!

சென்டுடல் வதங்கி வாடிச்
செவிகளும் வறண்டு மூடிக்
கண்களும் இருண்டால் கூடக்
கடன்வாங்கிப் புசிக்க மாட்டோம்!

உண்ணவே எதுவும் இன்றி
உயிர்போகும் நிலையில் கூடக்
கண்ணியம் இழந்து தாழ்ந்து
கைநீட்டிப் புசிக்கமாட்டோம்!

துன்பமும் துயரும் கூடித்
துளைத்தெமை வதைத்தால்கூட
உண்மையாய் உழைத்திடாமல்
உலகேய்த்துப் புசிக்க மாட்டோம்!


- தளவை இளங்குமரன் -

# சிறந்தவை இவை

| | |
|---|---|
| சிறந்த ஆசிரியர் | ~ அனுபவம் |
| சிறந்த புத்தகம் | ~ வாழ்க்கை |
| சிறந்த படிப்பு | ~ பொறுமை |
| சிறந்த நண்பன் | ~ கடமை |
| சிறந்த அணிகலன் | ~ புன்னகை |
| சிறந்த பாதுகாப்பு | ~ நேர்மை |
| சிறந்த பாதை | ~ கல்வி |
| சிறந்த பொழுதுபோக்கு | ~ சேவை |
| சிறந்த மதம் | ~ சமத்துவம் (அன்பு மதம்) |
| சிறந்த குலம் | ~ மனிதகுலம் |

*செல்வி.ப.கலைவாணி*
*(வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)*

# சரியான உரு எது?



மேலே மூன்று சோடி உருவங்களின் அணிகள் உள்ளன. ஒவ்வொரு சோடியிலும் முதல் அணியில் ஓர் உருவம் விடப்பட்டுள்ளது. இரண்டாவது அணியில் உள்ள உருவங்களில் ஒன்று அந்த விடப்பட்ட இடத்தில் வர வேண்டும். அது எது என்பதைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

(விடை XIV ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி
## உங்கள் கவிதைகள்...

மழை வரும் மகனே!
பற்றிய நெருப்பை
படர்ந்து கழுவிடும்!
மழைத்துளி விழுந்துன்
மட்குடம் நிறைக்கும்!
இன்னுமேன் ஏக்கம்.....?
எழுந்திரு மகனே!

**- தாட்சாயணி-**

உனக்கும்;
எனக்கும்;
ஒரே சூரியன்!
நீயேன் குளிர்ந்தே போகிறாய்.
தளர்வைக் களைந்தெறி!

**- க. ரேணுகா-**
நயினாதீவு.

பள்ளிக்கூடம்.........
ரியூசன் கிளாஸ்......
பேர்சனல் கிளாஸ்.....
ஓடியோடிக் களைத்துவிட்டேன்.
என் சுதந்திரத்துக்குச்
சுமையேற்றுகிறார்கள்....
என் சிந்தனைக்குச்
சிறை போடுகிறார்கள்.....

**- அ. பௌநந்தி-**
துன்னையூர்.

**வாழ்வாங்கு வாழ்ந்தேன்!**
**நாள்பட்டநோய் போற்றொடரும்,**
**பாழ்பட்ட போரால்**
**ஊர்விட்டு வன்னி போனேன்!**
**பெற்றோரைப் பிரிந்தேன், .**
**பிறகென்ன சொல்ல?**
**ஏதிலியாயானேன்!**

**-ச.க. சுதர்சனக்குரு-**
ஆவரங்கால்.

மூடை முடிச்சோடு
ஏட்டையும் மூடிவிட்டு
என்ன செய்வதாய் உத்தேசம்?
சோம்பிக் கிடக்கின்றாய்
சொந்தங்களை இழந்தாயா?
அதற்காய் துவண்டிடல் முறையா?
இளைஞனே உணர்ந்து கொள்
உடலில் உரம் உள்ளவரை
உனைவெல்ல எவருண்டு?

**- தி. ஜனகன்-**
இமையாணன்.

ஓ சிறுவனே!
இக் கோலத்தில்
இருந்து நீ விடிவு பெற
இலவசப் பாட நூலும்
இலவச சீருடையும்
மட்டும் போதுமா?

**-ச. கோபி-**
துறையாமூலை.

காந்தியின் சத்திய சோதனைப்
புத்தகங்கள் எங்கள்
சாந்தியின் நித்திய வேதனை
தாங்காமல்; பக்கங்கள்
மாய்த்து; வெட்கங்களில்...
தலைகுனியும்
பரிதாபக் கட்டங்கள்......!

**- நா. சோபினி-**

ஓ... மானிடனே!
இன்னுமேன் சுணக்கம்?
புத்தகம் புரட்டியது போதும்
புறப்படு......
உன் "தொலைந்துபோன
உறவுகளைத் தேடி.
"போராட்டமே" உன்
வாழ்வை நிர்ணயிக்கும்
புரிந்து கொள்! எழுந்து நில்!!

**- அக்னி-**
அத்தியடி.

துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்து
இளம்பயிரே!
பாடப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு
அப்படியென்ன சிந்தனை?
பட்டினியால் வந்த சோதனையா?
அல்லது -
பாடத்திட்டத்தில் உன் தேச வரலாறு
பாதைமாறிக் கிடப்பது கண்டு
வேதனையா?

**- வதிரி வாசன்-**



தமிழா!
பூம்பிஞ்சு கூட(ப்)
புத்துருப் பெற்று
புது வீரம் படைக்கும் நேரம்
வரலாறு இயற்ற வேண்டிய
கரங்க்ள்!!
இங்கு ஊமையாகக் கிடக்கலாமா?
புறப்படு நீயும்
புதுயுகம் படைத்திட!!!

**-யோ. நித்தியா-**
நல்லூர்.

அடிப்படைத் தேவைகளுக்கே
ஆட்டம் இங்கே – நான்
படிப்பதெப்படி
கூறுங்களேன்?

**- சௌஜன்யா -**

அபலையே!
அண்ணனின் புதைவிடம்
செம்மணியா? ஸ்ரேடியமா?
அவசரப்பட்டு முடிவெடாதே - இது
போதி மாதவனின் போதனை ஆட்சியடா
மீதிப் புதைகுழிகள் இன்னும்
சாதனை படைக்குமடா!

**- த. புருசு-**
மருதங்கேணி.

புதிய ஏட்டிலே
சிருஷ்டிக்கப்பட்ட
வரலாறுகளால்
சிதைக்கப்பட்டன
கடந்த கால உண்மைகள்.....
நிகழ்கால நிதர்சனத்தால்
ஏற்பட்ட உன் கோலத்தால்
தமிழன் நீ வந்தேறு குடி
ஆகிவிட்டாய் - அதனால்...
தம்பி வரலாற்றைப் பற்றி
நீ சிந்திக்காதே!
புயலாய்ப் புறப்படு,
வரலாறே உன்னைச் சிந்திக்கும்!

**- சர்மிலன்-**

ஏ! தேசியக் கொடியே
நீ எங்காவது தொலைந்து போ!
என் தேசத்தை இனங்காண
என் உருவம் போதாதா?

**- வே.மயூரன்-**
மருதங்கேணி.

கண்ணீர் கனத்த
நின் வாழ்வை
விண்ணகத் தேவனிடம்
விண்ணப்பிக்கிறாயா?
வீண் வேலை.
கண்முன் கிடக்கின்ற
கல்லையேனும் தூக்கு!
ஒரு வேளை விடியும்!

**- ச.சாரங்கா-**
சங்கத்தானை.

கல்வி அபிவிருத்தியாம்
பாடத்திட்ட மாற்றமாம்
எங்கேயும் இதே பேச்சு!
ஆனால் எனக்கோ
தொடரும் புலப் பெயர்வால்
நான் படித்த பள்ளிக்கூடப் பெயரே
மறந்து போச்சு! - எனினும்
என் மானம் காக்க
என்னுடன் சீருடை மட்டும்
அழுக்கோடு பத்திரமாய்
இருக்கிறது.

**- இராகவன்-**


அதோ!
வெண்ணிலவு
நம்பிக்கையுடன் தேய்ந்து வளர்கிறதே - நான்
தமிழனாய் இருந்தும்
தளர்ச்சி அடைவேனோ?

**-மா. மணிகண்டன்-**
நயினாதீவு.

பச்சிளம் பாலகனே!
பாதியிலே பறிபோன - உன்
கல்விக்காகவா - இத்தனை
சத்தியாக்கிரகம்....
நிலையற்ற உன் வாழ்வில்
நிலையான துன்பத்தை
விதைத்தவன் யாரோ.....?

**- வெ. நிஷோதன்**
பளை.

## மௌனமொழி-31



*உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது.*
வரைந்தவர் **மானியூர் ரட்ணேஸ்.**

தொலைந்து போன மனிதங்கள்
அதனால்.......
மலிந்து போன மரணங்கள்
எனவே......
பெருகி விட்ட புதைகுழிகள்
இவை தானே... உன்
கவலைக்கான காரணங்கள்?
துவண்டு போகாதே....
துள்ளி எழு துணிவுடன் நட
நாம்.....
இவற்றிற்கெல்லாம் ஒரு நாள்
சமாதி கட்டுவோம்........!

**- சரோ தம்பித்துரை-**

சனாதிபதித் தேர்வுக்கு
"சூரியகந்த" அகழ்வாராய்ச்சி...
மாகாண வெற்றிக்கு
மடுவிலே "போர்க் கோஷம்"
வதைமுகாமும்
புதைகுழியும் நிறைந்த
மண்ணில்
பிஞ்சுக்கு யார் வந்து
உணவிடுவார்?
யாரங்கே!
அமைதிப்புறாவைப்
பிடித்து வந்து
மழலைக்கு
உணவுவிடுங்கள்!

**- பண்ணாக நாரதன்**

அம்மாவும் தம்பியும்
'ரிவிரச' ஷெல்லுக்கு
உடல் சிதறி......
அப்பாவும் தங்கையும்
கிளாலிக் கடலில்
ஹெலி அடியில்.....
தனித்து வந்தேன்
வன்னி மண்ணில்
புத்தகத்துடனும் முடிச்சுடனும்
விடுதலையின் சுமையை
சுமப்பதைத் தவிர
வேறொன்றும் தோன்றவில்லை
எனக்கு – நாளை
நான் மரணமடைந்தால்
நானும் ஒரு பயங்கரவாதி!

**- மிதிலா-**

எந்தப் புத்தகத்தில்
உள்ளது
என் தலை
எப்போது – வீதியில்
உருளும் என்று?

**- நல்லைக் கணபதி-**

புத்தகத்திற்குள் மட்டும்
புரையோடிய
எனது புத்தியும்
சித்தங்கலங்கி சிதறடிக்கப்படும்
எனது சக்தியும்
சித்தியடைந்து முத்திபெற்று
ஏய்த்து ஏய்த்து என்னை ஆளும்
எல்லோருக்கும் சமர்ப்பணம்!

**- மானியூர் ரட்ணேஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டம் அன்றும் இன்றும்

-கோபி-



அலன் போடர் மகனுடன்

(13) துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட சாதனைகளைக் குவிப்பதற்கு அவசியமான அம்சம் நீண்டு நிலைத்தல். ஒரு துடுப்பாளர் மைதானத்தில் நீண்டு நிலைத்து ஆடினால்தான் தன் நாட்டு அணியில் நீண்டு நிலைக்க முடியும்.

ஒருவர் எவ்வளவுக்கு எவ்வளவு அதிக ஆட்டங்களில் பங்கு கொள்கிறாரோ அவ்வளவுக்கு அவ்வளவு சாதனைகளைக் குவிக்கலாம். அவ்வகையில் அதிக போட்டிகளில் ஆடி அதிக சாதனைகளை எட்டிய ஒரு வீரர் ஆஸ்திரேலியாவின் அலன் போடர் (Allan Border). இவர் சுமார் 156 ரெஸ்றுகளில் ஆடி 11 ஆயிரத்து 174 ஓட்டங்களைக் குவித்தார்.

"போடர் அதிக ஆட்டங்களில் ஆடியதால் தான் அதிக ஓட்டங்களைக் குவித்தார். எனவே அவர் அப்படியொன்றும் அற்புதமான துடுப்பாளரல்லர்" என்று குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஏனெனில் போடரின் ஓட்டச்சராசரி நன்றாகவே உள்ளது. மேலும் துடுப்பாட்ட உலகில் அதிக காலம் நிலைப்பதென்பது அப்படியொன்றும் இலேசான காரியமல்ல. அதற்கு உடல்நிலை மட்டுமல்ல மனநிலையும் ஆட்டத்துடன் ஒத்துப்போக வேண்டும்.

அஸாருதீன், ரணதுங்கா, சலீம் மலிக் போன்ற பழம் பெரும் வீரர்களைப் பாருங்கள். அவர்கள் இப்பொழுதும் துடுப்பாட்ட உலகில் நிலைத்திருக்கக் காரணம் தன்னம்பிக்கையும் விடா முயற்சியும்தான். இவர்களைப் போன்ற தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் மிக்க ஒரு வீரர்தான் அலன் போடர்.

### அலன் என்ற அற்புத துடுப்பாளர்

அலன் போடர் சிட்னியில் 1955ஜூலை 27இல் பிறந்தவர். நியூ சவுத் வேல்ஸ், குவின்ஸ்லான்ட் ஆகிய ஆஸ்திரேலிய மாநில அணிகளுக்காக ஆடியவர். கவுண்டி போட்டிகளில் குளோசெஸ்ரசயர், எஸ்ஸெக்ஸ் அணிகளுக்காக ஆடியவர். ரெஸ்ற் வரலாற்றில் பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர்.

1976 டிசம்பரில் தன் முதலாவது முதல்தரப் போட்டியை நியூ சவுத் வேல்ஸ் அணிக்காக ஆடிய போடர் 1978 நவம்பரில் முதல் சதத்தைப் பெற்றார். அந்த சதம் அவருக்குத் தேசிய அணியில் ஓர் இடத்தைத் தேடித் தந்தது.

1978-79 காலப்பகுதிக்கான ஆஷஸ் தொடரில் இங்கிலாந்துக்கு எதிராக மெல்பேண் நகரில் நடைபெற்ற மூன்றாவது ரெஸ்றில் துடுப்பாட்ட



அர்ஜுனா ரணதுங்க

உலகினுள் காலடி எடுத்துவைத்த போடர் அந்தப் போட்டியில் 29 மற்றும் 00 ஓட்டங்களையே பெற்றார்.ஆஷஸ் தொடரின் நான்காவது, ஐந்தாவது போட்டிகளிலும் ஆடிய போடர் ஆறாவது ரெஸ்ரில் ஆடும் சந்தர்ப்பத்தை இழந்தார். போடர் தன் துடுப்பாட்ட வாழ்க்கையில் அணியிலிருந்து நீக்கப்பட்ட ஒரேயொரு சந்தர்ப்பம் இதுதான்.

### போடரின் பதினோராயிரம் ஓட்டங்கள்

| எதிராக | ரெஸ்ற் | இனிங்ஸ் | ஓட்டங்கள் | சராசரி | கூடியது | 100 | 50 |
|---|---|---|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 47 | 82 | 3548 | 56.31 | 200* | 8 | 21 |
| மே.இ.தீவுகள் | 31 | 59 | 2052 | 39.46 | 126 | 3 | 14 |
| பாகிஸ்தான் | 22 | 36 | 1666 | 59.50 | 153 | 6 | 8 |
| இந்தியா | 20 | 35 | 1567 | 52.23 | 163 | 4 | 9 |
| நியூசிலாந்து | 23 | 32 | 1500 | 51.72 | 205 | 5 | 6 |
| இலங்கை | 7 | 11 | 543 | 54.30 | 106 | 1 | 4 |
| தெ.ஆபிரிக்கா | 6 | 10 | 298 | 33.11 | 84 | - | 1 |
| மொத்தம் | 156 | 265 | 11174 | 50.56 | 205 | 27 | 63 |
| உள்நாட்டில் | 86 | 145 | 5743 | 45.94 | 205 | 13 | 35 |
| வெளிநாட்டில் | 70 | 120 | 5431 | 56.57 | 200* | 14 | 28 |

* ஆட்டமிழக்காமல்

இவ்விடத்தில் அந்த ஆஷஸ் (Ashes) தொடர் எனப்படுவது என்ன என்பதையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

1882இலே ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்து அணியை இங்கிலாந்து மண்ணின் ஓவல் மைதானத்தில் முதன் முதலாகத் தோற்கடித்தது. அப்போது "இங்கிலாந்தின் துடுப்பாட்டம் இறந்துவிட்டது. அதன் சாம்பலை ஆஸ்திரேலியர்கள் எடுத்துச் செல்கின்றார்கள்" என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

ஆனால் அடுத்த ஆண்டில் ஆஸ்திரேலியா சென்ற இங்கிலாந்து அணியினர் ஆஸ்திரேலியர்களை அவர்களது நாட்டிலேயே தோற்கடித்தனர். நகைச்சுவை உணர்வு மிக்க ஆஸ்திரேலியர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? சாம்பல் அடங்கிய சிறு கிண்ணம் (urn) ஒன்றை இங்கிலாந்து அணியினரிடம் கொடுத்தனுப்பினர்.

அதுதான் ஆஷஸ் கிண்ணம். அன்றிலிருந்து ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடைபெறும் ரெஸ்ற் தொடர்கள் ஆஷஸ் தொடர்கள் (Ash-சாம்பல்) என்றே அழைக்கப்படுகின்றன.

### போடரின் சாதனை

1978-79 ஆஷஸ் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடும் சந்தர்ப்பத்தை இழந்த அலன் போடர் மீண்டும் 1979 மார்ச்சில் பாகிஸ்தானுக்கு எதிரான ரெஸ்ற் தொடரில் ஆடும் சந்தர்ப்பத்தைப் பெற்றார். கிடைத்த சந்தர்ப்பத்தைத்



அலன் போடர்

தவறவிடாமல் சதம் ஒன்றையும்(105) அடித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிராக 1979 மார்ச்சில் மெல்பேர்ணில் தொடங்கி 1994 மார்ச்சில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டேர்பன் ரெஸ்ற் வரை ஒரு முறைகூட அணியிலிருந்து நீக்கப்படாமல் தொடர்ச்சியாக 153 ரெஸ்றுகளில் போடர் கலந்து கொண்டார். இதன் மூலம் இதற்கு முந்தைய சாதனையான கவாஸ்கரின் தொடர்ச்சியாக 106 ரெஸ்ற்கள் (1974-75 பம்பாய் ரெஸ்ற் முதல் 1986-87 சென்னை ரெஸ்ற் வரை) என்பது முறியடிக்கப்பட்டது.

அதிக ரெஸ்றுகளில் பங்குபற்றிய சாதனையும் போடரையே சாரும். இந்தியாவின் கபில் தேவ் 131 ரெஸ்றுகளுடன் இரண்டாமிடத்தில் இருக்கிறார். மேலும் அதிக ரெஸ்ற் இனிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடியவரும் (265) போடர்தான். 214 ரெஸ்ற் இனிங்ஸ்களுடன் கவாஸ்கர் இரண்டாவதாக இருக்கின்றார்.

ரெஸ்றுகளில் 50க்கும் அதிக ஓட்டங்களை போடர் 90 தடவை பெற்றிருக்கிறார். இவற்றுள் 27 சதங்களும் 63 அரைச் சதங்களும் அடங்கியுள்ளன. 34 சதங்களையும் 45 அரைச் சதங்களையும் பெற்ற கவாஸ்கரே போடரிடம் சாதனையைப் பறிகொடுத்தவர்.

1980 மார்ச்சில் பாகிஸ்தானுக்கு எதிராக லாகூரில் ஆட்டமிழக்காது 150, 153 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் ரெஸ்ற் வரலாற்றில் இரு இனிஸ்களிலும் 150ஐ தாண்டிய முதல் வீரர் என்னும் பெருமையை போடர் பெற்றார்.

1984இல் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக ட்ரினிடாட்டில் ஈரமடைந்த மைதானத்தில் தன் அணியைக் காப்பாற்றுவதற்காக ஜோல் கானர், மல்கம் மார்ஷல் போன்ற அற்புதமான வேகப் பந்தாளர்களை எதிர் கொண்டு 98, 100 ஓட்டங்களைப் பெற்றமை போடரின் அற்புதத் துடுப்பெடுத்தாடும் திறனுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு. அப்போட்டியின் இரு இனிங்ஸ்களிலும் போடர் ஆட்டமிழக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

போடர் ஓரளவு பந்து வீசக்கூடியவரெனினும் அவர் பந்து வீசுவதில் பெரிதும் நாட்டம் செலுத்தவில்லை. சுமார் 39 ரெஸ்ற் இலக்குகளைச் சாய்த்த போடரின் சிறந்த பந்துவீச்சு 1989 ஜனவரியில் சிட்னியில் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக 46 ஓட்டங்களைக் கொடுத்து 7 இலக்குகளை வீழ்த்தியமை ஆகும். அந்த ஆட்டத்தில் மொத்தம் 11 பேரை ஆட்டமிழக்கச் செய்தார் போடர்.

போடரின் இன்னொரு முக்கிய சாதனை அதிக ரெஸ்றுகளில் தலைமை தாங்கியமை ஆகும். ஓர் அற்புதமான ரெஸ்ற் அணியினை சுமார் 93 தடவைகள் அதுவும் தொடர்ச்சியாகத் தலைமை தாங்கியவர் போடர் என்ற தகவல் - போடரின் தலைமைத்துவப் பண்பின் சிறப்பை விளக்குவதற்குப் போதுமானது.

### போடரின் தலைமைத்துவம்

273 ஒரு நாள் போட்டிகளில் 252 இனிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடி மூன்று சதங்கள், 39 அரைச் சதங்கள் உட்பட 6524 ஓட்டங்களை 30.62 என்ற சராசரியில் பெற்றவர் போடர். அந்த 273 போட்டிகளில் 178இல் அணியினை போடர் தலைமை தாங்கியிருக்கின்றார்.

அந்த 178 ஒரு நாள் போட்டிகளில் ஆஸ்திரேலியா 107 வெற்றிகளையும் 67 தோல்விகளையும் சந்தித்திருக்கின்றது. 17 போட்டிகள் முடிவு காணப்படாமல் முடிந்திருக்கின்றன. ஒரு போட்டி சமனிலை (Tie)யில் முடிவடைந்தது.

1978இல் ஈடன்கார்டன் மைதானத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணியினை வெறும் ஏழு ஓட்டங்களால் தோற்கடித்து ரிலயன்ஸ் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியமை போடரின் திறமைக்கு ஒரு சான்று.

போடர் தான் தலைமை தாங்கிய 93 ரெஸ்றுகளில் 32இல் ஆஸ்திரேலியாவிற்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார். 22 ரெஸ்றுகள் தோல்வியிலும் 38 ரெஸ்றுகள் வெற்றி தோல்வியின்றியும் ஒரு ரெஸ்ற் (Tie) சமநிலையிலும் முடிவடைந்துள்ளன.

போடரின் தலைமையில் நடைபெற்ற முக்கியமான ஒரு சம்பவம் அந்த சமநிலையில் முடிந்த ரெஸ்ற். ஏனெனில் ரெஸ்ற் ஆட்டங்களின் வரலாற்றில் இன்றுவரை இரண்டே இரண்டு ஆட்டங்கள்தான் சமநிலையில் முடிவடைந்துள்ளன.

### சமநிலையில் முடிவடைந்த ரெஸ்றுகள்

அவற்றில் முதலாவது ரெஸ்ற் 1960ஆம் ஆண்டு டிசம்பர் 9 முதல் 14ஆம் திகதி வரை பிறிஸ்பேன் மைதானத்தில் ஆஸ்திரேலிய - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையே நடைபெற்றது. அந்த ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இனிங்ஸில் 453 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 284 ஓட்டங்களையும் பெற்றது. முதல் இனிங்ஸில் கெரி சோபேர்ஸ் 132 ஓட்டங்களைப் பெற்றார். ஆஸ்திரேலியா முதல் இனிங்ஸில் 505 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 232 ஓட்டங்களையும் பெற்றது. நோர்மன் ஓ நீல் 181 ஓட்டங்களையும் சிம்சன் 92 ஓட்டங்களையும் பெற்றனர்.

மொத்தத்தில் இரு அணிகளும் தலா 737 ஓட்டங்களை பெற்றன.போட்டி சமநிலையில (Tie) முடிவடைந்தது.

இரண்டாவது போட்டி 1986 செப்ரெம்பர் 18 முதல் 22ஆம் திகதி வரை சென்னை சேப்பாக்கம் விளையாட்டரங்கில் நடைபெற்றது. அப்போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு போடரும் இந்தியாவுக்குக் கபில்தேவும் தலைமை தாங்கினர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி ஏழு இலக்குகள் இழப்பிற்கு 574 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொண்டது. டீன் ஜோன்ஸ் 210 ஓட்டங்களையும் டேவிட் பூன் 122 ஓட்டங்களையும் அலன் போடர் 106 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து ஆடிய இந்திய அணி இரண்டாவது இனிங்ஸையும் தொடர்ந்து ஆடுவதை ஒருவாறு சமாளித்துத் தவிர்த்து 397 ஓட்டங்களைப் பெற்றது. கபில்தேவ் சிறப்பாக ஆடி 119 ஓட்டங்களைப் பெற்றார். ஸ்ரீ காந்த்(53), அஸாருதீன்(50), ரவி சாஸ்திரி (62) ஆகியோர் அரைச் சதங்களைப் பெற்றனர். கிறேக் மத்தியூஸ் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

இரண்டாவது இனிங்ஸில் ஆஸ்திரேலியா ஐந்து இலக்குகளுக்கு 170 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் - நான்காம் நாள் ஆட்ட முடிவில் - அலன் போடர் ஆட்டத்தை நிறுத்திக் கொள்வதாக அறிவித்தார். போடரின் இந்த முடிவு பலராலும் பாராட்டப்பட்டாலும் மறுநாள் ஆஸ்திரேலியர்களுக்கு அதிர்ச்சியே காத்திருந்தது.

இறுதிநாள் வெற்றிக்கு 348 என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி சளைக்காமல் முன்னேறியது. கவாஸ்கர் 90 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். பண்டிற்றும் ஸ்ரீகாந்தும் தலா 39 ஓட்டங்களையும் அஸாருதீன் 42 ஓட்டங்களையும் பெற்றனர். மொகிந்தர் அமர்நாத் அரைச் சதம்(51) பெற்றார். முதல் இனிங்ஸில் சதம் பெற்ற கபில் இரண்டாவது இனிங்ஸில் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தமை இந்தியாவுக்குப் பேரிடியாகியது.

இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க இலக்குகளும் சரிந்து கொண்டிருந்தன. பந்துப் பரிமாற்றங்களும் முடிந்து கொண்டிருந்தன. இறுதியில் ஒரேஒரு பந்துப் பரிமாற்றம் எஞ்சியிருக்கையில் நான்கு ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது.

ஆறு பந்து வீச்சுக்களில் நான்கு ஓட்டங்கள். கைவசம் இருப்பதோ ஒரேயொரு இலக்கு. இறுதிப் பந்துப் பரிமாற்றத்தை வீச கிறேக் மத்தியூஸை அழைத்தார் அலன் போடர். 45 ஓட்டங்களுடன் ஆடிக் கொண்டிருந்த இந்தியத் துணைத் தலைவர் ரவி சாஸ்திரி மத்தியூஸை எதிர் கொண்டார். இரண்டாவது பந்தில் இரு ஓட்டங்களைப் பெற்றார். மூன்றாவது பந்தில். ஓர் ஓட்டத்தைப் பெற்றார்.

மூன்று பந்து வீச்சுக்களில் ஓர் ஓட்டம். ஆனால் பந்து வீச்சை எதிர்கொள்வதோ மனீந்தர் சிங்! மனீந்தர் நான்காவது பந்தை ஒருவாறு சமாளித்தார். ஆனால் ஐந்தாவது பந்து வீச்சில் LBW முறையில் ஆட்டமிழந்தார். சமநிலை! ஆஸ்திரேலியர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். மத்தியூஸ் இரண்டாவது இனிங்ஸிலும் ஐவரை ஆட்டமிழக்கச் செய்தார். ஆயினும் ஆட்ட நாயகர் விருது டீன் ஜோன்ஸுக்கும் கபில்தேவிற்கும் வழங்கப்பட்டது.

முதல் சமநிலை ரெஸ்றில் ஆஸ்திரேலியாவின் வீரராகக் கலந்து கொண்ட சிம்சன் இரண்டாவது சமநிலை ரெஸ்றில் ஆஸ்திரேலிய அணியின் மனேஜராக இருந்தார் என்பது சுவாரசியமான தகவல். இனி மீண்டும் அலன் போடரின் தலைமைத்துவச் சாதனைகளைப் பார்த்தால்....

### ரெஸ்ற் தலைமைத்துவம்

1984 டிசம்பரில் Kim Hughes இடமிருந்து ஆஸ்திரேலிய அணியின் தலைமையைப் பொறுப்பேற்ற போடர் 1994 மே 11 இல் தன் ஓய்வினை அறிவிக்கும் வரை தொடர்ச்சியாக அணியினைத் தலைமை தாங்கினார். இதன் மூலம் துடுப்பாட்ட வரலாற்றில் அதிக ரெஸ்றுகளில் தலைமை தாங்கியமை மற்றும் தொடர்ச்சியாக அதிக ரெஸ்றுகளில் தலைமை தாங்கியமை ஆகிய சாதனைகளை போடர் பெற்றார்.

கெரி சோபேர்ஸ் 1964-65 (கிங்ஸ்ரன் ரெஸ்ற்) முதல் 1971-72 (போட்ஒவ் ஸ்பெயின் ரெஸ்ற்) வரை தொடர்ச்சியாக 39 ரெஸ்றுகளில் தலைமை தாங்கியமையே இதற்கு முந்தைய சாதனையாகும்.

போடருக்கு அடுத்த படியாக அதிக ரெஸ்றுகளில் தலைமை தாங்கியவர் மேற்கிந்தியத் தீவுகளின் கிளைவ் லொயிட் (Clive Lloyd).

### இலங்கை அணித்தலைவர்கள்

| தலைவர் | ரெஸ்ற் | வெற்றி | தோல்வி | சமநிலை |
|---|---|---|---|---|
| பந்துல வர்ணபுர | 4 | 0 | 3 | 1 |
| துலிப் மெண்டிஸ் | 19 | 2 | 8 | 9 |
| டி.எஸ்.டி சில்வா | 2 | 0 | 2 | 0 |
| ரஞ்சன் மடுகல்லே | 2 | 0 | 2 | 0 |
| அர்ஜுனா ரணதுங்கா | 56 | 12 | 19 | 25 |
| ஏ.டி சில்வா | 5 | 0 | 3 | 2 |
| ஹசன் திலகரத்தினா | 1 | 0 | 0 | 1 |
| | 89 | 14 | 37 | 38 |

லொயிட் ஒரு சிறந்த துடுப்பாளர். 110 ரெற்ஸ்களில் 175 இனிங்ஸ்களில் ஆடி 19 சதங்கள் உட்பட 7515 ஓட்டங்களை 46.67 என்ற சராசரியில் பெற்றார். லொயிட் மேற்கிந்தியத்தீவுகள் அணியினைத் தலைமை தாங்கிய 74 ரெஸ்றுகளில் 36 வெற்றிகள் கிடைத்தன. தோற்றது பன்னிரெண்டே பன்னிரெண்டு ரெஸ்றுகளில்தான். 26 ரெஸ்றுகள் வெற்றி தோல்வியின்றி முடிந்தன.

இன்றைய ரெஸ்ற் தலைவர்களில் அனுபவத்தில் முதிர்ந்தவர் இலங்கை அணித் தலைவர் அர்ஜுனா ரணதுங்க. ரணதுங்காவே இலங்கையை அதிக தடவைகள் தலைமை தாங்கியவர். (விவரம் அட்டவணையில்)

அலன் போடரின் முன் ஆஸ்திரேலியவைத் தலைமை தாங்கியோரில் முக்கியமானவர் கிறேக் சேப்பல். சேப்பல் ஒரு சிறந்த துடுப்பாளரும் கூட. மேலும் கோட்றி, கூச், கோவர் போன்ற எமக்கு அதிக பரிச்சயமில்லாத வீரர்களும் சிறந்த துடுப்பாளர்களே.

அவ்வகையில் மேலும் சில வீரர்களைப் பற்றிய தகவல்களை அடுத்த வாரம் எதிர்பாருங்கள்.

### கில்லாடி கிட்டு



"சக வீரர்களை எப்போதும் திட்டிக் கொண்டே இருப்பாராம். அதுதான் இந்த ஏற்பாடு!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ③ அவலவாழ்வு

## செங்கை ஆழியான்

முற்றத்திலிருந்து நோக்கும்போது வீதியில் சாரி சாரியாக மக்கள் செல்வது தெரிகின்றது. வலிகாமத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் தொடக்கிவிட்ட யுத்தத்தின் எதிரொலியாக சண்டிலிப்பாய், சங்கானை, நவாலி, அராலிப் பக்க மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். கையில் அகப்பட்டவற்றைத் தூக்கிக் கொண்டு மூடை முடிச்சுக்களுடன் கண்களில் நீர்சோர அவர்கள் செய்வதறியாது நடந்து கொண்டிருக்கிறார்கள்.

வெளிக்கேற்றைத் திறந்து கொண்டு வெளியில் வருகிறேன். வீதியால் மக்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். எல்லாரும் முகம் இருண்டு, விழிகளில் கவலை அப்பி, முகம் கறுத்து... எத்தனை வகையான சோகங்கள்... தாய்மார் கைக்குழந்தைகளைக் கரங்களில் ஏந்தியவாறு... கூடவே நடந்து வரும் குழந்தைகள்... அந்தப்பிஞ்சுக் கால்கள் வலி காணாவா? நடக்க முடியாமல் தள்ளாடும் வயோதிபர்கள். தாகம்... பசி... எல்லாரிலும் தெரிந்தது. எவரும் எவருடனும் பேசவில்லை. தமது விதியைத் தமக்குள் நொந்து கொண்டார்களோ?

கவலையோடு பார்த்துக் கொண்டிருக்க இயலவில்லை. அக்கூட்டத்திடையே எவரையோ என் விழிகள் தேடுகின்றன.

தூரத்தில் பலர் பெருங்குரலில் அழுது அலறுவது கேட்கிறது. இரண்டு, மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அலறி அரற்றியபடி வந்தார்கள். பெண்கள் சிலர் தலையிலும் மார்பிலும் அறைந்து கதறினார்கள்.

"ஐயோ...ஐயோ...என்ர ராசா...இனி எப்ப காணப்போறம்?"

"பாவிகள் பலியெடுத்திட்டான்களே... நல்லா இருப்பான்களா?"

அதிகாலை வீட்டின் மீது விழுந்து வெடித்த ஷெல்லிற்கு இரண்டு பிள்ளைகளைப் பலிகொடுத்த தாய்... காயம்பட்டு விழுந்து கிடக்கும் தகப்பனைத் தூக்கிவர வழியற்று ஓடிவரும் பிள்ளைகள்... பாரிசவாதத்தில் படுக்கையில் கிடக்கும் தாயை அப்படியே விட்டுவிட்டு வரும் மக்கள்... குண்டு வீச்சிற்கு இரையாகிப்போன சகோதரர்களை அடக்கம் செய்யவும் முடியாது ஓடிவரும் கூடப்பிறந்ததுகள்...

இது என்ன கொடுமை? மனிதர் வாழ்வதற்குத்தான் பிறந்தார்கள். ஒவ்வொரு உயிரும் எவ்வளவு கூடிய காலத்திற்கு வாழலாம் எனத்தான் விரும்புகின்றன. துளிராயும் மலராயும் உருவி வீசப்படுகின்ற இந்த உயிர்களுக்கு யார் பதில் சொல்லப் போகிறார்கள்?

"அப்பு குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணி தாருங்கோ..."

என் முன் கைக்குழந்தையோடு இளம்பெண்ணொருத்தியும் அவள் அருகில் மூன்று சிறு பிள்ளைகளும் நின்றிருக்கிறார்கள். பிள்ளைகளின் முகங்கள் பசியால் வாடிவதங்கியிருந்தன. கன்னங்களில் நீர் அடையாள மிட்டிருந்தது. உடுத்த துணிகளுடன் அவர்கள் நின்றிருந்தார்கள். கைகளில் ஒரு சிறு பொதிகூட எடுத்து வரவில்லை.

"உள்ளுக்கு வரச்சொல்லுங்கோ, ஐயா. தேத்தண்ணி ஊத்துறன். புட்டும் இருக்குது..."

அவளுக்குத் தானும் பிள்ளைகளும் கம்பர்மலையிலிருந்து வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது ஓடிவந்தது நினைவில் சதிராடுகின்றது. எதுவுமற்ற ஏதிலிகளாக ஓடி வந்திருக்கிறார்கள். அழுது, அழுது அந்தப் பெண்ணின் முகம் வீங்கியிருக்கின்றது. எத்தகைய இழப்புக்களோ?

"உள்ளுக்குப் போங்கோ..."

வலிகாமம் மேற்குப்பக்கமிருந்து இன்னமும் குண்டுகள் வெடிக்கின்றன. சண்டை ஓயவில்லைப் போலும். அவர்கள் தயங்கி நின்றார்கள்.

"வெட்கப்படாமல் உள்ளுக்கை போங்கோ.."

"வாருங்கோ பிள்ளையள்.." என்று அழைக்கிறாள் என்மனைவி தையல் முத்து.

என் மனைவி அழைத்ததும் அவர்கள் உள்ளே வந்தார்கள். யாழ்ப்பாணத்து வாழ்க்கையின் அடிவேர் எனக்குப் புரிகிறது. அன்னமிடுபவள் அழைப்பு அவசியமாகிறது.

கிராமசேவகர் கணேசநாதன் சயிக்கிளில் வந்தார். நான் படலையில் நிற்பதைக் கண்டதும் சயிக்கிளை விட்டு இறங்கினார்.

"பெரியவிதானையார், என்ன வெளியில நிக்கிறியள்?" என்றார் ஒரு பேச்சிற்கு.

"நிலமை நல்லா இல்லை, அம்மான். வட்டுக்கோட்டைச் சந்திமட்டும் வந்திட்டுதாம் ஆமி. எங்கட பாடசாலைகள் எல்லாம் அகதிகளால் நிரம்பி வழியுது. அதுகளுக்கு சாப்பாடு தண்ணி கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது."

"நல்லா அவர்களைப் பாருங்கோ, தம்பி. எல்லாவற்றையும் இழந்து வந்திருக்குதுகள். சந்தியில வைத்து லூசியனும் கொஞ்ச இளைஞர்களும் சேர்ந்து களைத்து வாறாவைக்குத் தேத்தண்ணி கொடுக்க ஆயத்தம் செய்யினம்."

"அவன் இந்தக்கிராமத்தில வித்தியாசமானவன். இரக்கமுடையவன்."

"சிலர் வெளிப்படலையளை இழுத்துப் பூட்டிவிட்டுப் பதுக்கியிருக்கினம்."

"ஏன்?...."

"யாராவது அகதிகள் வீட்டிற்குள்ள வந்திடுவினம் எண்டு.. எளிய சனம், அம்மான். இந்த நேரத்தில உதவாவிட்டால் எந்த நேரத்தில உதவப்போகினம்? நாளைக்கு நாங்களும் அகதிகளாக ஓடத்தான் போகிறம். அப்ப எங்களுக்கும் இந்தக்கதிதான்."

கணேசநாதனின் விழிகள் என் வீட்டு முற்றத்தில் தரிக்கின்றன.

"என்ன அம்மான், உங்கட வீட்டிலும் ஆக்கள் நிக்கினம்? ஆராவது தெரிந்தவையே?"

"இல்லையடா தம்பி... ஆரெண்டு தெரியாது. தவிச்சு வந்துதுகள் தண்ணி கேட்டுதுகள். தையல் தேத்தண்ணி கொடுக்கிறா?... அது சரி உயிர்ச் சேதங்கள்.."

"அதிகம் போலத்தான் இருக்குது. ஷெல்கள்தான் அதிகம் பலியெடுத்திருக்குதாம், அம்மான். ஈவிரக்கமின்றி குடிமனைகளை நோக்கி ஷெல் வீசிக் கொண்டிருக்கிறான்கள்."

"அடக்குமுறைக்கு எதிரான கிளர்ந்தெழலை எந்தச்சக்தியாலும் அடக்கிவிட முடியாது தம்பி. பேரினவாதத்திற்கு எதிராக உலக நாடுகள் பலவற்றிலும் இன்று கிளர்ச்சிகள் தோன்றியுள்ளன. ஒவ்வொரு இனமும் தத்தமது தனித்துவத்தைப் பேண விரும்புவதில எந்தப் பிழையுமில்லை."


கணேசநாதனுக்கு வியப்பு வர வழியில்லை. அவனுக்கு என்னை நன்கு தெரியும். எண்பத்திமூன்று வயது எனக்கு. பல காலகட்டங்களை நேரில் கண்டு அனுபவித்த மனிதன். பத்திரிகை படிப்பதும் செய்திகளை ஒழுங்காகக் கேட்பதும் என் நிரந்தரப் பழக்கங்கள். சேக்ஸ்பியரைப்பற்றிக் கேட்டால் கூடச் சொல்லத்தெரிந்தவன்.

"அம்மான் வரப்போறன்.. உங்கட ஒரு மோள் அராலியில இருக்கிறதாகச் சொன்னியள்? வந்திட்டினமே?"

என் முகம் வாடிவதங்குகிறது. கணேசநாதன் புரிந்துகொள்கிறார்.

"ஒன்றும் நடக்காது. சுகமாக வந்திடுவினம், அம்மான். அராலிப் பக்கம் ஷெல் அடி மட்டுந்தான். ஆமி வரவில்லை. கவலைப்படாதையுங்கோ.."

கணேசநாதன் விடைபெற்றுச் சென்றதன் பின்னர் பவளமும் குடும்பமும் என்னவானார்களோ என்ற எண்ணம் மீண்டும் மேலோங்குகிறது. பயங்கரக் கற்பனைகள் மனத்திரையில் நிழலிடுகின்றன. [illegible] ளும் லதாவும் தசைத்துண்டுகளாகச் சிதறிப்போன காட்சி கண்முன் தோன்றிப் பயமுறுத்துகிறது.



கணேசநாதன் சயிக்கிளில் திரும்பி வந்தார்.

"அம்மான், உங்கட வீட்டில இருக்கிறதுகளை கொட்டடி நமசிவாயப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விடுங்கோ.."

"பரவாயில்லை... தாயும் பிள்ளைகளும்... பார்க்கப் பரிதாபமாக இருக்குது. சாப்பிட்டிட்டுப் போகட்டும். வேணுமெண்டால் கொஞ்சநாள் இங்க இருந்திட்டுப் போகட்டும்."

"அப்ப சரி... வாறன்."

யோகம் வாசலுக்கு வந்தாள்.

"தகப்பனும் மூத்த மகனும் வெள்ளனவே சீவலுக்குப் போனவையாம். போன கையோட ஷெல் அடிக்கத் தொடங்கிவிட்டான்களாம். இவயின்ர வீட்டுக்கு முன்னாலும் விழுந்து வெடித்ததாம். முத்தத்திலே நின்றிருந்த இந்த மனிசியின்ர மாமன் அப்படியே உடல் சிதறிச் சரியாம். அந்த உடலை அடக்கம் கூடச்செய்யாமல் தாய்க்காரி பிள்ளையளையும் இழுத்துக்கொண்டு ஓடி வந்திட்டுதாம்."

நான் மகளைத் திரும்பிப்பார்க்கிறேன்.

"பாவங்கள், ஐயா. நானும் அப்படித்தான். பருத்தித்துறைக்குப் போன அவரை விட்டுவிட்டு ஓடி வந்தன். எங்களைத் தேடி வீட்டிற்கு வந்தவர்.." யோகத்தின் நெஞ்சம் வெடித்தது. விம்மத் தொடங்கினாள்.

இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சைக் கவலை கவ்வி அரிக்கிறது. அவர் வருவார் என்ற நம்பிக்கை யோகத்திற்கு இன்னமும் இருக்கிறது. நம்பிக்கையில்தான் மனிதகுலமே இயங்குகிறது.

நான் உள்ளே வந்தபோது சற்று முன் தண்ணீர் கேட்ட பெண்ணும் பிள்ளைகளும் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்கள். முற்றத்து வேப்ப மரத்தின் கீழ் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். என் மனதுக்கு அது சரியாகப்படவில்லை.

"உள்ளுக்கு வாருங்கோ பிள்ளையள்.."

"இல்லை இதில இருக்கிறம், ஐயா. அவர்கள் வந்தாலும் தெரியும்.."

"சாப்பிட்டியளே?.."

"பிள்ளையள் சாப்பிட்டினம்.."

"நீ சாப்பிடவில்லையா?.."

"சாப்பிட முடியவில்லை.." அவளின் கண்களிலிருந்து நீர் சோகத்தின் திரளாகக் கொட்டியது. அவள் விம்மத் தொடங்குகிறாள்.

"அவரும் என்ர மூத்தவனும் என்னவானார்களோ? பாவிகள்... பாவிகள்.. கண்டபாட்டிற்குச் ஷெல் அடிச்சான்கள். முற்றத்திலிருந்த மாமா அப படியே சரி. அவரை அப்படியே விட்டிட்டு ஓடி வந்திட்டம். அதுக்கு முதல் சீவலுக்குப் போன அவரும் மூத்தவனும் எங்கை? ஐயா, அவர்கள் வருவார்களா?"

"வருவினம், பிள்ளை. அழாதை... வருவினம்.."

இப்படித்தான் யோகமும் ஓடி வந்தாள். தம்பிநாதன் பற்றிய எந்தத் தகவலும் பத்து வருடங்களாகியும் கிடைக்கவில்லை. கைதாகிக் கப்பலில் ஏற்றப்பட்டுக் கொழும்புக்குப் போனவனுக்கு என்ன நடந்தது?

"வேற றோட்டால யாழ்ப்பாணத்துக்கு வந்திருப்பினம். என்ர பிள்ளை குடும்பத்துடன் அராலியில இருந்தது. அதுகளும் இன்னமும் காணவில்லை." என்றபடி தையல்முத்து வருகிறாள்.

நெஞ்சு வலிக்கிறது.

"மனிசனுக்கு என்ன பெயர் பிள்ளை? நம்மட கணேசநாதன் கிராம சேவையாளரிடம் சொல்லி முகாம்களில விசாரிப்பம்.."

"இராசையா... மூத்தவன் பெயர் லக்சுமனன். சங்கானையில சேர்ச் ஒழுங்கை. ஒருக்கா விசாரித்துச் சொல்லுங்கோ. அந்த நன்றியை உசிருள்ளவரை மறக்கமாட்டேன்."

என் கவனம் திடீரெனக் கலைகிறது.

"ஐயா..என்ர அம்மா.." என்ற அலறியபடி பவளம் பிள்ளைகள் பின்தொடர ஓடிவருகிறாள். அவளின் பின்னால் சுப்பிரமணியம் சூட்கேசுகளைத் தூக்கிக் கொண்டு வருகிறான். ஓடி வந்த பவளம் தாயைக் கட்டிக் கொண்டு அழுகிறாள்.

"என்னபிள்ளை.. என்ன நடந்தது? உங்களுக்கு ஒன்றுமில்லையே?"

"எங்களுக்கு ஒண்டுமில்லை. தப்பி ஓடிவந்திட்டம். எங்கட வீட்டிற்கு அருகிலதான் ஷெல் விழுந்திட்டுது. ஒரு சாமானும் எடுக்க முடியவில்லை. நகைகள், பணம் ஒன்டும் எடுக்கேல. எல்லாத்தையும் அப்படியே போட்டிட்டு ஓடி வந்திட்டம்.."

"போகட்டும்..உசிர்தான் முக்கியம். அதுகளைத் தேடிக்கொள்ளலாம். போங்கோ உள்ளுக்கு.. வந்த களைப்புக்கு தேத்தண்ணி குடியுங்கோ.."

என் அருகில் பவளத்தின் பிள்ளைகள் இரண்டும் வந்து நின்றிருக்கிறார்கள். சரசுவையும், சந்திரனையும் என்னுடன் நெருக்கமாக அணைத்துக்கொள்கிறேன்.

"எல்லாத்துக்கும் நானிருக்கிறன். ஒண்டுக்கும் பயப்படத் தேவையில்லை."

"நாங்க பயப்படவில்லை, அப்பு. அம்மாதான் சரியான பயம்." என்று சரசு சிரிக்கிறாள். முன்னர் பார்த்ததிலும் அவள் வளர்ந்திருப்பதாகப் படுகிறது. தாய் மாதிரி கவர்ச்சியோடு சிரிக்கிறாள். கன்னங்களில் குழிகள் விழுகின்றன.

"அப்பாவுக்குப் பேய்ப் பயம். இதுகளுக்குப் பயப்படுகிறதே? நாங்கதான் ரெண்டு பேரையும் இங்க கூட்டி வந்தம்." என்று சந்திரன் சிரிக்கிறான். பன்னிரெண்டு வயதுச் சிறுவன். இளந்தலைமுறைக்கு குண்டுகள், ஷெல்கள், துப்பாக்கிச்சன்னங்கள் என்பன வாழ்க்கையின் நித்தம் சந்திக்கும் கருவிகளாகிவிட்டன.

பவளமும் சுப்பிரமணியமும் பயந்தளவிற்குப் பிள்ளைகள் பயமோ பாதிப்போ அடையவில்லை என்பது தெரிகிறது.

தாரணி முற்றத்துக்கு வந்து, "வா சரசு.." என்று தங்கையைக் கரம் பற்றி அழைத்துச் செல்கிறாள்.

"பெரியம்மா எங்க..?"

"அடுப்படியில.."

"பெரியம்மா எப்பவும் அடுப்படிதானா?" என்கிறாள் சரசு.

(தொடரும்)

# புலவரும் அவரூரும்

சின்னஞ்சிறு கிராமமும் தேவரூர் ஆகலாம். புலவர் ஒருவர் அங்கு வாழ்ந்தாற்போதும். புலவர் என்பார் யார்? இயற்கை அறிவுடன் கல்வி கேள்விகளால் ஆய உண்மை அறிவும் கைவரப் பெற்றவர் புலமை உடையோர்: அறிவுடையோர்.

தேன்கூடு

அறிவுடையோா பிறர்நோயைத தம் நோய்போற் காண்பர். வரக்கடவதனை முன்னே அறிந்து செயற்படுவர். அவர் அஞ்சுவதற்கு அஞ்சுவர். சுருங்கக் கூறின் செல்வம் எல்லாம் உள்ளவரும் ஆவர். அறிவு இருக்கின்றதே அது கெடுதி வராமல் முன்னறிந்து காக்கும் சிறந்த கருவியும் கூட. புலவரை - அறிவரை - போற்றாத நாடே இல்லை.

விளம்பி நாகனார் புலவர்களைத் தேவருக்கு ஒப்பானவர் என்று கூறுகிறார். ஆகவே அவர்கள் தொழும் தகையர் ஆவர்.

## சிந்திப்போம் செயற்படுவோம

புலவர் வாழும் ஊரில் உள்ள ஏனைக் குடிமக்களெல்லாம் தேவர்களின் உறவினர்களைப் போன்றவர்களாம். தேவர்களும் ஆகிவிடுகின்றார்கள். பெருமைக்குரிய விடயந்தான்.

ஊரவர்களில் சிலர் புலவர்களைப் பேணி அவர்வழி நின்று வழிபட்டு ஒழுகுவார்கள் அன்றே! அவர்கள் தாமும் தேவர்களின் அருளைப் பெற்றோர் ஆகிவிடுகின்றனராம்.

மேலும் அவ்வூரில் புலவரிடம் காதல் கொண்டு பற்றும் பாசமும் வைத்து வாழும் சிலர், புலவர் போலக் கற்றோர் வரிசையில் வைத்து மதிக்கப்படுவார்களாம். இனி, பாடலைப் படிப்போம்.

*தேவர் அனையர் புலவரும்: தேவர்*
*தமரனையர் ஒரூர் உறைவார் - தமருள்ளும்*
*பெற்றன்னர் பேணி வழிபடுவார்: கற்றன்னர்*
*கற்றாரைக் காதலவர்.*

(பெற்றன்னர் - அருள் பெற்றாரை ஒப்பர். கற்றன்னர் - கற்றவரே ஆவர்)

அறிவர் வழிநின்று அமைதி காண்போம்.

*-சிகண்டியார்-*

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உங்கள் வீட்டுப் புழக்கடையிலும் ஒரு டைனோசோர் உண்டு"


மனிதன் தோன்றிய காலம் தொட்டு பறவைகளைக் கண்டு வியந்திருக்கின்றான். அவற்றைப் போல உல்லாசமாகவும் சுதந்திரமாகவும் பறந்து திரிய முடியவில்லையே என்ற ஆதங்கம் அவனுக்கு உண்டு. ஆயினும் புவியீர்ப்பைச் சமாளித்து உயரே பறக்கும் வல்லமையைப் பெறுவதற்கு கூர்ப்பு அடிப்படையில் பறவைகள் எத்தனை படிகளைத் தாண்டி இருக்க வேண்டும்? பயனுள்ள வகையில் இசைவாக்கங்கள் ஏற்படுவதற்கு எவ்வளவு காலம் எடுத்திருக்க வேண்டும்? இயற்கைத் தேர்வு முழுமை பெற்று முதற்பறவை தோன்றுவதற்கு

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

எத்தனை மில்லியன் வருடங்கள் சென்றிருக்கும்?

ஆயினும் இன்று எத்தனை வகையான பறவைகள் தோன்றிவிட்டன? எத்தனை சாதிகள், இனங்கள், பேதங்கள் காணப்படுகின்றன? நினைக்கும் போதே மூக்கின் மேல் விரலை வைக்க வேண்டும் போலத் தோன்றுகின்றது இல்லையா?

இயற்கைத் தேர்வுக் கொள்கையை முன்வைத்த சார்ல்ஸ் டார்வின் (Charls Darvin) நகருயிரிகளிலிருந்து பறவைகள் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். டார்வினின கருத்துக்களுக்காகப் போராடிய அவரின் நண்பன் தோமஸ் ஹக்ஸிலி (Thomas Huxley) நகருயிரிகளில் டைனோசர்களில் இருந்துதான் பறவைகள் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். ஆயினும் அக்காலத்தில் அவரின் கருத்து எடுபடவில்லை.



கூர்ப்பில் இறக்கைகளின் விருத்தி

பறவைகளில், பறப்பதற்குரிய இசைவாக்கங்களில் முக்கியமானவை - பறக்கும்போது எதிர்ப்பின்றி வளியைச் சுலபமாகக் கிழித்துச் செல்லக்கூடிய உடலமைப்பு (Streem lined body), பாரம் குறைந்த - உறுதியான - காற்றடக்கமுள்ள - என்புத்தொகுதி, முன்னவயவங்கள் செட்டைகளாகத் திரிபடைந்தமை, செதில்கள் சிறகுகளாகத் திரிபடைந்தமை, முன்னவயங்களில் பறப்பிற்குரிய இறகுகள் இருத்தல் (முதலான, துணையான இறகுகளும், புல்லிறக்கையும் - Primary, Secondary and alula Feathers), காறையென்புகளிரண்டும் - (Clavicles) வயிற்றுப்புறமாக ஒன்றுடன் ஒன்று இணைந்திருத்தல், திடீர் அமுக்க வேறுபாடுகளைத் தாங்கும் வகையில் நன்றாக ஒன்றுடன் ஒன்று இணைந்த மண்டையோட்டென்புகள், பற்களுடன் கூடிய கனதியான தாடை யென்புகளுக்குப் பதில் கனமற்ற அலகுகளிருத்தல், முன்கையென்புகளுடன் கையை மடக்க உதவும் பந்துபோன்ற என்பு, பறப்புத் தசைகள் பொருந்துவதற்கு அதிகளவில் மேற்பரப்பைக் கொடுக்கும் வகையில் மார்பென்பிலுள்ள ஏரா (Sternal reel), விலாவென்புகளில் பின்னோக்கி வளர்ந்த முளைகள் விலாவென்புகள் ஒன்றை ஒன்று மேவி மேலதிக ஆதாரத்தையும் உறுதியையும் கொடுக்க உதவுதல், வயிற்றுப்பகுதிக்கு மேலதிக ஆதாரத்தைக் கொடுக்கும் வகையில் பெட்டி போன்ற இடுப்பு வளையம், மிகக் குறுகிய வால் - குறைந்த எண்ணிக்கையில் வால்முள்ளென்புகள், சுவாசப்பைகளுடன் தொடர்பாக உடல் முழுவதும் வியாபித்தவையாக ஒன்பது காற்றுப்பைகள், இளஞ்சூட்டுக் குருதி நிலையான வெப்பநிலை, வேகப் படுத்தப்பட்ட அனுசேபச் செயற்பாடுகள், குறைந்த பரம்பரை அலகுத் தொகை (Genome) - (கலங்களின் உயர்ந்த அனுசேபச் செயற்றிறனுக்கு இது உதவும என்பது சில விஞ்ஞானிகளின் கருத்து)



சைனோசோறோப்ரெறிக்ஸ் வகை டைனோசர்

1861இல் பவேறியாவில் பறவையைப் போன்ற ஓர் அங்கியின் உயிர்ச்சுவடி (Fossil) கண்டெடுக்கப்பட்டது. இது நகருயிரிகளின் இயல்புகளையும் பறவைகளின் இயல்புகளையும் கொண்டதாயிருந்தது. நகருயிரிகளுக்குரிய இயல்புகளான தாடைகளும் அவற்றில் பற்களும் இருத்தல், முன்னவயங்களில் நகத்தில் முடிவடையும் சுயாதீனமான விரல்கள், பல எண்ணிக்கையிலான முள்ளெலும்புகளைக்கொண்ட நெடிய வால், இவற்றுடன் பறவைகளுக்கான இறகுப்போர்வை, முன்னவயவங்களில் பறத்தற்குரிய இறகுகள் ஆகியவை காணப்பட்டன. மேலும் வாலின் நீளத்திற்கு இருமருங்கிலும் இறகுகள் காணப்பட்டன. வளியில் வழுக்கிச் செல்வதற்கு (Gliding) இது ஏற்ற உருவமைப்பு. பறப்புச் சிறகுகள் இருந்ததன் காரணமாக இவை பறந்தும் திரிந்திருக்கலாம். பறப்பு முறை எங்ஙனம் அமைந்திருந்தது என்பது யாருக்கும் தெரியாது. இக்கண்டுபிடிப்பின் பின் மர வாழ்க்கைக்குரிய பூச்சிகளைப் பாய்ந்து பிடிக்கின்ற ஓணாண் போன்ற நகருயிரிகளிலிருந்து காற்றில் வழுக்கிச் செல்பவையும் (Gliders) பின் பறவைகளும் தோன்றியிருக்கலாம் என்ற கருத்து மேலோங்கியிருந்தது. இதற்கு பறக்கும் ஓணான் (Flying Lizard) ஓர் ஆதாரம். அவை இப்பொழுதும் இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இது ஒரு சிறந்த "கிளைடர்". மேலும், தென்னாபிரிக்காவிற்குரிய ஹோயாற்சின் (Hoatzin) என்ற பறவையின் குஞ்சுகளில் முன்னவயங்களுடன் தொடர்பாக நகங்களில் முடிவடையும் விரல்களுண்டு. குஞ்சுகள் கால்களையும் கைகளையும் பயன்படுத்தி மரக்கிளையைப் பற்றி இடப்பெயர்ச்சி செய்யும். பின் இறகுகள் முளைத்து நிறைவுடலியின் முழு உருவ அமைப்பைப் பெறும் பொழுது முன்னவயவங்களிலுள்ள விரல்கள் மறைந்துவிடும்.

தற்பொழுது ஆநேக தொல்லுயிரியலாளர்கள் (Paleontologists) உணவைத் துரத்திப் பிடிக்கும் ஊனுண்ணும் தரைக்குரிய டைனோசோர்களில் (Theropod Dinosaurs) இருந்துதான் பறவைகள் தோன்றியிருக்க வேண்டுமென்ற கருத்துடையவர்களாக இருக்கின்றார்கள். இவர்களின் கருத்துக்கு ஆதாரமாகப் பல உயிர்ச்சுவடுகள் அண்மைக் காலங்களில் கிடைத்துள்ளன. பெரும்பாலானவை சீனாவிலும், சில ஸ்பெயினிலும் கிடைத்துள்ளன. இவற்றைக்கொண்டு பறவைகளின் கூர்ப்பை வரைமுறையாக விளக்க முடியும். ஆயினும் சில ஓட்டைகள் உண்டு. சில படிகளுக்குரிய ஆதாரங்கள் இல்லை. இவையும் கிடைத்தால் பறவைகளின் கூர்ப்பை ஆதாரங்களுடன் முழுமையாக விளக்க முடியும்.

கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு ஈண்டு பறவைகளின் கூர்ப்பை வரைமுறையாக ஆராய்வோம். கால அட்டவணைக்குரியதாக இல்லாமல் உடலமைப்பு ரீதியில் படிமுறைகளைக் கவனிப்போம் - இப்படி முறையில் முதல் ஐந்தும் டைனோசர்களாகவும், கடை மூன்றும் பறவைகளாகவும் கையாளப்பட்டுள்ளது.

1.சைனோசோறோப ரெறிக்ஸ் (Sinosauropteryx):- இந்தப்பெயரின் கருத்து "முதல் சீன இறகுள்ள யாழி" (First Chinese Dragon Feather). இது 12 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டது. இதன் முன்னவயவம் வகைக்குரிய டைனோசர்களுக்குரியது. இதன் உடல் இழைகளால் போர்க்கப்பட்டுள்ளது. இழைகள் இனக் கவர்ச்சிக்காக அல்லது உடல் வெப்பப் பாதுகாப்பிற்காகத் தோன்றியிருக்கலாம். பின்னது சரியாயின் இவை இளஞ் சூட்டுக் குருதி நிலையானவையாக இருந்திருக்க வேண்டும். அப்படியாயின் டைனோசர்களில் ஒரு புதிய அனுசேபத்திறன் தோன்றியிருக்கும். (நகருயிரிகள் சூழல் வெப்பக்குருதி நிலையானவை. பறவைகள் பாலூட்டிகளைப் போன்று இளஞ்சூட்டுக் குருதி வெப்ப நிலையானவை). சைனோசோறோப்ரெறிக்ஸ் தரை வாழ்க்கைக்குரிய ஓடும் விலங்கு. இதன் முன்னவயவங்கள் குறுகியவை; மூன்று விரல்களைக் கொண்ட கைகளை உடையவை. தெறபொட்டுடைனோசர்கள் முன்னவயவங்களையும் வாலையும் சமநிலைக்குப் பயன்படுத்திக் கொண்டு வேகமாக ஓடக்கூடியவை. (மனிதன் ஓடும்போது சமநிலைக்கு கைகளைப் பயன்படுத்துவது போலத்தான் இவையும் பயன்படுத்தும். இவ்வண்ணமே தீக்கோழி போன்ற ஓடும் பறவைகளும் பயன்படுத்தும்.)




காகமும் வெலோகிறா

2. வெலோசிறாப்ரர் (Velociraptor):- பெயரின் கருத்து "விரைவான கொள்ளையன்" ('Swift Robber'). இது ஒரு இரைகௌவும் டைனோசர். (தெறோபொட்டு) இதன் உயிர்ச்சுவடுகள் மொங்கோலியாவில் கண்டெடுக்கப்பட்டன. இந்த விலங்கின் மணிக்கட்டையென்பு கைகளின் சுழற்சியசைவுகளுக்கு உதவியது. மற்றும் கரங்கள் இரையைப் பிடிப்பதற்கு பெரிதும் உதவியது. உறுதியாகப் பறப்பதற்கு வளையும் தன்மையுள்ள மணிக்கட்டு மிகவும் அவசியம்.

3. யுனென்லாஜியா (Unenlagia):- பெயரின் கருத்து "அரைப்பறவை" (Half Bird). இதன் உயிர்ச்சுவடு தென்னமெரிக்காவில் பற்றகோணியாவில் கண்டெடுக்கப்பட்டது. இது ஒன்பது கோடி வருடங்களுக்கு முற்பட்டது. இந்த விலங்கு மனிதனைப்போல முன்னவயவங்களை மேலும் கீழும் அசைக்கும் இயல்பைப் பெற்றிருந்தது. ஓடும்போது சமநிலையாக்கத்திற்கு இது பெரிதும் உதவியது. செட்டையடித்தலுக்கு முன்னோடியாக இவ்வசைவைக் கொள்ளலாம். இத்தொழிற்பாடு பறப்பு அடித்தலுக்கு மிக அவசியமானது. மேற்படி உயிர்ச்சுவடு கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் ஸ்பெயினில் சுமார் பதின் மூன்றரைக்கோடி வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஓர் அங்கியின் சுவடு கண்டெடுக்கப்பட்டது. சுவடு கூட்டுடன் உள்ள ஒரு குஞ்சினது. அதன் நிலை அநாதியான டைனோசருக்குரியது. ஆனால் செட்டைகளோ கிட்டத்தட்ட தற்காலத்திற்குரியது. இதிலிருந்து சில டைனோசர் இனங்கள் கூடுகட்டி, முட்டையிட்டு, அடைகாத்து குஞ்சு பொரித்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. (பறவைகளைப் போல). அங்ஙனமாயின் அவை இளஞ்சூட்டுக் குருதி நிலையான உடல் வெப்பத்தைக் கொண்டவையாக இருந்திருக்கலாம்.

4. கோடிரெறிக்ஸ்(Caudipteryx):- பெயரின் கருத்து "வால் இறகு" ('Tail Feather') இது 12கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டது. சுவடு சீனாவில் கண்டெடுக்கப்பட்டது. வேகமாக ஓடக்கூடியது. உடல் அநாதியான இறகுகளால் போர்க்கப்பட்டது. பறத்தலுக்குரிய இறகுகள் தோன்ற வில்லை.

5.புறோற்றாக்கியோப்ரெறிக்ஸ் (Protarchaeopteryx):- பெயரின் கருத்து "முன் அநாதியான செட்டை". இது 12கோடி வருடங்களுக்கு முற்பட்டது. உயிர்ச்சுவடுகள் சீனாவில் கண்டெடுக்கப்பட்டன. பலவழிகளில் இது ஆக்கியோப்ரெறிக்ஸுக்கு ஒப்பானது. ஆயினும் கூடிய அநாதியானது (Primitive). கைகளிலும் வாலிலும் உள்ள ஒழுங்கான இறகுகள் கோடிரெறிக்ஸ் இனத்தைக்காட்டிலும் நெடியவை. ஆயினும் அனேகமாக






பறவைகளின் பரிணா

இவ்விலங்கு உறுதியாகப் பறக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளாமல் இருந்திருக்கலாம்.

6. ஆக்கியோப்ரெறிக்ஸ் (Archaeopteryx):- பெயரின் கருத்து "அனாதியான செட்டை" ("Ancient wing"). கண்டெடுக்கப்பட்ட சுவட்டின் காலம் பதினைந்து கோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...லோகிராப்ரரும்(டைனோசரும்)

வருடங்களுக்கு முற்பட்டது. பறக்கும் இறகுகள் இருந்ததுடன். இறகுகள் தற்காலப் பறவைகளினைத்தைப் போல சமாந்தரமற்றவை. இறகுக் காம்பில் ஒருபக்க இறகுப் பரப்பு அகலம் கூடியதாகவும் மறுபக்க இறகுப் பரப்பு அகலம் குறைந்ததாகவும் இருக்கும். அதனால் இவை ஓரளவாவது பறத்தலை மேற்கொண்டிருந்திருக்கலாம்.

7. இயோஅலுலாவிஸ் (Eoalulavis):- புதிய புல்லிறக்கை (alula) உடையது. பெருவிரல் இணைக்கப்பட்ட இறகுக் கற்றை புல்லிறக்கை எனப்படும். புல்லிறக்கை காற்றோட்டத்தை மாற்றி சிறந்த திட்டமிட்ட தொழிற்பாட்டிற்கும் கட்டுப்பாட்டிற்கும் உதவும். சிறப்பாக கு[illegible]ந்த வேகத்துடன் பறக்கும் போது இது பறப்பதற்கு பு[illegible]படுவதற்கும் பின் தரையிறங்குவதற்கும் மிக அவசியமானது.

8. கோர்வஸ் (காகம்) (Corvus). முன்னவயவத்தின் கூர்ப்பில் உச்சத்திற்குரியது. காகமும் அதனைப் போன்ற பறவைகளினதும் கூறுகளாக்கப்பட்ட வால் எலும்புகளும் பரந்த செட்டை மேற்பரப்புக்களும் பறக்கும் வல்லமையில் முழு மலர்ச்சியைக் காட்டுகின்றன.




சீனாவில் மேற்படி உயிர்ச் சுவடுகள் கிடைத்த அதே இடத்தில் பிறிதொரு அங்கியின் உயிர்ச் சுவடுகளும் கிடைத்தன. இதற்குகொண் பூ[illegible]யுசோர்ணிஸ் சால்ரஸ் (Confuciusornis Sanctus) என[illegible] பெயர் வழங்கப்பட்டது. பெயரின் கருத்து "புனிதமான கொண்புயூசியஸ் பறவை" (Sacred Confucius Bird). சுவடு பன்னிரண்டு கோடி வருடங்களுக்கு முற்பட்டது. இப்பறவை கிட்டத்தட்ட ஆக்கியோப்பிரிறிக்ஸ் இன் அளவிற்குப் பழமையானது. ஆனாலும் இது தற்கால அலகை உடையது. சுவடுகள் ஒரே இடத்தில் பல காணப்பட்டன. இப்பறவை சமுதாய வாழ்க்கைக்குரியது என்பதை இது காட்டுகின்றது. மேலும் இப்பறவையில் இலிங்கஈருருவுடைமை (Sexual dimorphism) துலக்கமாகத் தெரிகின்றது. பெண்களைக்காட்டிலும் ஆண்கள் பெரியவை. மேலும் ஆண்களுக்கு இரண்டு மிக நீண்ட அலங்கார வாலிறகுகள் உண்டு. இவ்வங்கி பறவைக் கூர்ப்பில், இடைப்பட்ட, மேலும் ஒரு படியை உணர்த்துகின்றது.

டைனோசோர்களிலிருந்து பறவைகள் தோன்றின என்பதற்கு ஆதாரங்கள் ஒருபுறமிருக்க, அநேக தொல்




...ர் பரிணாமம்

லுயிரியலாளர்களும், கூர்ப்பு உயிரியலாளர்களும் பறவைகளை டைனோசர்கள் என்றே கருதுகிறார்கள் - பறக்கும் டைனோசர்கள். தெறலொட்டு டைனோசர்களுக்கும் இன்றைய பறவைகளுக்கும் பல ஒற்றுமைகளுண்டு. டைனோசர்களுக்கு உதாரணமாக வெலோசிறாப்ரரும், பறவைகளுக்கு உதாரணமாக காகத்தையும் கொண்டு சில ஒற்றுமைகள் இங்கு நிரற்படுத்தப்பட்டுள்ளன.

1. காறையென்பும், மார்பென்பும்:- அநேக தெறப்லொட்டு டைனோசர்களில் காறையென்புகள் இரண்டும் வயிற்றுப்புறமாக இணைந்து ஒரு "V" அமைப்பைத் தோற்றுவிக்கும்: தசைபொருந்துவதற்கு அதிக மேற்பரப்பு உள்ள மார்பென்பு உண்டு. இந்த இரண்டு இயல்புகளும் தற்காலப் பறவைகளிலுண்டு.

2.தோட்பட்டையென்பு:- பறவைகளும் தெறப்பொட்டுக்களும் நெடிய ஒடுக்கமான தோட்பட்டை யென்புகளை உடையவை.

3. என்புத்திணிவு:- பறவைகளும், பறவைபோன்ற டைனோசர்களும் குழாயுள்ள காற்றடக்கமுள்ள மெல்லிய சுவர்களையுடைய என்புகளைக் கொண்டவை. இது உடல் நியையை பெரிதும் குறைக்கும்.

4. சுழன்றசையும் மணிக்கட்டுக்கள்:- மணிக்கட்டிலுள்ள அரைமதி வடிவான என்புகள் கைகளை முன்கைகளுடனும் உடலுடனும் மடிக்க உதவும்.

-குகன்-

5. கையின் வடிவமைப்பு:- பறவைகளிலும் முன்னேற்றமடைந்த பறவை போன்ற தெறப்பொட்டுக்களிலும் கைகளில் இரு விரல்கள் மறைந்துவிட்டன. எஞ்சிய மூன்றில் நடுவிரல் நெடியது.

6. பூப்பென்பு:- அனேக டைனோசர்களில் பூப்பென்புகள் முன்னோக்கி நீட்டப்பட்டிருக்கும். ஆனால் பறவைகளிலும் சில தெறப்பொட்டுக்களிலும் பின்னோக்கி நீட்டப்பட்டுள்ளது.

7. கால்கள்:- பறவைகளும் தெறப்பொட்டுக்களும் "கட்டுப்பட்ட இரு காலிகள்." ("Obligatory bipeds"). இவற்றின் தசைகளும் என்பு அமைப்புகளும் இருகாலசைவுக்கு (நடத்தலுக்கு) ஏற்றதாக உள்ளன. (இன்றுள்ள அங்கிகளில் இருகாலசைவிற்குரியவை பறவைகளும், மனிதனும் மாத்திரமே).

8. பாதங்கள்:- பறவைகளுக்கும் தெறப்பொட்டுக்களுக்கும் மூன்று முன்னோக்கிய விரல்களும் ஒரு பெருவிரலுமுண்டு.

9. இரைப்பைக்கல் (Gastroluth) - பறவைகளிலும் அநேக தெறப்பொட்டு டைனோசர்களிலும் இரைப்பையில் (அரைப்புப்பையில்- Gizzard) கற்களுண்டு. உணவை அரைக்க இவை உதவும்.

இப்பொழுது சொல்லுங்கள், உங்கள் வீட்டுப் புழக்கடையில் டைனோசோர் (காகம்) உண்டா இல்லையா? Juraisic Park எண்ணம் வருகின்றதா, இல்லையா? *



மிக நீண்ட வால்களைக் கொண்ட கொன்புயூசியுசோர்ணிஸ் சாங்ரஸ வகை டைனோசரின் உயிர்ச்சுவடு

# சந்தேகம்

வானம் மங்கிப்போய்க் கிடந்தது. வடகோடிப் பனங்கூடலுக்கூடாகத் திரண்டு வெளிக் கிளம்பிய கருமேகக் கூட்டங்கள் பொழியப்போகும் பெருமழைக்கான அறிமுகவுரையினை எழுதத் தொடங்கின. இதனை ஒப்புக் கொள்ளுமாப்போல ஒன்றிரண்டுாகங்கள் தாழப்பறந்தன. இலேசான சில்லிடலுடன் வீசிய காற்று கழுத்தின் பக்கப் புறங்களைத் தடவிக்கொண்டு போனபோது சுய நினைவுக்கு வந்தேன்.

நான் கொஞ்சநாள்களாக இப்படிப்பட்ட அநாவசியமான சிந்தனைகளுக்குள் மூழ்கி என்னையே மறந்து விடுகிறேன்.

ஏன் இப்படி? எனக்கு என்ன நேர்ந்தது?

ஒருவேளை....எனது வயிற்றினுள்ளே வளர்ந்து இவ்வுலகை எட்டிப்பார்க்கத் துடித்துக் கொண்டிருக்கும் அந்த உயிரைப்பற்றிய கவலையா?

அப்படிச் சொல்வதற்கில்லை, இருப்பினும், ஏதோ ஒருவித ஏக்கம், எதிர்பார்ப்பு என்மனதை வாட்டுகிறதே! தாய்மையின் தேடல் அதுவாக இருக்குமா?

"என்ன றோட்டிலை நிண்டு கடும் யோசினை? ஆரைப்பாத்துக்கொண்டு நிக்கிறீர்?"

துணுக்குற்று நிமிர்ந்தேன். வாசல் நிலைப்படியுடன் சாய்ந்தபடி என் கணவர் நின்றிருந்தார். அவருடைய கேள்வியிலும், பார்வையிலும் தொக்கி நின்ற இன்னொரு கேள்வி என்னை வேதனைப்படுத்தியது.

"என்ன தேவகி? கேட்டது காதிலை விழேல்லையே? ஆரை எதிர்பார்த்துக் கொண்டு நிக்கிறீர்?"

"இல்லை... மழை வரப்போகுது. அது தான்...." இழுத்தேன்.

"நிண்டு மினைக்கெட்டாப்போல மழை வராமல் விடப்போகுதே? ஒரு வேளை.... ரவியைப் பாத்துக்கொண்டு நிக்கிறீரோ?"

நான் எரித்து விடுவதுபோல நிமிர்ந்து பார்த்தேன். அவரது முகத்திலே ஒருவிதமான நக்கற்சிரிப்பு இழையோடியது. தொடர்ந்து அங்குநிற்கப் பிடிக்காமல் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.

ஒருவரின் ஏதாவது ஓர் இயல்பிலே வெறுப்பு ஏற்பட்டால் அவருடைய அத்தனை செயல்களும் விருப்பத்துக்குரியனவாக அமையாமற்போவது சிலரைப்பொறுத்தவரை உண்மை தானே! என்கணவர் என்னை நேசித்த ஆரம்ப காலங்களில் மெலிந்து அழகாக இருந்த நான், இப்போது தாய்மைப் பேற்றினைப் பெற்றதால் கொஞ்சம் அதிகமாகவே ஊதி விட்டேன். இது அவருக்குப் பிடிக்கவில்லை. இதனை மனதிலே வைத்து, எல்லா விதத்திலும் என்மீது குறை கண்டுபிடிப்பதையே தனது பொழுதுபோக்காகக் கொண்டுள்ளார்.

அவர் [illegible] நான் நகர[illegible] இருக்கிறேன். ஒவ்வொருநாளும் எனது கல்லூரியைக் கடந்தே அவர் செல்வார். திருமணமான புதிதில் என்னைத் தனது ஸ்கூட்டரில் ஏற்றிச்செல்லும் அவர் இப்போது அவ்வாறு செய்வதில்லை. காரணத்தை நான் கேட்கவுமில்லை. கேட்கப்போனால் அதுவே பெரியபிரச்சினைக்கு வழிகோலிவிடும் என்று எனக்குத்தெரியும்.

ரவி எனது கல்லூரியிலே கற்பிக்கும் சகஆசிரியர். திருமணமாகி மூன்று பிள்ளைகளும் அவருக்குண்டு. சிலவேளைகளில் பேச்சுத் துணைக்காக சைக்கிளில் அருகருகாக வருவோம். இப்படித்தான் ஒருநாள், இருவரும் சேர்ந்து வருவதை என்கணவர் கண்டுவிட்டார். அன்று தொடங்கிய சண்டை இன்றுவரை ஓயவில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நான் வாயைத்திறப்பதில்லை.



அப்படியிருப்பது அவரது சந்தேகத்தை நான் ஒப்புக் கொண்டதாக அமையும் என அறிந்த போதும், வீண்சச்சரவுகளைத் தவிர்க்க விரும்பியே மௌனத்தைக் கடைப்பிடிப்பேன். எதற்காக என்மீது சந்தேகப்படுகிறார் என்றெண்ணி வருந்துவேன். அவருக்குப்பிடித்த அத்தனையையும் செய்கிறேன். அப்படிச் செய்வதை நான் ஒரு போதும் குறைவாக எண்ணியதில்லை. இதைவிட வேறென்ன வேண்டும்?

சந்தேகம் என்பது நெருப்புப் போன்றது. மூளத்தொடங்கிவிட்டால் உள்மனதை அணுவணுவாக எரித்து இறுதியில் பெருங்குழப்பத்தையே ஏற்படுத்திவிடும்.

பொலபொலவென்று கொட்டத் தொடங்கிய மழையின் தாக்கம், சிந்தனையுடன் சைக்கிள் உழக்கிய என்னை இவ்வுலகுக்குக் கொண்டு வந்தது. என்னிடமுள்ள சின்னக்குடை சுழன்றடிக்கும் பெருமழைக்குமுன் எம்மாத்திரம்? ஒதுங்கி நின்றபின் போகலாம் என்றால், விரைவாக நகரும் மணிக்கூட்டின் முட்களை இழுத்துப்பிடிக்க என்னால் இயலாதே!

நன்கு நனைந்தபடி கல்லூரியை வந்தடைந்தேன். ஒப்பமிட்டுவிட்டு எனது வகுப்பை நோக்கி நடந்தபோது ராஜினி எதிர்ப்பட்டாள். அவள் என்னுடன் கற்பிக்கும் ஆசிரியை. எனது நெடுங்கால நண்பியும்கூட.

"என்னடி தேவகி! இப்பிடி நனைஞ்சுபோய் வாறாய்?" எனது தலையைத் தொட்டுப்பாத்துக் கொண்டு கேட்டாள்.

"மழை வருமெண்டு எதிர்பார்க்கேல்லை. அதுதான்....." சமாளித்தேன்.

"எண்டாலும் பிள்ளையைச் சுமக்கிறாய். இப்பிடிக் கண்டபடி நனையக்கூடாது. கேக்கிறது எண்டு குறைநின்னைக்காதையடி.....உன்ர அவர் ஸ்கூட்டரிலை போறவர்தானே! வெள்ளெணக்கொண்டுவந்து விட்டிருக்கலாமே!"

இதற்கு நான் என்ன பதில் சொல்லுவேன்? எம்மிருவருக்கிடையேயுள்ள பிரச்சினைகளை மூன்றாம் நபருக்குச் சொல்வது அவ்வளவு அழகல்லவே! ஒருவருக்காக இன்னொருவர் செய்யும் நல்லகாரியங்களை வெளியே சொல்லி மகிழ்வதில் நியாயம் இருக்கிறது. மனக்கசப்புக்களை விளம்பரப்படுத்துவது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்குமே தவிர, குறைக்கப்போவதில்லை. பலர் இதனை உணர்ந்து கொள்ளாததாலேதான் குடும்ப உறவுகள் குலைந்து போகின்றன.

"நான் லக்கியடி தேவகி. எனக்கு ரெண்டு பிள்ளையும் பிறந்து இப்ப மூண்டு வருஷமாகுது. அவர் இப்பவும் என்னிலை வலு அக்கறை. எல்லாத்துக்கும் குடுத்துவைச்சிருக்கவேணும்"

பெருகிவரும் கண்ணீரைக் கட்டுப்படுத்த என்னால் இயலவில்லை. அதிர்ச்சியுடன் என்னைப்பார்த்தாள் ராஜினி.

## உடுவில் அரவிந்தன்

"தேவகி ஸொறியடி. நானொரு விசரி! யோசினையில்லாமல் என்னவோ எல்லாம் கதைச்சுப்போட்டன். ஒண்டையும் மனதிலை வைச்சிருக்காதை. வா வந்து தலையைத் துடை. ஈரம் சுவறப்போகுது." என்றவாறு என்னை அழைத்துக்கொண்டு அறைக்குள்ளே போனாள்.

இடைவேளையின்போது கன்ரீனில் ரவியைச் சந்திக்க நேர்ந்தது. தேநீர் அருந்திக் கொண்டிருந்தவன், என்னைக் கண்டதும் ஆரவாரமாக வரவேற்றான். "வாங்கோ மிஸ். என்ன முகமெல்லாம் காஞ்சுபோய்கிடக்கு?" என்றவன் உள்ளே திரும்பி இன்னுமொரு தேநீருக்கு 'ஓடர்' கொடுத்தான். நான் அவசரமாக மறுத்தேன்.

"வேண்டாம் சேர். நான் ரீ குடிக்க வரேல்லை. உங்களிட்ட ஒரு முக்கிய விஷயம் கதைக்கவேணும்"

"என்ன விஷயம் மிஸ்?"

தயங்கினேன்.

'எவ்வாறு ஆரம்பிப்பது? என்னுடன் இவ்வ

(XVஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

**24-04-1999 இலிருந்து 30-04-1999 வரை**

## மகாதேவா ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| புத வி | சூரி சனி | வெ | |
| | இராசிச்சக்கரம் | | ராகு சந் |
| கே | | | |
| | | செவ் | |

*மாற்றம்: 29.4.1999இல் புதன் - மேடம் இராசிக்கு மாறும். 24.4.99இல் ஆயிலியம் - கர்க்கடகம் - இராசியில் சந்திரன் நிற்கும்.*

*அரசியலில் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும். அடுத்தநேரம் என்ன நடக்கும் என்பது தெரியாது. மாகாண சபைகளிலும், மத்தியசபையிலும் அடிக்கடி பதற்ற நிலை ஏற்படும். அழிவுகள், யுத்த நெருக்கடிகள் தொடரும். மக்கள் சலிப்படைவார்கள்.*

*இந்தியாவில் புயல்காற்று அடங்கி விட்டாலும் படகில் ஏறப் பலருக்குப் பயம். அரசியல்வாதிகள், கதாநாயகர்களாக தங்கள் பணப்பைகளை நிரப்பசந்தர்ப்பங்கள் உருவாகும் காலமாகும். கொஞ்சம் பொறுங்கள் அம்மா - ஜெயலலிதா, பயப்படாதீர்கள்! தமிழ் நாட்டு ஆட்சியை உங்கள் கையில் தருவேன் என்பார் சோனியா. அரசியல் சதுரங்க நகர்வு நிகழ்ந்தபடி இருக்கும். எல்லையில் நான் விட்டேனாபார் எனப் பாகிஸ்தான் சீறிநிற்கும். மேற்குலக ஆதிக்க நாடுகள் வடக்கு, மத்தி, கிழக்கு நாடுகளுக்கு யுத்த, பொருளாதார அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும் எனக்கிரக நிலைகள் காட்டுகின்றன.*

### மேடம்

ஒன்றின் அழிவிலிருந்துதான் இன்னொன்றின் ஆக்கம் உருவாகின்றது என்பார்கள். ஆயுள்காரகன் சனீஸ்வரன் அழிவைத்தரவல்லவன். ஆக்க காரகன் குரு. வருகின்ற காலம் மெல்ல மெல்ல முதலிட்டு, புதிய உருவாக்கங்களை கருவாக்க எண்ணங்கள் பிறக்கும் காலமாகும். தொழில்ஸ்தானத்தில் கொஞ்சம் புத்தி சாதூரியமாக நடக்க வேண்டும். பலரும் பலவித அபிப்பிராயங்களைச் சொல்லி வேதனைகள் தந்திடுவார்கள். அடிவயிற்றுநோ, கண்கலக்கம், வயிற்றில் வாய்வுத்தொல்லை, அல்சர், சிலருக்கு உஷ்ணபீடைகள் என்பன வருத்தலாம். சகோதரரால் கலக்கச் செய்திகள் நெருக்கமாக வரும் காலமாகும்.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வெள்ளி.*

### இடபம்

காற்றுத் தொடங்கிவிட்டது. அடிக்கடி தலை குழம்புகின்றது எனச் சிந்திக்கிறீர்களா? கண்ணாடிக்கு முன்னாலே பலமணி நேரம் நின்று தலை வாரினாலும் கணப்பொழுதில் வரும் புழுதிக்காற்று அடிக்கடி குழப்பிவிடும். இவ்வாறு அடிக்கடி தொழில் ஸ்தானத்தில் சிலர் புயல்வேகத்தில் வந்து பல குழப்பங்களைத் தருவார்கள். உங்கள் உறுதியான செயற்பாடுகளிலும் அமைதியான போக்கிலேயும் தான் உங்கள் வெற்றி தங்கியுள்ளது. வீட்டுச் சுகம், வாகன ஓட்டம், புத்திரரால் கலக்கம், இசையில் பிரியம், பிறர் பொருளை அடிக்கடி நேசித்து தொல்லை கொடுப்பது என்பன சர்வசாதாரணமாகும். நரம்பு, கண்கூச்சம், நாரி நோ, மலசல உபாதைகள் என்பனவற்றால் அடிக்கடி கலங்குவீர்.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வெள்ளி.*

### மிதுனம்

இளம் துடிப்பு, பழந்துடிப்பை மிஞ்சுவதா? புதுவிளக்கு மாறும். புது மாப்பிள்ளையும் கொஞ்சக்காலம் அழகாக, அழகைக் காட்டுவார். இது இயற்கைதானே. அதற்கு அடிக்கடி ஆத்திரப்படாதீர்கள். தொழில்ஸ்தானத்தில் புதியவர்களால் மனப்புழுக்கம் ஏற்படும். குறுகிய காலத்தில் அதிக பணம் சம்பாதிக்கப் பல திட்டங்கள் தீட்டி ஓடியாடித்திரிவீர்கள். உங்கள் திறனை உழைப்பில் காட்டுங்கள் என உங்கள் குடும்பத்தார் கேட்கும் காலமாகும். உடல்வலி, கண்வலி, காய்ச்சல் என படுக்கமாட்டீர்கள். ஊரில் நாலு வட்டம் போய்வர நாடி மனம் ஓடும். உங்களுக்கு என்ன கவலை? அடிக்கடி யோசனை என உங்களையே நீங்கள் கேட்டுப்பாருங்கள். கண்ணனிடம் கேளுங்கள் - குழந்தை யேசுவிடம் நாடுங்கள். துன்பச்சுமை குறைந்து போகும் பாருங்கள்.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள்.*

### கடகம்

கலியுகத்தில் விதிமுறைகளை மாற்றும் மனிதர்கள்தான் அதிகம். ஆனால் உங்களை இலேசில் மாற்ற முடியாது போல் இருக்கின்றது. கற்பனைகள் பலவந்து அடிக்கடி மோதி நிற்கும். என்னய்யா மாறி மாறி நோய் வரக்கூடாதா? வாதம் வந்தவருக்கு, இரத்தக் கான்சர் வரும் என எழுத வேண்டாமா? உள்ளதை உரைப்பதல்லவா எம் நிலை என நீங்கள் சொல்லுவீர்கள்: அனுபவத்தால் நீங்கள் கூறுவீர்கள் எல்லோரும் உங்கள் நிலை என எண்ணமுடியுமா? காசுபற்றி யோசனை வரும் காலமாகும். தனிமையில் அமைதி காண முனைந்திடுவீர். சங்கீதஞானம் சஞ்சலங்கள் போக்கிவிடும். அவசரத்தில் பேசிவிட்டு அனுதாபப்பட்டுக் கலங்குவீர்கள். வாதவாய்வு, கைகால் நோ, உடல்பீடை, சலமல உபாதைகள் எனவருந்த இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வியாழன்.*

### சிங்கம்

வேகமான செயற்பாடுகள் தேவை என அடிக்கடி சிந்திப்பீர்கள். பழமையில் புதுமைகாண முனைவதில் தப்பில்லை. சகோதரபாசம் தலை தூக்கியபடி மனச்சஞ்சலத்தைத் தந்துவிடும். தொழில்ஸ்தானத்தில் உண்மைக்கும், முயற்சிக்கும் நன்மை செய்யத் துடிப்பீர்கள். சிலர் தங்கள் தீய செயற்பாடுகளை மறைக்க உங்களைக் குறை சொல்லுவார்கள். ஆனால் காலகதியில் உங்களின் உறுதியான நல்ல செயற்பாடுகளை உலகத்தார் உணருவார்கள். ஆலயத் தொண்டு தேடிவரும் காலமாகும். நெஞ்சுநோ, கைகால் உளைவு, கண்புகைச்சல், வயிற்று நோ என்பன வந்து போகும்.

*அதிர்ஷ்டநாள்:- வியாழன்.*

### கன்னி

கன்னி இலக்கினம் கொண்ட பாரதமே - பாதிவழியில் தடுமாறி நிற்கும் காலமாச்சே! புத்திவான் பலவான் - குருவும் நீசப் புதனும் பார்த்து நிற்கும் காலமாகும். அறிந்த நண்பர்களை அவ்வளவு தூரம் நம்ப முடியாது. சோதனையில் பல வேதனைகள் அரங்கேறிடும் பலன்கள் உண்டு. தொழில்ஸ்தானத்தில் உறுதியான பலன்கள் வரும் காலமென எண்ண வேண்டாம். புதிய நண்பர்கள் இலாபம் கருதிவருகிறார்கள். பட்டெனவும், சட்டெனவும் சங்கடங்கள் வந்து போகும். புன்சிரிப்பை உதிர்த்து, புதுக் கருத்தைச் சொல்லி வந்த உறவை வரவேற்று, வாழ்த்தி நன்று நயம் இருந்தால் பாரும் - புத்திதனை பிரயோகிக்க குருபகவான் பார்வை ஒன்று உண்டு உங்களுக்கு. வயிற்று நோ, வாத வாய்வுத்தொல்லை, கால் பிடிப்பு, தலையிடி காய்ச்சலென வருந்த இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:-வியாழன், வெள்ளி.*

### துலாம்

பூமிகாரகன் செவ்வாய் உதயத்தில் நின்று, அறிவு, ஆக்க நாதனும் அடங்காப்பிடாரி சனீஸ்வரனும் வாக்குவாதம் செய்யும் காலமாகும். தொழில்ஸ்தானத்தில் பல கருத்து வேற்றுமைகள் வந்துவிடும். குடும்பத்தினரின் அலுவலுக்காக அடிக்கடி லீவுகள் எடுக்க நேரிடலாம். வீடுமனை, வாகன சிந்தனை அடிக்கடி மனதில் வந்து போகும். புத்திரரின், சகோதரரின் நன்மைக்காக பல வழிகளில் தேடி ஓடுவீர்கள். சமாதானம் பேசினால் சஞ்சலங்கள் வந்துவிடும். வசைபாடிச் சோதனையும் வேதனையும் சிலர் தந்திடுவர் - கலை நாடிச்செலவுகள் கடுகதியில் வந்து போகும். வயிற்றுக் கோளாறு, வாய்வுத் தொல்லைகள், தலைவலி, முதுகுவலி, அலுப்பு, களைப்பு அடிக்கடி வரும். ஓய்வு எடுக்கவும்.

*அதிர்ஷ்டநாள்:-வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

ஒரு சுபமுகூர்த்த நேரம் எடுக்கும் பொழுது எது முக்கியம், எனச் சிந்திக்கின்றீர்களா? பிறந்த நட்சத்திரத்திற்கு பட்சிபார்த்து எடுக்கும் முகூர்த்தமே சிறந்தது. இச்சந்தர்ப்பத்தில் பிறந்த நாளையோ, மாதத்தையோ கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமில்லை. ஆனால் தொழில்ஸ்தானத்தில் காசுப் பெட்டியில் கண்ணாயிருக்காதுவிடில் எந்த முகூர்த்தமும் வேலை செய்யாதே! கவனமாக இருங்கள். அவசரத்தில் நிதானமிழக்காது தொழில்பீடத்தில் நண்பர்களிடம் விட்டுக் கொடுத்து நடவுங்கள். எதிர்ப்பாலாரைக் கனம் பண்ணுங்கள். குடும்பத்தினரிடையே அபிப்பிராய பேதங்கள் வரும். காணி, பூமி, வாகனம் சம்பந்தமான யோசனைகள் எழ இடமுண்டு. கிருமித்தாக்கம், தொண்டை வரட்சி, சளி, தும்மல், இரத்தக்கொதிப்பு, கைகால் விறைப்பு ஏற்படலாம்.

*அதிர்ஷ்டநாள்:-வியாழன், வெள்ளி.*

### தனுசு

வெளிப்பகட்டுக்காக சிலர் தமது குடும்பத்திற்கே பல பொய்களைச் செய்து ஏமாற்றிப் பிடிபட்டு முழிக்கிறார்கள். ஆனால் நீங்களோ மன அமைதிக்காக பல வாக்குறுதிகளைக் கொடுத்து விட்டு முழிப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் விலாசம் வரும். காசு வராத கலக்கம் உண்டு. மேலதிகாரிகளின் ஆதரவுகள் கிடைக்கும். வயிற்றில் வருத்தம், வாதவாய்வு, கைகால் பிடிப்பு எனவருந்த இடமுண்டு. மனித வாழ்விற்கு மணி மகுட மந்திரங்கள் முக்கியமாகும். மணி, சோதிடம், அது மாறும் அறிகுறிகளை அறியலாம். வைத்தியரிடம் - நோய்க்கு மருந்தும் ஆலயத்தில் தெய்வீவழிபாடும் செய்யவேண்டும். சோதிடரிடம் மருந்து வாங்க முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள்தானே?

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வியாழன், வெள்ளி.*

### மகரம்

தன் தவறை உணராது அவற்றை மறைக்க பிறர் தவறைப் பெரிதாக்கிப் பரப்பி குறைகூறிவரும் ஒருசிலர் மத்தியில் அமைதியுடன் இருப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் உங்களிடம் பல எதிர்பார்ப்புக்களை எல்லோரும் பார்த்தபடி இருப்பார்கள். சகோதரர்கள் நன்மை சொல்ல மாட்டார்கள். எதிர்பார்த்தவை தவறிப்போகலாம். கலகம் பிறந்து நியாயம் பிறக்கும் காலமாகும். அரசியல் இல்லாமல் உலகம் இல்லை. ஆலயம் இல்லாத ஊரும் இல்லை. அமைதியாக, உன்னிப்பாகக் கவனித்தபடி இருப்பீர்கள். தீடிரென உணர்வுகளால் வீண் சந்தேகங்கள் ஏற்பட்டு குழப்பம் அடைவீர்கள். வயிற்றுக் கோளாறு, கைகால் பிடிப்பு, நரம்புவருத்தங்கள், அமைதியின்மை அடிக்கடி சிலருக்கு வரலாம்.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வியாழன், வெள்ளி.*

### கும்பம்

மனம் அடிக்கடி மாற்ற உணர்வுகளைத் தூண்டியபடி இருக்கும். உலகத்தை ஆராய்ந்து அறியலாமா எனச் சிந்திக்கிறீர்களா? முயற்சி செய்வதில் தவறில்லை. ஆனால் ஊர்க்குருவி, பருந்து போல் பறக்க முடியுமா? எதற்கும் விரலுக்குத்தகுந்த வீக்கமும், தகுதிக்குத் தகுந்த வலுவும் வேண்டாமா? தொழில்ஸ்தானத்தில் போட்டிகள், மறைமுகத் தாக்கங்கள் ஏற்படலாம். அதிக லீவுகள் எடுக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். அல்லது கருத்து வேற்றுமைகள், கண்டிப்புகள் மேலதிகாரிகளினால் வரலாம். கைகால் வலி, வரட்சித்தன்மை, படபடப்பு, உஷ்ண பீடைகள் வர இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வியாழன்.*

### மீனம்

உங்களுக்கு ஓடி ஓடி உழைக்க வேண்டும் என ஆவலாக இருக்கும். முயற்ச்சி உடையார் இகழ்ச்சி அடையமாட்டார். தொழில்ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்து நடக்கும். இடமாற்றங்கள், பொருள்வரவு, வெளிநாட்டுச் செய்திகள் மகிழ்ச்சியைத் தரும். மாமன் வழியினருக்கு அல்லது அவர்களின் பிள்ளைகளுக்கு நல்லதல்ல. நண்பர்கள், பெரியவர்களைச் சந்தித்து நன்மை அடைவீர்கள். வாத

## சோதிட சஞ்சீவி

வாய்வு விறைப்பு, சளி, இடுப்பு வலி, காய்ச்சல் என்பன சிலருக்கு வரலாம். எதையும் சாதூரியமாகப் பேசிக் காரியத்தைப் பாருங்கள். அயலவர்களின் உத விகளால் நன்மை அடைவீர்கள். ஏழைகளுக்குத் தானம் கொடுத்து வாருங்கள்.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வியாழன்.*

## மரணத்தின் முடிவில்...!

டையோஜினிஸ் என்ற தத்துவஞானி சில மனித எலும்புகளை உற்றுப் பார்துக்கொண்டிருந்தார். அப்போது அங்குவந்த மாமன்னர் அலெக்சாண்டர் அந்தத் தத்துவஞானியிடம் "என்ன பார்க்கிறீர்கள்?" என்று வினவினார்.

டையோஜினிஸ் மன்னரைப் பார்த்து, "அரசே! நான் எவ்வளவு முயன்றும் உங்களுடைய தந்தையின் எலும்பு எது என்றும், உங்களுடைய அடிமைகளின் எலும்புகள் எவை என்றும் என்னால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை" என்று பதிலளித்தார்.

ஓர் அரசனுடைய உடலையும், அடிமைகளின் உடல்களையும் மரணம் சமமாக்கிவிடுகிறது.

## பனையின் கதை



ஒரு பெரிய அண்டா இருந்தது. அதில் நவதானியங்கள், பால், பழம் முதலியவற்றை மக்கள் போட்டார்கள். அண்டா நிறைந்த பிறகுதான் அதிலுள்ள பொருள்களைப் பங்கிடுவது என்று தீர்மானித்தார்கள். எவ்வளவு தான் பொருள்களைப் போட்டாலும் அண்டா நிறையவில்லை.

ஒருவர் குடம் குடமாகப் பாலைக் கொண்டு வந்து ஊற்றினார். அண்டாவின் அடிப்பாகம் கூட நிறையவில்லை. இன்னொருவர் ஒரு வண்டில் தானியத்தைக் கொண்டு வந்து போட்டார். அண்டா நிறையவில்லை. வீரவல்லி என்பவன் "அண்டாவை மூடப்பண்ண ஒருவழி செய்கிறன் பார்" என்று சொல்லிக் கொண்டு குடம் குடமாக தண்ணீரைக் கொண்டு வந்து நிறைக்க முயன்றான். அண்டா நிறையவில்லை.

**யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்**

ஊர் மக்கள் எல்லோரும் சேர்ந்து கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள். அண்டாவை வெட்டி நிலத்துக்குள்ளே புதைத்துவிட முடிவு செய்தார்கள். எல்லோரும் சேர்ந்து பெரிய குழி வெட்டினார்கள். அதற்குள் அண்டாவை இறக்கினார்கள். அப்போது இடியும் மழையும் ஆரம்பித்துவிட்டது. சோனாவாரியான மழை வெள்ளம் அள்ளிக் கொண்டு வந்த மண் அண்டாவை மூடிவிட்டது.

அண்டா மூடப்பட்ட இடத்திலே ஒரு மரம் முளைத்தது. அதுதான் பனை. அண்டாவுக்குள் மக்கள் கொட்டிய பொருள்களையெல்லாம் அது விதம் விதமான பாங்காகத் தருகின்றது.

தொகுப்பு:- கலாநிதி சபா ஜெயராசா.

## குறள் வெள்ளம்

அறம் - தருமம் - செய்யவெனக் கோவில் மடத்திலே போய் அன்னதானம் செய்ய எல்லாருக்கும் தகுதி இருக்குமா? வசதி வாய்க்குமா?

அவரவர் தன் தகுதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப - இருக்குமிடத்திலேயே - தன் தொழிலிலேயே - அறத்தை ஆற்றிவிடலாம். அது ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் முயற்சி அல்லவா? கடமையும் ஆச்சு. அறமும் ஆச்சு.

பலபேர் வாசலிலே தவங்கிடக்க - அவர்களது தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய வகைத்தான ஒரு கடமையைப் புரிபவர் அறமென்று வேறு மார்க்கங்களைத் தேடி அலைய வேண்டா.

அவரவர் பிரச்சினைகளை ஆராய்ந்து - வகைவகையாக - முறையாக - தேவைப் படும்படி சிக்கல்களை தீர்க்க உதவினால் - *பகுதியான் பாற்பட்டு ஒழுகப்பெறின்* - அதைவிட அறமுண்டோ? அதைவிடத் தகுதி வேறுண்டோ?


வருபவர் அறிந்தோர் - புதியோர், நண்பர் - பகைவர் என்றெல்லாம் வேறாகப் பிரித்துப் பார்க்காது அனைவரையும் ஒரே கண்ணோட்டத்துடன் பார்க்கும் தகுதியே நன்று.

*தகுதி எனவொன்று நன்றே பகுதியான்*
*பாற்பட் டொழுகப் பெறின்* -0111

(செய்நன்றியறிதல்)

-அம்பிகைபாகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்யாணமாம் கல்யாணம்

மதியவெயில் மூர்க்கமாய் மூச்சு விட்டுக் கொண்டிருந்தது. புறோக்கர் கனகசபை 'சுப்பர் சொனிக்' வேகத்தில் சென்று கொண்டிருந்தார். காலில் இருந்த செருப்பு இன்றைக்கோ நாளைக்கோ என்று சேடமிழுத்தது.

"இப்ப போனாத்தான் கெதியில நிவாரணம் எடுத்துக் கொண்டு வரலாம். பொடி நடையாப் போட்டு வாங்கோ" என்று உச்சிவெயிலில் அனுப்பிய 'உத்தமியை' நினைக்கையில் கனகசபையின் மனம் ஒரு முறை 'மைக் டைசனாய்' மாறியது.

"வெயிலுக்க வந்தாலும் பரவாயில்லை. உவன் மனேச்சர் இப்ப பசியில சுடுதண்ணி குடிச்ச நாய் மாதிரியெல்லோ ஏறிவிழப் போறான்" என்று தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டார். தூரத்தே சங்கக் கடை தெரிந்தது.

**த.பிரபாகரன்**

"உங்களுக்கு இந்த மத்தியான வேளையிலதானோ நிவாரணம் எடுக்கோணும்? மனுசன் பசியில இருக்கேக்க நீங்கள் வந்து நிண்டு கொண்டு விண்ணானம் கதைக்கிறியளோ?" மனேச்சர் யாருக்கோ வழங்குகின்ற அர்ச்சனை வார்த்தைகள் கனகசபையின் வயிற்றில் புளியைக் கரைத்தன. சங்கக்கடையினுள் கனகசபை காலடி எடுத்து வைத்தபோது மனமொருமுறை மலேரியாக் காய்ச்சல்காரன் போன்று வெடவெடுத்தது. அடுத்து நிகழ்ந்ததைக் கண்ணுற்ற கன்கசயையால் தன்னேயே நம்ப முடியவில்லை.

"வாங்கோ கனகண்ணை வாங்கோ. உங்களிட்டத்தான் வரவிருந்தனான். நீங்களே வந்திட்டியள்" என்று புன்சிரிப்புடன் வரவேற்ற மனேச்சரைப் பார்த்ததும் 'ஜெயசூரியா அடித்த சிக்ஸர் பந்தாக' உள்ளம் உயரப் பறந்தது.

"என்ன விஷயம் மனேச்சர்? ஆரிட்டையும் சொல்லிவிட்டிருந்தால் நானே வந்திருப்பேன்."

"ஒண்டுமில்லை கனகண்ணை! ஒரு கல்லியாணவிசயம் பற்றி பேச வேனும்".

"ஆருக்கு மனேச்சர்? உங்கட மூத்த மேனுக்கோ?"

"உமக்கு உந்த நக்கல் புத்தி விட்டுப் போகாது காணும். என்ர பிள்ளைகள் தங்களுக்கொரு சின்னம்மா வேணுமெண்டு ஒரே ஆய்க்கினை. அதுதான் ரண்டாந்தாரமாய் கலியாணம் செய்ய இருக்கிறன். எனக்குத் தோதாய் ஒரு பொம்பிளை பாருங்கோவன்."

'இந்த மனேச்சருக்குத் தோதான பொம்பிளை எடுக்கிறதெண்டால் ஆபிரிக்காவுக்குத்தான் போக வேணும்' என்ற சிந்தனை கனகசபைக்குள் துளிர்த்தது.

"என்ன கனகண்ணை! பேச்சு மூச்சைக் காணேலை?"

"மனேச்சர் உங்களுக்குத் தோதான பொம்பிளை கிடைக்கிறது கொஞ்சம் கஷ்டம் தான்."

"ஏன் கனகண்ணை?"

"உங்கட வடிவுக்கும், குணத்துக்கும் ஏத்த பொம்பிளை தேடுறதெண்டால் லேசுப்பட்ட வேலையோ?"

அவ்வளவும் பச்சைப்பொய் யென்று உள்ளுணர்வு 'உத்தியோக பூர்வமாய்' உறுத்திய போதும் கனகசபையின் இந்த வார்த்தைக்கு நல்ல பலன் கிடைத்தது. மனேச்சரின் முகத்தில் ஒருமுறை நாணப் புன்னகை எட்டிப் பார்த்தது.

"டேய் வரது! மற்றவைக்குப் பின்னேரம் சாமான் குடுக்கலாம். பாவம் கனகண்ணை ஏதோ அவசரமாம். முதல்ல அவற்றை சாமானைக் குடுத்துட்டுக் கடையைப் பூட்டு." என்ற உத்தரவு 'சேல்ஸ்மனை' நோக்கிப் பிறப்பிக்கப்பட்டு, உடனேயே செயற்படுத்தப்பட்டது. சந்திரனைத் தொட்டுச் சரித்திரம் படைத்திட்ட 'ஆம்ஸ்ட்ரோங்'கைப் பார்ப்பதுபோல் ஊர்ச்சனம் ஒரு முறை கனகசபையைத் தம் கண்களால் வியப்புறப் பார்த்து விட்டு, புறுபுறுத்தபடி கலையத் தொடங்கினர்.

" மனேச்சர் அப்ப சீதனம் என்ன மாதிரி?"

"ஊருலகத்தில நடக்கிறது உங்களுக்குத் தெரியுந்தானே! பார்த்துக் கீத்துச் செய்யுங்கோவன்"

"உங்களுக்குத் தாராளமனசு. எண்டாலும் நீங்கள் எவ்வளவு எதிர்பார்க்கிறியள் எண்டு தெரிஞ்சால் நல்லது."

"சீதனமாய் ஒரு பத்து லட்சம் ரூபா காசு மட்டும் காணும்."

'பாவி! ரண்டாந்தாரத்துக்கே உப்பிடிக் கேடகிறானெண்டால் முதலாம் தாரமாய்ச் செய்ய எவ்வளவு கேட்டிருப்பான்?' கனகசபைக்குள்ளிருந்த பட்சி படபடத்தது.

"என்ன கனகண்னை! கனக்க யோசிக்கிறியள்?" என்று மனேச்சர் கேட்டவுடன் சுயநினைவுக்கு வந்தார் கனகசபை.

"ஒண்டுமில்லை. ஒருக்காய்ச் சங்கக்கடை 'ரவுண்டடிச்ச' மாதிரி இருந்திச்சுது."

"இருக்கும்! இருக்கும். இந்தக் கலிகாலத்தில இப்பிடியும் நல்ல மனிசர் இருக்கினமோ? எண்டு நினைக்கேக்க சங்கக்கடை மட்டும் இல்லை உலகமே ரவுண்டடிச்சாலும் அடிக்கும்"

ஏதோ உலக மகாப்பகிடி விட்டதைப் போல மனேச்சர் கடகட வெனச் சிரித்தார்.

"மனேச்சர்! கனகண்ணையின்ர நிவாரணச் சாமானெல்லாம் குடுத்தாச்சு. கடையைப் பூட்டட்டோ?" என்று சேல்ஸ்மன் வரது கேட்கும் வரை மனேச்சரின் சிரிப்பு நிற்கவில்லை.

"ஓ! பூட்டு. பூட்டிப் போட்டுத் துறப்பையும் நீயே கொண்டு போ. நான் பின்னேரம் சங்கத்துக்குக் கொஞ்சம் சுணங்கித்தான் வருவன்." என்று மனேச்சர் சொல்லும் போது -

"மனேச்சர்! இஞ்ச பாருங்கோ! அரிசியுக்க எந்தப் பெரிய புழுக் கிடக்குதெண்டு!" என்று கனகசபையின் குரல் குறுக்கிட்டது.

"கனகண்ணை! உந்தப் புழுவில உள்ள சத்து வேறென்னத்தில இருக்குது? விற்றமின், புரதம், அது இதெண்டு ஊருப்பட்ட சத்து உதில இருக்குது. உந்த அரிசியைக் கொண்டு போய் சமைச்சுச் சாப்பிட்டுப் பாருங்கோ. ஓமக்குச்சி மாதிரி இருக்கிற நீங்கள் உசிலமணி மாதிரி வருவியள்"

'அப்ப மனேச்சரும் உதைத் திண்டுதான் குழுமாடு மாதிரிக் கொளுத்தவரோ' கனகசபையின் மனம் கடுகதியில் சிந்தித்தது.

"சீதனத்தைப் பற்றி விலாவாரியாக் கேட்டுப்போட்டியள். ஆனா பொம்பிளை எப்பிடி இருக்கோணும் எண்டு கேக்கேலையே?" என்று மனேச்சர் மெதுவாக வினவினார்.

"உங்களுக்குத் தோதாய் இருந்தால் சரியெண்டு நீங்கள்தானே சொன்னியள்"

"சரி! சரி! வடிவும், காசும் இருக்கிற மாதிரி ஒரு நல்ல சாதகத்தோட கெதியில வாங்கோ"

"அப்ப பொம்பிளையின்ர குணம் ..?"

"அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. பொம்பிளை எப்படி இருந்தாலும் நான் சமாளிச்சுடுவன்."

"அப்ப மனேச்சர் கெதியில ஒரு நல்ல சாதகத்தோட வாறன்" என்று கூறிவிட்டு நடையைக் கட்டினார் கனகசபை. அவரது மனதில் 'இண்டைக்கு நரிமுகத்திலதான் நான் முழிச்சிருக்க வேணும்' என்ற எண்ணம் மேலோங்கி நின்றது.

* * *

மாலை நேரத்து இளந்தென்றல் இதமாக வீசிக் கொண்டிருந்தது. வாசலில் ஆளரவம் கேட்டு வெளியே வந்தார் கனகசபை. அங்கே அவருக்குப் பரிச்சயமில்லாத ஒரு மனிதர் நின்றிருந்தார்.

" புறோக்கர் கனகசபையெண்டுறது....." வந்தவர் வினாவினார்.

"அது நான்தான். உள்ளுக்க வாங்கோ. நீங்கள்தான் ஆரெண்டு விளங்கேலை" என்று கனகசபை கூறி முடித்ததுதான் தாமதம் வந்தவர் படாரெனக் கனகசபையின் பாதங்களில் வீழ்ந்தார்.

"அண்ணை! நீங்கதான் என்ர மகளுக்கு வாழ்வு குடுக்கோணும். உங்களைத்தான் நம்பி வந்திருக்கிறன்." என்று புலம்பியவாறு எழுந்து கனகசபையின் கைகளைப் பற்றிக் கொண்டார். அடுத்த கணத்தில் காத்தற்கடவுளான கண்ணபிரானாய் கனகசபை மாறினார்.

"என்ன விஷயம் எண்டு சொல்லுங்கோ. என்னால முடிஞ்சால் உதவி செய்யிறன்"

"அண்ணை! நீங்கள்தான் இந்த ஏரியாவுக்குள்ளேயே திறம் புறோக்கர் எண்டு கேள்விப்பட்டனான்."

"ஓம்! ஓம்! அதுக்கிப்ப என்ன?"

"நான் ஏகாம்பரம். சுழிபுரத்தில இருந்து வாறன். எனக்கு ஒரேஒரு மகள். பேர் கௌரி. காசும் இருக்குது. வடிவும் இருக்குது. ஆனா........"

"ஆனால்....?"

நெற்றியைச் சுருக்கினார் கனகசபை. சுற்றும் முற்றும் பார்த்து விட்டு ஏகாம்பரம் கனகசபையின் காதுக்குள் குசுகுசுத்தார்.

"எட! இவ்வளவுதானே உதுக்கேன் உப்படிக் கவலைப்படுறியள்? ஆனா ரண்டாந் தாரமாய்த்தான் கட்டிக் குடுக்கலாம்" என்றார் கனகசபை.

"அண்ணை! ரண்டாந்தாரமோ, மூண்டாம் தாரமோ அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. என்ர பிள்ளைக்கொரு கலியாணம் நடந்தாச் சரி."

"பிறகென்ன! கவலைப்படாமல் வீட்டைபோய் கலியாணத்துக்கு ஒரு நல்ல நாளாப் பாருங்கோ. நானொரு நல்ல மாப்பிளையோட வாறன்."

கனகசபையை நோக்கி நன்றியுடன் பார்த்து விட்டு ஏகாம்பரம் நடையைக்கட்டினார்.

* * *

மாதமொன்று கழிந்தது. கனகசபையரின் தீவிர முயற்சியின் முடிவாகச் சுழிபுரத்து ஏகாம்பரத்தின் மகள் கௌரிக்கும், மனேச்சருக்கும் மணமேடை அமைந்தது. கலியாண வீட்டுக்கு வந்த அத்தனை பேரும் மனேச்சரை வியப்புடன் பார்த்தனர்.

"உப்பிடியெல்லோ மனிசர் இருக்கோணும்"

"எங்கட மனேச்சர் மாதிரி நாலு பேர் இருக்கிற படியாலதான் மழையே பெய்யுது"

"மாப்பிள்ளை சரியான இரக்க குணம் உள்ளவர் போல" - என்ற முணு முணுப்புக்கள் மனேச்சரின் காதுகளில் தேனை வார்த்த வண்ணம் இருந்தன. மூன்றாவது திருமணம் செய்த நெல்சன் மண்டேலாவுடன் தன்னை ஒப்பிட்டுப் பாத்து மனேச்சர் பூரித்துப் போனார். 'நான் ரண்டாவது கலியாணம் செய்ததுக்கே இப்பிடி வாழ்த்துற சனம் நாலைந்து கலியாணம் செய்தால் எப்பிடி வாழ்த்தும்? கனகண்ணையிட்டச் சொல்லி அடுத்த கல்லியாணத்துக்கும் அலுவல் பார்க்க வேணும்' என்ற எண்ணம் மனேச்சரின் மனதில் உதித்தது. மணமேடைக்கு வந்த மணப்பெண் கௌரி பவ்வியமாக மனேச்சரின் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். அடிக்கடி மனேச்சரைப் பார்த்து 'க்ளுக்'கென்று சிரித்துக் கொண்டாள். தாலி கட்டு முடிந்தது. அனைவரும் அறுகரிசி போட்டு ஆசி கூறத் தொடங்கினர். அப்போது பெண்ணின் தந்தை ஏகாம்பரம் எழுந்து நின்றார். கலியாண வீட்டுக்கு வந்திருந்தவர்களைப் பார்த்து -

" எல்லோரும் நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளுங்கோ" என்றார்.

சனக்கூட்டம் ஒரு முறை சலசலத்து அமைதியாய் அடங்கியது. என்ன கூறப்போகிறார் என்ற ஆவலில் மனேச்சர் உட்பட அனைவரும் அவரை நோக்கினர்.

"நான் மனேச்சர் மணியத்தை என்ர மருமகனாக அடையப் பெரும் புண்ணியம் செய்திருக்கோணும். இவர் சாதாரண மனிசனில்லை. தெய்வப் பிறவி. என்ர குலத்தை வாழவைக்க வந்த ஒளிவிளக்கு...."

மனேசருக்கு [illegible] ஐஸ்கட்டி தலையில் கொட்டியது போன்று உச்சி குளிர்ந்தது. ஏகாம்

(XV ஆம் பக்கம், பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 99

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | | ■ | 10 | | | |
| 11 | ■ | 12 | 13 | | | | ■ |
| ■ | 14 | | | | | ■ | 15 |
| 16 | | ■ | 17 | | ■ | 18 | |
| 19 | | 20 | | ■ | 21 | | |
| 22 | | | ■ | 23 | | | |

**சொற்சிலம்பம் இல. 99**

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ....................................................

விலாசம்: ....................................................

....................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவு திகதி: 30-04-1999

**இடமிருந்து வலம்**

1. பட்டறிவு. 5. ஒரு மல்யுத்த வகை. 7. எண்களுடன் சம்பந்தப்பட்டது. 8. முதல் ஈரிலக்க எண். 9. வழங்கு. 10. கூர்மையில்லாத - பின்னடைவான. 11. ஓர் உறுப்பு. 12. காலங்களில் ஒன்று 14. ஐந்தில் வளையாதது: இதில் வளையுமா? 16. தலம். 17. நிறுத்து. 18. தாய்க் குலத்தின் இனம்.19. வியப்பூட்டும் செயல். 21. மந்தை. 22.. வெறுமனே. 23. பழைய காலப் பயண வாகனம்.

**மேலிருந்து கீழ்**

1. உள்ளூரச் சிரித்தல். 2. தவளை. 3. தகுதியான நிலை. 4. பிரி. 5. தூய தன்மை. 6. முட்டும். 8. பெரும் கொட்டகை. 10. அமைச்சன். 13. பிரதிக்ஞை. 14. காலம் காலமாக வரும் நம்பிக்கை. 15. மீன் பிடிக்க வீசுவது. 16. பேய். 18. உடுப்பு, பொருட்கள் அடுக்க உதவுவது. 20. கூட்டம். 21. இசையுடன் கூடிய பாட்டு.

### சொற்சிலம்பம் 97 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

| | | | |
|---|---|---|---|
| 1. பாதுகாத்தல். | 6. கட்சி. | 7. சிம். | 8. வட. |
| 9. விடுவிப்பு. | 11. தன்வினை. | 13. டபாரா. | 14. நாவாய். |
| 15. தசாகம். | 17. கவி. | 19. ஓவியம். | 20. பிள்ளை. |
| 21. சிரம். | 22. சதா. | | |

**மேலிருந்து கீழ்**

| | | | |
|---|---|---|---|
| 1. பாகவதம். | 2. துட்டன். | 3. காசி. | 4. தண்டு. |
| 5. தம். | 7. சிப்பாய்கள். | 9. வினை. | 10. விடவா. |
| 12. விவசாயம். | 14. நாம். | 15. தவிர. | 16. கம். |
| 18. விளைவு. | 19. ஓசி. | 20. பிதா. | |

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

முதலாம் பரிசு: மா. மகாலிங்கம்,
'லிங்கவாசா'
கைதடி மேற்கு,
கைதடி.

இரண்டாம் பரிசு: பி. அன்ரன் ஜெயக்குமார்,
தரம் 12 (கணிதம்)
மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

மூன்றாம் பரிசு: த. நாகராசா,
அருளம்பலம் லேன்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 98 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர் நிலை தேறுமா?

நத்திய மானதோர் நீள்துயர் வாழ்வினில்
எத்தனை நாளிவர் ஏங்குவர் தூங்குவர்
சித்திரை வந்துமோர் சீர்நிலை தேறுமோ
இத்தரை மீதினில் இன்பமும் சேருமோ?

யுத்தமும் நீசமும் யௌவன மாய்தலும்
புத்தமும் ஞானமும் பேசிடும் நாட்டினில்
வித்தினில் நஞ்சேற்றி வேரினைச் சாய்த்திடல்
இத்தரை மீதினில் இன்றுடன் நீங்குமோ?

ஆட்களைக் காட்டியே அழிவுக்குக் கூட்டலும்
பூக்களை மொட்டினில் பறித்துயிர் தீய்த்தலும்
நாட்களாய் யுத்தத்தில் நலிபவர் சோரலும்
கேட்பதற் காளிலா கோன்மையும் நீளுமோ?

உழுத மண்ணில் ஊன்றிய பயிர்களை
முழுதும் மாய்த்திட மூண்டிடும் போரினால்
அழுதம் மானிடர் அகதியாய்ப் பெயர்ந்திடல்
எழுதல் ஆகுமோ ஏக்கமும் தீருமோ?

பள்ளிப் பக்கமே பார்த்திடாப் பிள்ளைகள்
பள்ளிக் கூடமே புக்கிடம் ஆதலும்
அள்ளிச் சென்றிவர் ஆற்றலைத் தூர்த்தலும்
கொள்ளிக் காக்கிடும் கேவலம் என்னவோ?

வன்மத் தோடுயிர் வதைத்தலும் தாழ்த்தலும்
என்புத் துண்டுகள் எடுத்தலும் ஆய்தலும்
ஜென்மந் தோறுமே ஜெகத்தினில் நீளுமோ
அன்பைத் தேடியே அடைந்திட யாருளர்?

வெற்றியை மட்டுமே வேட்கையாய் கொண்டெழு
முற்றிய போதையின் மோதலில் தேர்தல்கள்
சுற்றியே துன்பத்தின் சூழலைச் சேர்த்திடல்
வற்றியே போகுமோ வாழ்வியல் ஓங்குமோ!

- மாவை. வரோதயன்.

# சின்னச்சின்ன ஆசை

சின்னச் சின்ன ஆசை
சிரிக்க நல்ல ஆசை!
முத்து முத்து ஆசை
ஆட்சி முடியாமல் இருக்க ஆசை!

மாநகர சபையில்
முதல்வராக ஆசை!
கிடைக்கின்ற வாய்ப்பை
அனுபவிக்க ஆசை!

நாற்காலியில் அமர்ந்து
'பவர்'காட்ட ஆசை
ஆட்சியில் இருந்து
சொத்துச் சேர்க்க ஆசை!

சண்டை வந்ததும்
அறிக்கை விட ஆசை!
சொன்னதை எல்லாம்
மறந்துவிட ஆசை!

ஆட்சியில் இருந்து
வளங்கள் சேர்க்க ஆசை!
மக்களின் வாக்குகளை
தம் பக்கம் இழுக்க ஆசை!

சின்ன சின்ன ஆசை
சிரிக்க நல்ல ஆசை!

-ச.த.வசந்தன்.

# புண்ணிய பூமியெங்கும் புண்

சிவபூமி என்று திசையாவும் செப்ப
தினவூறி நின்ற நிலமே
திருமாது, வற்றாக் கலைமாதினோடு
விறல்மாதும் ஆடும் தலமே
தவஞான மோங்கி தமிழ்மானம் வீங்கி
தனிநாமம் காத்த பலமே
தவிலோடு தாளம் கவிகேட்கும் போதில்
தலையாட்டும் இன்ப குளமே
பவிசாக வாழ்ந்து பசிதீர்த்து நீண்டு
படையாண்டுயிர்த்த பொழுது
பலியான தாச்சு! பழசெல்லாம் போச்சு!!
பயங்கரம் சீண்டிச் சுடுது
புவி; தொட்டுப் பூசித் தொழுதமண் எங்கும்
புதைகுழி தோண்ட வருது
புதையல்கள் போல எலும்பெச்சம் நித்தம்
புதுசு புதுசாக எழுது!

வயலோரம், கோவில், விளையாட்டுக்கூட
மடியெங்கும் 'மனிதப் புதையல்'
வரலாற்றின் வாயில் மண்போட்டு....வென்று
மடைவைத்தோர் செய்த படையல்.
புயற்கால ராவில் புரியாமல் வீழ்ந்த
புதிர்களின் மிச்சச் சொரியல்.
"பொலி பொலி" என்று பொலியுதே....'புண்ய
பூமி'யோ சாவின் மடியில்.
துயில்கொண்டு இன்னும் மறைந்தெத்தனை'பேய்க்
குழி'யுண்டோ யாரார் அறிவார்?
'தொலைந்தோரில் ஆர்தான் புதைந்தார்கள்' ஆர்இச்
சுடுங்கேள்வி விடையைப் புரிவார்?
பயங்காட்டும் மர்மக் குழியாவும் தோண்டி
மெய்யையார் மீட்டு எடுப்பார்?
பழிசேர்ந்த மண்ணின் துடக்கைக் கழித்தார்
பழையபடி பாட வருவார்?

-அருணன்.

# நெஞ்சக் குமுறலை யார்க்கெடுத் துரைப்போம்?

யுத்தங்கள் ஓயாதா சத்தங்கள் தீராதா
மண்மீது நாம்படும் துன்பங்கள் மாறாதா
செல்லடி கெலியடி சொல்லடி பொல்லடி
விமான வீச்சுக்கள் விழுந்தெழும் பல்களும்
எண்ணிலா துன்பங்கள் இப்படி எத்தனை?

வீடு வாசல் விளைநிலம் இழந்தோம்
மாடி மனைகள் மண்டபம் மறந்தோம்
தேடித் தேடியே இடம்பல அலைந்தோம்
தேற்றுவார் இன்றித் தேம்பி அழுதோம்
மாற்றுடை அன்றியும் மனம் தவித்திருந்தோம்
பஞ்சம்பசி பட்டினி பலநாட் கிடந்தோம்
பலகாத தூரம் தனிவழி நடந்தோம்
நெஞ்சம் துடித்து ஆவி பிரிந்திட
நெடுவழி தனிலே தனிவழி போனோர்
நெஞ்சக் குமுறலை யார்க்கெடுத் துரைப்போம்?
இட்ட தெய்வங்கள் இருந்து மென்பயன்
துட்டர் கொட்டத்தை யடக்க யாருளர்?

மட்டமாய் பேசுறார் மடக்கவும் பார்க்கிறார்
எட்டி உதைக்கிறார் ஏளனம் செய்கிறார்
தட்டிக் கதைக்கிறார் தந்திரம் பேசுறார்
நட்ட நடுவீதியில் நாய்போல் நடத்துறார்
கட்டி யடிக்கிறார் கதறிடக் கொல்கிறார்
முட்டி மோதுறார் மூக்குடை படுகிறார்
குட்டக் குட்டத் தலையைக் கொடுக்கிறார்

தமிழைப் போற்றிடும் தங்க மானவர்
உயிரைப் போலதைக் காத்திடும் ஈழவர்
அந்நியர் ஆதிக்கம் அடக்கி ஒடுக்குவர்
ஆண்டவர் பரம்பரை மீண்டுமே ஆளுவர்
நீண்டதோர் வாழ்வு தமிழொடு வாழுவர்!

-உமா செல்லத்துரை.

# -நாணயமும் நாநயமும்-

காசு கண்ணியம் வாய்மை நேர்மை
காக்கும் திறனே நாணயம் ஆகும்.
பேசும் வார்த்தை பிசகா வகையில்
பேணும் அன்புப் பேறே நாநயம்
இரண்டும் ஒன்றாய் இணைந்து வாழ்வோர்
எவரும் போற்றும் மனிதர் ஆவார்.
திரண்ட புகழும் தெய்வ அருளும்
தேடி வரஇவர் தேற்றம் அடைவர்
மண்ணில் நல்ல வண்ணமாய் இவற்றால்
மாமனி தர்கள் மகத்துவம் பெற்றார்.
எண்ணி இதனை எல்லா மக்களும்
ஏற்று நாணயம் நாநயம் காப்போம்
அயலவன் சொத்தினை அபகரிப் பதுவும்
அன்பிலாச் சொற்களை நாவால் உதிர்த்தலும்
கயவரின் இயல்பெனக் காட்டுவர் சான்றோர்.
காரிய சித்தி கெடுமென் றுரைப்பர்.
பொதுசன நிதியம் அறக்கொடை நன்கொடை
பொசிப்பென எண்ணிப் பொதுக்குவோர் எல்லாம்
அதுஅவர் சமர்த்தியம் என்றே எண்ணுவர்.
அவலம் உயிர்க்கு வருமென நண்ணார்
தேடும் இத்தகு செல்வம் யாவும்
ஓடும் ஒருநாள் என்பதும் உணரார்
வாடும் மக்களுக் குதவுதல் ஒன்றே
வாழ்விற் குதவும் வைப்புழி ஆகும்
'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்'
இன்சொல் பேசார் வன்பகை ஏற்பர்,
ஓயா தொதுக்கினால் நாணயம் கெட்டிடும்
ஔவியம் பேசினால் நாநயம் போய்விடும்
எதனைக் கொண்டு வந்தோம் இங்கே?
எல்லாம் இங்கு எடுத்தது தானே!
அதனை விட்டு ஒருநாட் போவோம்
அறமது ஒன்றே உயிர்க்கு ஊதியம்
அன்பு வார்த்தைகள் ஆயிரம் இருக்குதே!
அவற்றை நாவால் அள்ளி அள்ளி
இன்ப மாக கொடுத்தால் எவரும்
இதமாய்(ப்) பதமாய் ஏற்று மகிழ்வர்
இதுவே செலவு இல்லாக் கொடையாம்!
என்பதை உணர்ந்து இன்சொல் பேசுவீர்
சொல்லும் செயலும் ஒன்ற வாழ்வதே
வெல்லும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!
'நல்லம் யாமெனும் நடுவு நிலமையை'
ஒல்லும் வகையால் உணர்த்துவ திதுவே!

நயினைக் கவிஞர் நாக: சண்முகநாதபிள்ளை.




# இது ஒரு புதுவிதம்

தமிழ் அற்புதமும் புதுமைகளும் நிறைந்தது. சொற்கள், வேற்றுமை ஏற்கையில் வேறாகிய பொருளும், சுயமாய் ஒரு பொருளும் கொண்ட தன்மையை இனிமையாய்ச் சொல்வதாய் எழுதப்பட்ட கவிதை இது:-

காலைப் பொழுதினில் பேருந்திலே
காலை வைக்கையில் மணியாறு
மாலை மணிகளாய் மக்களிது
மாலைப் பொழுதல்ல புலர்போது!

வேலை நிகர்த்த விழிகொண்டார்
வேலைத் தலத்துக்காய் ஏறிக்கொண்டார்
வாலைக் குமரியர் வண்ணங்கண்டு
வாலைக் குழைத்திடுங் கன்றானேன்.

சேலை கட்டிய செவ்விதழார்
சேலைக் காட்டியென் கண்பறித்தார்
நூலைக் கையினில் சேர்த்த இடை
நூலை ஒத்ததை வியந்துநின்றேன்.

ஆலைக் கரும்பென மனமாட
ஆலைக் காண்வெயிற் பயணியானேன்
பாலைக் குளிர்த்திடும் பார்வையிலே - என்
பாலைவன மனமது பூவாச்சு!

சேல்-கண்
நூல்-புத்தகம்.
ஆல்-மரம்.

-ச. சாரங்கா.

# கடன்படக் கூடாது காண்!

கடனில்லாக் கஞ்சி கால்வயிறு போதும்
மடமயிலே நீ மொழியாய் – உடனிருந்து
மூடமாக்கி யெம்மை முனியாக்கு மிந்தக்
கடன் படக் கூடாது காண்.

செலவுக் கேற்பச் செவ்வனே – வருமதி
நிலவுமே யானால் நிம்மதி – நிலவுலகில்
வரவினைச் செலவு மேவுமே யாமாகில்
திரண்டுமே அழிக்குந் திகை.

செய்தொழில் எதிலும் சீர்பெறும் இலாபம்
எய்திடின் என்றும் ஏற்றம் – பொய்யாகிக்
கையிலே நட்டம் காணுமே யாமாகில்
போயிடும் என்றும் புகழ்.

வட்டிக்குக் கடன்வாங்கி வருந்தேவை
தீர்த்தால்
மூட்டியே யெம்மை மூடமாக்கும் – வட்டிதான்
மூச்சினைப் பறித்தெமை முழுமோச மாக்கிடும்
தீச்சுவாலை யென்றே தெரி.

திடங்கொண்டராவணனும் செருக்களத்து
நின்றநிலை
கடன்பட்டார் நெஞ்சம் போலாமே – மடமாதே
திடமாய் முடிவைச் சிந்தித்தே யெடுப்போம்
கடன்படக் கூடாது காண.

-செ.சுதாகரன்.

# 'உயிர் வாழும் வரையில் உறவு'

தந்தை தாயார் உறவு – அது
தரணியில் தோன்றிய உறவு
சொந்தச் சகோதரர் உறவு – அது
உதிரத்தில் சேர்ந்த உறவு!

பள்ளியில் குருவின் உறவு – அது
பயின்றிட வந்த உறவு
பள்ளிச் சிறுவர்கள் உறவு – அது
பழகிய தோழமை உறவு!

மண்ணின் மீதுள்ள உறவு – அது
மறையாப் பற்றின் உறவு
கண்கள் கலந்த உறவு – அது
காதலன் காதலி உறவு!

கணவன் மனைவி உறவு – அது
குடும்ப வாழ்வின் உறவு
மணக்கும் மலரின் உறவு – அது
வண்டை ஈர்க்கும் உறவு!

இறைவன் ஞானி உறவு – அது
அருளால் உயர்ந்த உறவு
மறைவில் காணும் உறவு – அது
மருவும் காம உறவு!

வழியில் கிடைக்கும் உறவு – அது
துணையால் வந்த உறவு
அழியும் உடலின் உறவு – அது
உயிர்வாழும் வரையில் உறவு!

-அரியாலையூர் சி.சிவதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் சுகமானதா? அல்லது சுவையானதா?

**கொக்குவில். ரி.பிரேம்.**
இந்தியாவில் இளம் பெண்கள் சடுகுடு விளையாடுகிறார்களே?
☺ **அவர்கள் என்ன குடுகுடு கிழவிகளா? இளம் பெண்கள் சடுகுடு விளையாடுவதில் என்ன தவறு? அதை ரி.வியில் பார்க்கும் போது உமக்கு கிடுகிடு என்று ஏறுவதற்கு அவர்களை என்ன செய்வது?**

❀ ❀ ❀

**மீசாலை. அ.அழகன்.**
'பாட்டி' என்று சொன்னால் முதிய பெண்களுக்கு மூக்கின் மீது கோபம் பொத்துக் கொண்டு வருகின்றதே!




❀ **இது அன்ரி யுகம். நைன்ரிகளையும் 'அன்ரி' என அழைத்துச் சமாளியுங்களேன்.**

❀ ❀ ❀

**துன்னாலை. ஐ.கனகு.**
சங்ககால பரத்தையருக்கு எங்ககால நாமம் என்னவோ?
❀ **சின்னவீடு என்று கௌரவமாகச் சொல்லுவார்களே!**

❀ ❀ ❀

**மந்திகை. ஞானம்.**
கருத்து வேற்றுமை கொண்ட கணவன் - மனைவி குடும்பம் நடத்தலாமா?
❀ **ஏன் நடத்தக்கூடாது. கருத்து வேற்றுமை கொண்டோர் சேர்ந்து நாட்டை ஆளும்போது கருத்து வேற்றுமை கொண்டோர் சேர்ந்து ஏன் வீட்டை ஆளக் கூடாது. கருத்து வேற்றுமையால் நாடாளுமன்றத்தில் நாற்காலிகள், பேப்பர் வெயிட்டுகள், செருப்புக்கள் என்பன பறக்கும்: வீட்டிலே பாத்திரங்கள் பறக்கும். அதுதான் வித்தியாசம்.**

❀ ❀ ❀

**சங்கத்தானை. கா.கார்த்திக்.**
பேசுபவரை ரி.வியில் பார்த்துக்கொண்டே கதைக்கக் கூடிய தொலைபேசிகள் வரப் போகின்றனவாமே?
❀ **அலுவலகத்தில் டைப்பிஸ்ட்டின் மடியில் தலை வைத்துக் கொண்டு வீட்டில் இருக்கும் மனைவியைத் தொலைபேசி மூலம் தாஜா செய்யும் கணவன்மார்பாடு தான் இனிச்சிக்கல்.**

❀ ❀ ❀

**கந்தர்மடம். வி.ரமேஷ்.**
திருமதிக்கும் திருவாட்டிக்கும் என்ன வேறுபாடு?
❀ **திருவை (கணவனை) மதிப்பவர் திருமதி என்றும் திருவை வாட்டி எடுப்பவர் திருவாட்டி என்றும் சொல்லலாமா? (வித்துவானை வாட்டி எடுப்பவர் வித்துவாட்டி என்று கூட பொருந்தி வருகின்றதே!)**

❀ ❀ ❀

**மறவன்புலோ. ரி.மாறன்.**
வித்துவானே! பெண்கள் உங்கள் மீது இவ்வளவு கோபப்படுகின்றார்களே. அது குறித்து உங்களுக்குக் கவலை இல்லையா?

## வித்துவான் பதில்கள்

❀ **கோபம் இருக்கும் இடத்தில்தான் குணம் (அன்பு) இருக்கும் என்பது உமக்குத் தெரியாதா?**

❀ ❀ ❀

**குருநகர். லூஸி.**
தனியார் வைத்தியசாலைகளிலே பயிற்சி பெறாத தாதிமார் ஊசி போடுகின்றார்களே! பயமாக இருக்கின்றதே?
❀ **பயப்படாமல் போங்கள். டாக்டர்மார் இதுவரை ஊசி போடப் பழக்காமலா விட்டிருப்பார்கள்?**

❀ ❀ ❀


**ஊரெழு. சி.ஐயக்கோன்.**
கிராமத்து மக்கள் நீண்ட காலம் வாழுகின்றார்களே?
❀ **அங்கே டாக்டர்கள் இல்லை. அது உமக்குத் தெரியாதா?**

❀ ❀ ❀

**நல்லூர். வி.கிருஷ்ணா.**
வென்றாலும் தோற்றாலும் வருமானம் தரும் தொழில் இருக்கின்றதா?
❀ **ஏன் இல்லை? சட்டத்தரணி தொழில் தான் அது. கேஸ் தோற்றாலும் 'பீஸ்'தான். வென்றாலும் 'பீஸ்'தான்!**

❀ ❀ ❀

**இணுவில். ரி.லதா.**
எனது கணவருக்கு நித்திரையில் நடக்கும் வருத்தம். என்ன செய்யலாம்.




❀ **இப்போது பல ஆண்களுக்கு இந்த வருத்தம் உள்ளது. பயப்பட வேண்டாம். அயல்வீட்டுக்குப் போய்வர வருத்தம் மாறி விடும்.**

❀ ❀ ❀

**அல்வாய். நி.சோமன்.**
இரு வேறு இனத்தவருக்குப் பிறக்கும் குழந்தைகள் விவேகிகளாக இருக்கின்றார்களே!
❀ **ஒட்டு மாங்கன்றுப் பழம் இனிப்பு அதிகம் தானே!**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். க.பிரசாந்தன்.**
வித்துவானப்பா! 'படையப்பா' எப்படியப்பா?




❀ **சூப்பர் ஸ்டாரப்பா! ஸ்டைலோ தூளப்பா! வசூலைக் கொட்டுதப்பா!**

❀ ❀ ❀

**உரும்பராய். த.ஜெனித்தா.**
பெண்களை முடிவு கேட்டுத் துரத்தித்திரியும் ஆண்கள் குறித்து..........
❀ **விளக்கில் வீழும் விட்டில் பூச்சிகள் அவர்கள். விட்டு விடுங்கள்!**

❀ ❀ ❀

**பண்ணாகம். எஸ்.வி.**
காதல் சுகமானதா? அல்லது சுவையானதா?
❀ **சுவை - சுகம் - சுமை.**

❀ ❀ ❀

**அச்சுவேலி. செ.சகுந்தலன்.**
நீங்கள் தமிழ்த் திரைப்படங்கள் பார்ப்பதுண்டா?
❀ **அதில் வருபவற்றைத்தான் தினசரி குச்சொழுங்கைகளில் பார்க்கிறோமே!**

❀ ❀ ❀

**வதிரி. அ.சிவா.**
முத்தத்தைக் கணவன் கூட்டலாமா?
❀ **உங்கள் வீட்டு முற்றத்தைக் கூட்டுவது தப்பல்ல: அதே போல (உங்கள் வீட்டில்) முத்தத்தைக் கூட்டுவதிலும் தப்பல்ல.**

❀ ❀ ❀

**இளவாலை. ஆர்.அன்ரனி.**
தாரத்திற்காகத் தாயை வெறுக்கலாமா?
❀ **தாரத்திற்காகத் தாயை வெறுப்பது கொடுமை. தாய்க்காகத் தாரத்தை வருத்துவதும் மடமை.**

❀ ❀ ❀

**நாவாந்துறை. கே.செல்வின்.**
டாக்டரின் கையெழுத்து அவருடைய மனைவிக்காவது விளங்குமா?
❀ **டாக்டரின் எத்தனையோ அந்தரங்கங்கள் அவரது மனைவிக்கு விளங்காதிருக்கும் போது கையெழுத்து விளங்காததுதான் ஒரு பெரிய பிரச்சினையா?**

❀ ❀ ❀

**நாவற்குழி. பி.ராகுலன்.**
ஓர் இருபதும், ஒரு பதினெட்டும் ஒரே இருட்டில், ஒரே மழையில், ஒரே குடையில் போனால் என்ன நடக்கும்?
❀ **மழையில் போனால் இடிமுழக்கம் இருக்கும்தானே?**

❀ ❀ ❀

**நாவற்குழி. சுகிஅமுதா.**
'அடிக்கிற கைதான் அணைக்கும்' என்கிறார்களே. உண்மையா?
❀ **'அடிக்கிற கைதான் அணைக்கும்'; 'கோபமுள்ள இடத்தில் குணமிருக்கும' - என்பவை போன்ற பழமொழிகள் சில அப்பாவிக் கணவன்மார் தம்மைத்தாமே திருப்திப் படுத்தக் கூறிக்கொள்வது. அதைவிட்டு விடுங்கள்.**

## முதிய பெண்களை 'பாட்டி' எனலாமா?

❀ ❀ ❀

**சங்கானை. வை.சீலன்.**
'வயக்கரா' மாத்திரை பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றீரா?
❀ **வெளியூரிலிருந்து கதைத்த ஒரு நைன்ரியிடம் கேட்டேன். 'வயக்ரா' அனுபவம் நாயக்கராவில் குளித்தது மாதிரி புத்துணர்ச்சி தருகின்றதாம்!**

❀ ❀ ❀

**கைதடி. என்.பிரபா.**
பெண்ணுக்கு அடங்கிப் போகலாமா?
❀ **அடங்குவது பெண்ணிடம்தானே! Male எப்போதும் Female இற்குள் அடக்கம்தானே?**

❀ ❀ ❀

**மானிப்பாய். மு.ராஜா.**
வித்தூ........! காதலித்துக் கல்யாணம் செய்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் காதலை மட்டும் எதிர்க்கின்றார்களே! ஏன்?
❀ **பட்டறிவு. அனுபவம் தந்த பாடம்.**

❀ ❀ ❀

**அல்வாய். ஐ.வேலு.**
வீட்டிலே பெண்ணைப்பூட்டிவைத்து சாவியை எடுத்துச் செல்வோர் இன்னும் இருக்கின்றார்களே!



❀ **அவர்களை மன்னித்து விடுங்கள். பூட்டைத் திறக்கும் வேறு பலசா(வி/லி)கள் குறித்து அவர்களுக்குத் தெரியாது. அவ்வளவுதான்!**

**உடுப்பிட்டி. தமிழ்வாணன்.**
வித்துவானே! ஆண்களின் ஆடைகளை பெண்கள் அணிகின்றார்களே!
❀ **'ரி' சேர்ட்டுகளைக் கூறுகின்றீர்களா? மேலே மேலே வளர்வதைக் காட்டுவதற்கு - நான் நாகரிகத்தைக் கூறினேன்.**

**நாவற்குழி. றமணன்.**
"ஓநாய்கள் ஊரிலே கழுதைகளும் வித்துவான்களே!" என்ற நம்முடைய புரட்சிக் கவிஞர் காசிஆனந்தனின் கவிதைவரிகள் குறித்து....?
❀ **இன்றைய (இந்த) வித்துவான் குறித்து அன்றே தீர்க்கதரிசனத்துடன் கூறிவிட்டாரோ கவிஞர்?**

❀ ❀ ❀

**வரணி. திருக்குமரன்.**
ஊர்வம்பு கதைப்பவர்கள் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?
❀ **பாவச் சுமை சுமக்கும் நவீன ஒட்டகங்கள்.**

❀ ❀ ❀


**மல்லாகம் திருமதி.ஜெ.மனோ.**
என் வீட்டு நாய் குரைப்பதில்லையே! அது ஏன்?




❀ **பாவம். உங்கள் கணவனைப் போல அதுவும் வாயில்லாப் பிராணி போலும்.**

❀ ❀ ❀

ஆலயங்களில் நிர்வாகப் பிரச்சினைகள் இப்போது அதிகரித்திருப்பதற்கு காரணம் யாதோ?



❀ **நிர்வாகி சிலையாக இருப்பதுதான்!**

❀ ❀ ❀

**புலோலி. கஜினி.**
என் வயது வாலிபன் போகும் இடமெல்லாம் காதல் வலை வீசுகின்றானே?
❀ **அன்பு வலையானால் அகப்படுவது குறித்து சிந்திக்கலாம். ஆபத்து வலையானால் அறுத்தெறிவது நல்லது.**

❀ ❀ ❀

**உரும்பராய். ஜெயாதாசன்.**
பெண் என்றால் பேயும் இரங்குமாமே?
❀ **அதனால்தான் இரங்கும் எல்லாவற்றையும் பெண் பேயாக மதிக்கின்றாளோ?**

❀ ❀ ❀

**மீசாலை. கஜன்.**
ஹலோ வித்தையா.......! 'ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்' என்கின்றார்களே! உண்மையா?
❀ **வாஜ்பாயிடம் கேட்டீர்களானால் நன்றாக விளக்குவார்.**

❀ ❀ ❀

**அச்சுவேலி. ப.கீதா.**
உங்களுக்குக் குடிப்பழக்கம் உண்டா?
**ஓ! தண்ணீர் குடிப்பேன். (தண்ணி அடிப்பேன் என்று நான் சொல்லவில்லை).**

❀ ❀ ❀

**நல்லூர். ப.ஜெகநாதன்.**
காதலிக்க நேரமில்லை; காதலிப்பார் யாருமில்லை; வாலிபத்தில் காதலிக்க சாதகத்தில் எனக்குப் பலன் உண்டா?
❀ **அதைக் கூறுவதற்கு நான் சாத்திரியார் அல்லன். என்றாலும் பலன் இல்லாவிட்டால் தப்பினீர் என்று மட்டும் கூறலாம்.**

## டாக்டரின் கையெழுத்து மனைவிக்கு விளங்குமா?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாவீரர் இல்லங்களை மதிக்க வன்னி படைத்தரப்பு இணக்கம்

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் அமைந்துள்ள புலிகளின் மாவீரர் துயிலும் இல்லங்கள் உரிய மரியாதை அளிக்கப்பட்டுப் பேணிப் பாதுகாக்கப்படும் என்று வன்னிப் படைத்தரப்பில் உறுதி அளிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க குருமார்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்தே படைஅதிகாரிகள் இந்த உறுதிமொழியை அவர்களுக்கு அளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மையில் 'போர்க் கோஷம்' நடவடிக்கை மூலம் படையினர் கைப்பற்றிய நிலப்பரப்பில் அமைந்துள்ள ஈச்சங்குளம் 'மாவீரர் இல்லத்தை' பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி வீதியில் தாண்டிக்குளம் ரயில் நிலையச் சந்தியில் இருந்து மேற்காகச் செல்லும் வீதி நேரே விடத்தல் தீவு சந்திவரை நீள்கிறது. இந்த வீதியில் உள்ள கல்மடு என்னும் பகுதியிலேயே ஈச்சம்குளம் அமைந்துள்ளது.

ஈச்சங்குளத்தை உள்ளடக்கிய பிரதேசம் 'போர்க் கோஷம் - 1' படைநடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்டது.

ஈச்சங்குளத்தில் அமைந்துள்ள 'மாவீரர் துயிலும் இல்லத்தில்' யுத்தத்தில் பலியான நூற்றுக்கணக்கான் புலிகள் இயக்க உறுப்பினர்களின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் அப்பகுதியில் இருந்து வெளியேறிய பின்னர் இந்த 'மாவீரர் இல்லம்' படையினரால் நாசமாக்கப்படும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் யுத்தத்தில் பலியானோரின் சடலங்களுக்கும் கல்லறைகளுக்கும், உரியமரியாதை அளிக்கப்படவேண்டும் என்ற யுத்தமரபைக் கடைப்பிடிக்க வன்னிப் படைத் தலைமை முடிவு செய்திருப்பது போல் தெரிகிறது. இது நல்லதோர் மாற்றத்தின் அறிகுறியாக அமையலாம். ஆனால் படை அதிகாரிகளின் வாக்குறுதிகளை கீழ் மட்டத்தில் உள்ள சிப்பாய்களும் பேணுகின்றனரா என்பதை உறுதி செய்வதும் அவசியம்.

ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு மின்ஒளி வழங்க ஏற்பாடு செய்யப்படுவதாக வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் மூலம் அறியவந்தது. இந்தச் செய்தியைப் படிக்கும் எவருக்கும் குடாநாட்டில் அமைந்திருந்த புலிகளின் மாவீரர் நினைவிடங்களின் இன்றைய நிலை ஞாபகத்துக்கு வரலாம்.

இரண்டாம் ஈழப்போர் காலத்தில் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் போர் நினைவுச் சின்னங்களையும், போராளிகளின் நினைவுத்தூபிகளையும் பெருமளவில் நிறுவத் தொடங்கினர்.

யுத்தத்தில் உயிரிழந்த போராளிகளை ஒரே இடத்தில் அடக்கம் செய்து - அவர்களுக்கு மரியாதை அளித்து - அவர்களின் நினைவைப் போற்றும் விதமாக பெரும் நிதிச் செலவில் "மாவீரர் துயிலும் இல்லங்கள்" என்ற பெயரில் மயானங்களையும் அமைத்தனர். அங்கு நடுகற்களும் நாட்டப்பட்டன.

குடாநாட்டில் கோப்பாய், வடமராட்சி, கொடிகாமம் ஆகிய இடங்களில் மாவீரர் துயிலும் இல்லங்கள் திறக்கப்பட்டன. ஸ்ரீலங்கா படையினருடனான போரில் பலியான நூற்றுக் கணக்கான போராளிகளின் உடல்கள் - வித்துடல்கள் என்ற பெயருடன் - இந்த மயானங்களில் வரிசையில் புதைக்கப்பட்டு அவ்விடங்களில் நினைவுக்கற்கள் எழுப்பப்பட்டன.

வன்னிப் பகுதியிலும் கிழக்குப் பகுதிகளிலும்கூட இத்தகைய மயானங்களைப் புலிகள் அமைத்தனர்.

ஆண்டு தோறும் நவம்பர் மாதத்தில் புலிகளால் கொண்டாடப்படும் மாவீரர் வார காலத்தில் இந்த மாவீரர் துயிலும் இல்லங்களில் இடம்பெறும் அஞ்சலி நிகழ்வுகளை - நெஞ்சை நெகிழ வைத்த உணர்வுகளை - குடாநாட்டு மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

உலக வரலாற்றுடன் இணைந்து வந்துள்ள யுத்த நாகரிகத்தின் ஒரு பகுதியாக இந்தப் போர் நினைவிடங்களை புலிகள் 'ஆராதனைக்குரிய ஆலயங்கள்' எனப் பெயரிட்டு பேணி வந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை இராணுவம் கைப்பற்றும் போது அப்பகுதிகளில் உள்ள தளங்கள் மற்றும் அலுவலகங்களை மூடிவிட்டு அல்லது அப்புறப் படுத்திக்கொண்டு புலிகள் வெளியேறிவிடுகின்றனர். ஆனால் அந்தப் பகுதிகளில் உள்ள இத்தகைய நினைவுச் சின்னங்களையும், மாவீரர் மயானங்களையும், நினைவுத் தூபிகளையும் அப்புறப்படுத்தவோ அன்றி அழித்து விடவோ விரும்பாத புலிகள் அவற்றை கைவிட்டே வெளியேறுகின்றனர்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டக்குள் வந்துவிடும் பகுதிகளில் உள்ள இந்த நினைவுச் சின்னங்களுக்கு பின்னர் என்ன நடக்கிறது?

1995 இன் இறுதியில் யாழ். குடா நாட்டை படையினர் கைப்பற்றிய போது இங்கு அமைந்திருந்த புலிகளின் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கும், நினைவுத்தூபிகளுக்கும் நேர்ந்த கதி யுத்த நாகரீகத்தை மீறும் அநாகரிகச் செயலின் 'உச்சமாக அமைந்தது.

இங்கிருந்த மாவீரர் மயானங்கள் 'புல்டோசர்கள்' கொண்டு கிளறி தரைமட்டமாக் கப்பட்டன.

தங்கள் பிள்ளைகள் உயிரிழந்தவர்கள்; இறந்து விட்டார்கள். அவர்கள் காலம் முடிந்து விட்டது. அவர்கள் ஏன் இறந்தார்கள்? அவர்கள் செய்தது சரியா பிழையா? - என்பது தெரியா விட்டாலும் கூட அவர்கள் நிம்மதியாகத் தூங்குகிறார்கள் என்ற ஒரே நினைவையே தங்கள் மன ஆறுதலாகக் கொண்டு வாழ்ந்த ஆயிரக் கணக்கான பெற்றோர்களை மட்டுமன்றி சாதாரண மக்களைக் கூட உலுக்கிவிட்ட நிகழ்வாகவே இந்தச்சம்பவம் அமைந்தது.

யுத்தத்தில் எதிரி உயிரிழப்பானாயின் அவனின் சடலத்தின் மீது எதிர்ப்புணர்வைப் பேணுவது யுத்த மரபல்ல: சடலம் - அது எதிரியுடையதாக இருந்தாலும் - அதனை மதித்து - கௌரவித்து நடந்து கொள்வதே யுத்த மரபாக - நாகரீகமாகப் போற்றப்பட்டு வருகிறது.

உலக நாடுகள் பலவற்றில் ஆக்கிரமிப்புகளும், ஆட்சிமாற்றங்களும் இடம்பெற்ற போதிலும் அங்கெல்லாம் போர் வீரர்களுக்காக அமைக்கப்பட்ட கல்லறைகள், மயானங்கள் என்பன தொடர்ந்து பேணப்பட்டு வந்துள்ளமைக்கு சான்றுகள் உள்ளன.

"புலிகளின் உறுப்பினர்கள் புதைக்கப்பட்ட மயானங்கள் தொடர்ந்தும் அதேபோன்று

**மறுபக்கப் பார்வை**

**வார விமர்சனம்**

**நல்லூர் தாஸ்**

பேணப்பட்டால்....... அதை அடிக்கடி காணுகின்ற - அமைதியை விரும்புகின்ற - இளைஞர்களைக் கூட அந்த மயானமும் அதன் தோற்றமும் மீண்டும் உணர்ச்சி கொள்ள வைத்துவிடும்; ஆயுதம் ஏந்தும் தவறான பாதைக்கு ஈட்டுச் செல்லத் தூண்டும். அதனாலேயே அதனை அழிக்க வேண்டி வந்தது.

"ஒளித்து வைக்கப்பட்ட ஆயுதங்களைக் கண்டு பிடிப்பதற்காக அவ்வாறு புலிகள் ஆயுதங்களை ஒளித்து வைத்திருக்கக் கூடிய இடங்கள் எனக் கருதப்பட்டவை சல்லடை போட்டுத் தேடப்பட்டன.

"'புதைகுழிகள் எப்போதும் மதிக்கப்படும்' என்று சர்வதேச தத்துவம் இருப்பதால் புதைகுழிகளை மதிக்கும் நோக்குடன் அவற்றைப் படையினர் தொடமாட்டார்கள் என புலிகள் தரப்பில் நம்பப்பட்டது. அதனால் தமது ஆயுதக்கிடங்குகளைக்கூட புதைகுழி போல உருமறைப்புச் செய்து வைத்திருப்பார்கள் என்ற சந்தேகமும் நிலவியது. அதனாலேயே புதைகுழிகளைக் கிளறிப்பார்க்கும் நிலை ஏற்பட்டது."

புலிகளின் 'மாவீரர் புதைகுழிகள் கிளறப்பட்டது தொடர்பாக கருத்துக் கேட்டபோது மூத்த படை அதிகாரி ஒருவர் - சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் - அளித்த விளக்கம் இது.

படையினர் தரப்பில் இருந்து நோக்கும் போது இக்கருத்துக்கள் சரியாக இருந்திருக்கக்கூடும்.

ஆனால் தற்போது வன்னிப்படைத்தரப்பு புலிகளின் புதைகுழிகளைப் பேண முடிவு செய்தது ஏன்?

நடந்த தவறை ஒதுக்கிவிட்டு பேசாமல் இருப்பது மக்களை சாந்தப்படுத்தாது: மக்கள் மனங்களை வெல்ல - அவர்களை நெருங்கிச் செல்ல - அது வழியல்ல என்பதை இக்கால இடை வெளியில் படைத் தலைமை உணர்ந்து கொண்டதுதான் இந்த மன மாற்றத்துக்குக் காரணமா?

அவ்வாறாயின் தமிழ் மக்களின் உணர்வுகளுக்குக் கிடைத்த வெற்றியாகவும் இதனைக் கருத முடியும்.

## ஈழப்பிரகடனம் பற்றிய வதந்திகளால் பரபரப்பு

லண்டனில் உள்ள விடுதலைப் புலிகள் ஆதரவு அமைப்புக்கள் இணைந்து நாளை ஞாயிற்றுக்கிழமை ஒருதலைப்பட்சமான சுதந்திரத் தமிழீழப் பிரகடன அறிவிப்பு ஒன்றை வெளியிட உள்ளனவா?

கடந்த சில தினங்களாக லண்டனில் உள்ள தமிழர் வட்டாரங்களிலும் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலும் மிகுந்த பரபரப்புடன் எழுப்பப்பட்டுவரும் கேள்வி இது.

பிரிட்டனில் உள்ள தமிழ் அமைப்புக்களின் ஒன்றியம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஈழத்தமிழர் ஆதரவுப் பேரணியையும் மாநாடு ஒன்றினையும் நடந்த பெரும் எடுப்பில் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

லண்டன் அலெக்சாண்டிரா பிளேசில் நடைபெறவுள்ள இந்தப் பேரணியிலும் மாநாட்டிலும் பிரிட்டனிலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள ஈழத்தமிழர் ஆதரவு அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொள்ள இருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பேரணி தொடர்பாக பிரிட்டன் தமிழ் அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்ட ஒரு துண்டுப்பிரசுரத்தில் 'சுதந்திர தமிழ் ஈழத்துக்கு' உங்கள் ஆதரவை வெளிப்படுத்துமாறு அழைக்கின்றோம்' என்று தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ள இந்தப் பேரணியிலும், தொடர்ந்து இடம்பெறும் மாநாட்டிலும் பார்வையாளராக கலந்துகொள்ளுமாறு ஐரோப்பாவின் முக்கிய செய்தி ஊடகங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கு தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டு ஏற்பாடுகளை அடுத்தே புலிகள் ஈழப்பிரகடனம் செய்யத் திட்டமிட்டுகின்றனர் என்ற தகவல் வெளியாகத் தொடங்கியது. இது தொடர்பாக ஐரோப்பாவில் வெளியாகும் சில தமிழ்ப் பத்திரிகைகளிலும் கொழும்பு வார ஏடுகள் சிலவற்றிலும் செய்திகளும் வெளியாகின.

உலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பேரணியும், மாநாடும் ஸ்ரீலங்கா அரசாங்க வட்டாரங்களால் மிகுந்த முக்கியத்துவத்துடன் நோக்கப்படுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாநாட்டில் வைத்து புலிகள் சுதந்திர தமிழீழத்தை' பிரகடனம் செய்யவுள்ளனர் என்றவாறாக கொழும்பில் வெளியாகியுள்ள தகவல்களே அரசாங்க வட்டாரங்களை உஷாரடைய வைத்துள்ளன. இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து எந்த விதமான அறிவிப்பும் - உத்தியோகபூர்வமாக - வெளியிடப்பட்டதாக இதுவரை தகவல் இல்லை. ஆனால் யூகோஸ்லாவியா மீதான 'நேட்டோ' நாடுகளின் தலையீட்டை - தாக்குதலை - அடுத்து உலக அரங்கில் எழுந்துள்ள புதிய சூழ்நிலையைப் பயன்படுத்தி தமிழீழப் போராட்டத்தை - ஈழத்தமிழர் பிரச்சினையை - சர்வதேசமயப்படுத்தும் நட வடிக்கைகளை வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் முடுக்கி விட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கொசோவோ அல்பேனிய இனத்தவர்கள் மீதான 'நேட்டோ' நாடுகளின் அனுதாபம் குறித்து எழுந்துள்ள விமர்சனங்களில் ஈழத் தமிழர் விவகாரமும் சுட்டிக்காட்டப் பட்டிருப்பது தமிழ் மக்களின் நியாயபூர்வமான போராட்டத்தை சர்வதேச அரங்கின் முன் கொண்டுவந்துள்ளது.

'கொசோவோ பிரச்சினையில் அமெரிக்கா தலையிட்டிருப்பதால் அந்த இடத்திலும் பார்க்க அதிக இழப்புக்கள் ஏற்பட்டுள்ள இலங்கை, கிழக்கு ஆபிரிக்கா, குர்திர்ஷ்தான், காஷ்மீர், ஆப்கானிஸ்தான் போன்ற பகுதிகளில் ஏன் தலையீட்டை மேற்கொள்ளவில்லை என்ற கேள்வி எழுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது' என்று அமெரிக்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஹென்றி ஏ.கிஸ்ஸிங்கர் தெரிவித்திருந்தார்.

கிஸ்ஸிங்கரின் இந்தக் கருத்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோமுகாமின் நடவடிக்கைகள் தொடர்பாக புதிய விவாதங்களை எழுப்பியது மட்டுமன்றி உலகில் இடம்பெறும் சிறுபான்மையினரின் போராடடங்கள் தொடர்பான அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் ஒருதலைப்பட்சமான போக்கையும் விமர்சனத்துக்குட்படுத்தி உள்ளது.

இந்தச் சூழ்நிலையில் தமிழர்களின் போராட்டத்துக்கு ஆதரவான பிரசாரம் உலக அளவில் முடுக்கிவிடப்பட வேண்டும் என்ற கருத்து ஐரோப்பிய தமிழ் அமைப்புக்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஆனால் வெளிநாடு ஒன்றில் வைத்து ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனத்தை மேற்கொள்ள அந்த அமைப்புக்கள் திட்டமிட்டிருப்பதாக வெளியான தகவல்களை லண்டனில் உள்ள தமிழ் வட்டாரங்கள் எதுவும் ஊர்ஜிதம் செய்யவில்லை.

சுதந்திர தமிழீழத்தை ஒருதலைப்பட்சமாகப் பிரகடனம் செய்ய புலிகள் திட்டமிடுவதாகக்கூறப்படுவதையும் அந்த வட்டாரங்கள் மறுத்துள்ளன. அவை வெறும் வதந்திகள் என்று அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இன்றைய சூழ்நிலையில் புலிகள் இத்தகைய முடிவை - அவசரப்பட்டு - எடுக்க மாட்டார்கள் என்று தாம் எண்ணுவதாக அரசியல் அவதானிகள் சிலர் கருத்து தெரிவித்தனர்.

## ஆயுதக்குவிப்பும் ஆள்சேர்ப்பும்

ஆயுதங்களைக் குவிப்பதிலும், புதிதாக ஆள்களைத் திரட்டுவதிலும் விடுதலைப்புலிகள் தொடர்ந்து மும்மரமாக ஈடுபட்டிருப்பதாக பாதுகாப்பு செய்தி வட்டாரங்களில் தகவல்கள் வெளியாகிவருகின்றன.

அன்மைய வாரங்களில் புலிகள் கப்பல்கள் மூலம் போர்த் தளபாடங்களை தரையிறக்கி இருப்பதாக வெளியான் தகவல்கள் படையினரால் கைதுசெய்யப்பட்ட புலி உறுப்பினர் ஒருவர் மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருப்பதாக புலனாய்வுத்துறை வட்டாரங்கள் கூறி உள்ளன.

ரஷ்ய 'சாம்' ஏவுகணைகள், பல் குழல் றொக்கெட் லோஞ்சர்கள் (எம்.பி.ஆர்.எல்.) மற்றும் பெரும் தொகையான ஆட்லறி ஷெல்கள், மோட்டார் ஷெல்கள் என்பனவற்றை புலிகள் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரால் கைப்பற்றப்பட்ட பகுதிக்குள் கடந்த 12ஆம் திகதி ஊடுருவ முயன்ற சமயம் இரண்டு புலி உறுப்பினர்கள் விமானப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் ஒருவர் சிறைப்பிடிக்கப்பட்டதாகவும் அவ்வாறு பிடிக்கப்பட்ட நபர் மூலம் பல இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 29ஆம் திகதி வன்னி பம்பைமடுப் பகுதியில் வீழ்ந்த விமானப் படையின் வேவு விமானத்தில் இருந்த (Unamanned Aerial Vechile) அதி நவீன வீடியோ கமெரா மேற்படி புலி உறுப்பினர் கைதுசெய்யப்பட்ட போது படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும்-

அந்தக் கமெரா எவ்வாறு புலிகள் கையில் சிக்கியது என்பது தெரியவில்லை என்றும் - கூறப்படுகிறது.

காயமடைந்த நிலையில், பிடிபட்ட புலிகள் இயக்க உறுப்பினருக்கு அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவர் கொழும்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வேவு விமானத்தில் பொருத்தப்படும் இந்த வீடியோ கமெ்ரா (Contrept 600 sophisticated video camera) தானாகவே இயங்கி தரை இலக்குகளைப் படம் பிடிக்கவல்லது. புலிகளிடம் இருந்து இந்த கமெரா மீட்கப்பட்டபோதும் இதில் பதிவாகி இருந்த படங்கள் புலிகள் வசம் சிக்கி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியில் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஆள் சேர்க்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ள புலிகள் 20 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட அனைவருக்கும் ஆயுதப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றைத் தொடங்கி இருப்பதாக பாதுகாப்பு ஆய்வாளர் ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார். ஆனால் இதனை ஊர்ஜிதம் செய்யும் தகவல் எதுவும் வன்னிப்பகுதியில் இருந்து கிடைக்கவில்லை என்று வவுனியாவில் உள்ள செய்திவட்டாரங்கள் தொரிவித்தன. எவ்வாறாயினும் போரில் அணி திரள்வதன் அவசியத்தை புலிகள் தீவிரமாக வலியுறுத்தி வருவது உண்மையே.

விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் மாசி - பங்குனி இதழில் 'ஆள்பல அதிகரிப்பின் அவசியமும் பொருண்மியத் தேவைகளின் பெருக்கமும்' என்ற தலைப்பில் வரையப்பட்டுள்ள கட்டுரை ஒன்றில் இந்த ஆள்பலத் தேவை குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

...இப்போது எதிர்ச்சமரை புலிகள் நடத்தாத இடங்களை இனங்கண்டு அவற்றை அரச படைகள் கையகப்படுத்துகின்றன.

படையினரின் இப்புதிய போர்த்திட்டதிற்கு இரண்டு பிரதான நோக்கங்கள் இருக்கின்றன.

ஒன்று, நிலங்களைக் கைப்பற்றி அதை அரசாங்கத்தின் அரசியல் (தேர்தல்) வெற்றியாகுவது.

இரண்டு, சமர் அரங்கை நீட்டி - விரித்து புலிகளின் பலத்தை ஐதாக்கி மரபுப்போரில் சிங்களப்படைக்கு சாதகமான புறநிலையை ஏற்படுத்துவது.

இறுதியில் புலிகளின் பலமான பகுதிகளை குறிவைத்து ஒரு தீவிரமான மரபுச்சமரை - பல முனைகளுடாக நடத்துவது படைத் தலைமையின் திட்டம்.

அரசபடைகளின் இந்த ஆக்கிரமிப்புத் தந்திரோபாயத்திற்கு புலிகளிடமுள்ள ஆட்பற்றாக்குறை ஒரு அடிப்படைக் காரணியாக உள்ளது - என்று அக்கட்டுரையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## விடைகள்

IV ஆம் பக்கத்தில் 'சிறுவர்சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### சொற்றேடல்.

| | | |
|---|---|---|
| 1. பிறப்பு. | 2. அபிலாஷை. | 3. அம்பிகை. |
| 4. குடும்பி. | 5. திப்பிலி. | 6. தாமதம். |
| 7. பிரதிமை. | 8. அபிராமி. | 9. கும்பிடு. |
| 10. துந்துபி. | 11. கூப்பிடு. | 12. சபிப்பு. |
| 13. பிடிநடை. | 14. கபிலம். | 15. கைப்பிடி. |
| 16. சுரப்பி. | 17. தேய்பிறை. | 18. அபிமானி. |
| 19. பிணக்கு. | 20. கபிலன். | 21. பசுபிக். |
| 22. அபுதாபி. | 23. ஸாம்பியா. | 24. நபிகள். |
| 25. பித்தம். | | |

### வித்தியாசங்கள் எவை?

1.யானையின் கால். 2.கண் 3. வால்
4. காது. 5. பையனின்முடி. 6.கைவிரல்.
7. மூக்கு. 8.காற்சட்டை. 9. சேர்ட்டின் வரிகள்.

### சரியான உரு எது?

1.உரு III 2.உரு I 3. உரு I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளை மலேரியா!

இலங்கையில் மலேரியாத் தொற்றுநோய்க்குக் காரணமாக அறியப்பட்டிருக்கும் ஒட்டுண்ணிகள் இரண்டு வகையானவை. இரண்டும் பிளாஸ்மோடியம் இனத்தைச் சேர்ந்தவை. ஒன்று:- பிளாஸ்மோடியம் வைவக்ஸ் (Plasmodium Vivax). மற்றையது:- பிளாஸ் மோடியம் பல்ஸிபாரம் (Plasmodium Falciparum).

இவற்றில் வைவக்ஸ் சாதாரண மலேரியாவை ஏற்படுத்துவது: குளோரோகுயின் போன்ற மருந்துகளினால் கட்டுப்படுத்தத்தக்கது.

ஆனால் பல்ஸிபாரம் ஏற்படுத்தும் மலேரியாத் தொற்று அத்தகையது அல்ல. இந்த ஒட்டுண்ணி குளோரோகுயின் போன்ற மருந்துகளை எதிர்த்து நிற்க வல்லது. அத்தோடு மூளை போன்ற உள்ளகங்களை பாதிக்கத்தக்கது. உடனடியாக சிகிச்சை அளிக்கப்படாதவிடத்து மூளை மலேரியா என்ற அபாயகரமான - உயிராபத்துக்குரிய - நிலைக்கு இட்டுச் செல்லக் கூடியது.

பல்ஸிபாரம் வகை மூளை மலேரியா, சமீபகாலங்களில் வன்னிப் பகுதியில் பெரும் எண்ணிக்கையானோரை பாதித்து வருகின்றது.

வினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்து வந்திருப்பதை மேல் உள்ள அட்டவணை காட்டுகின்றது.

1997 இல் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக பாதிக்கப்பட்ட மலேரியா நோயாளர் எண்ணிக்கை மற்றும் அதில் பல்ஸிபாரம் ஒட்டுண்ணி மூலம் பாதிக்கப்பட்டோரின் வீதம் ஆகியவை வருமாறு:-

| பிரிவு | நோயாளர் | வைவக்ஸ் மூலம் | பல்ஸிபாரம் மூலம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 10022 | 9194 | 828 | 8.3 |
| தெல்லிப்பளை | 1845 | 1692 | 153 | 8.2 |
| சாவகச்சேரி | 9336 | 8732 | 584 | 6.5 |
| மானிப்பாய் | 3696 | 3478 | 218 | 5.9 |
| பருத்தித்துறை | 9525 | 9089 | 413 | 4.6 |
| ஊர்காவற்றுறை | 807 | 800 | 07 | 0.9 |
| கோப்பாய் | 3547 | 3521 | 26 | 0.7 |
| மொத்தம் | 38778 | 36506 | 2229 | 5.7 |

*(நன்றி:- "யாழ்ப்பாணத்தில் மலேரியாவின் மீள்வருகை" - டாக்டர் என்.சிவராஜா)*

பிளாஸ்மோடியம் ஒட்டுண்ணி,

மூளையில் உள்ள குருதிமயிர் குழாய்களில் நிகழும் போது மூளையின் பாகங்களுக்கு குருதிப் பற்றாக்குறை ஏற்படும்: குருதியினால் கடத்தப்படும் பிராணவாயு(ஒட்சிசன்) மற்றும் போசணைப் பதார்த்தங்களுக்கும் பற்றாக் குறை ஏற்படும். அதுமட்டுமன்றி தொற்றப்பட்ட செங்கலங்களினால்அடைப்புக் குள்ளாகும் குருதி மயிர் குழாய்களிலிருந்து குருதிப் பெருக்கும் ஏற்படும். இவற்றால் மூளை ஆக்கும் நரம்பிழையங்கள் பாதிக்கப்படுகின்றன. இவற்றுடன் மூளையில் எடிமா நிலையும் தோற்றுவிக்கப்படுகிறது.

மூளை மலேரியாவின் குணங்குறிகள் கீழ் வரும் காரணிகளால் தோற்றுவிக்கப்படுகின்றன.

1. தொற்றுகைக்குள்ளான செங்கலங்கள் மூளையின் குருதிமயிர் குழாய்களை அடைத்தல்.

சியும்.

7. உறிஞ்சலால் ஏற்படும் சளிச் சுரம்.

சரியான சிகிச்சை உடனடியாக வழங்கப்பட்டாவிடத்து மூளை மலேரியாவினால் உயிராபத்து சம்பவிக்கலாம். மூளை மலேரியாவினால் பாதிக்கப்படும் ஒவ்வொரு 100 பேரிலும் சராசரியாக 35 பேருக்கு மரணம் ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது.

## நோயைக் கண்டுபிடித்தல்

நோயாளியின் குருதிப்படலத்தை நுணுக்கு காட்டி மூலம் பரிசோதித்து பிளாஸ்மோடியம் பல்ஸிபாரம் ஒட்டுண்ணியை கண்டுபிடிக்கலாம்.

இங்கு மலேரியா சிகிச்சை மருந்து உள்ளெடுத்த பின்னர் குருதிப்படலம் எடுக்கப்படுமாயின் குருதியில் காணப்படும் ஒட்டுண்ணி இறந்து விடுமாதலால் நுணுக்குக்காட்டிச் சோதனை எமக்கு சரியான முடிவைத்தராது. எனினும் பின்னர் ஈரலிலிருந்து மற்றொரு சந்ததி ஒட்டுண்ணி குருதியை பின்னர் அடைவதால் காய்ச்சல் பின்னர் ஏற்படும். எனவே குருதிப்படலத்தில் ஒட்டுண்ணியை காணமுடியாத சந்தர்ப்பத்திலும் மூளை மலேரியாவுக்குரிய குணங்குறிகள் அவதானிக்கப்படும் பட்சத்தில் மூளை மலேரியாவுக்குரிய சிகிச்சை மேற்கொள்ளப்பட முடிவு செய்யப்படும்.

மலேரியா நோய்ச்சிகிச்சையில் சாதாரணமாக பாவிக்கப்படும் குளோரோகுயின் மருந்தை மூளை மலேரியாவை உண்டாக்கும் பிளாஸ்மோடியம் பல்ஸிபாரம் சகிக்கக்கூடியது என்பதால் குயினைன் என்ற மருந்தே மூளைமலேரியாவிற்குரிய முதல் தெரிவு மருந்தாகும்.

சி.சுரேந்திரஜித்
வி.உதிஸ்டன்
(யாழ்.மருத்துவபீட மாணவர்கள்)

மூளை மலேரியா ஒரு மருத்துவ அவசர நிலை என்பதால் குயினைன் மருந்து நாளம் மூலமாகவே செலுத்தப்படும்.

## தடுப்பு முறை

வைவக்ஸினால் ஏற்படும் சாதாரண மலேரியா போன்றே மூளைமலேரியாவின் பரவுகை நோயாளி, காவி, சுகதேகி ஆகியோரை உள்ளடக்கியதாகும். நோயாளியிலிருந்து காவி நுளம்புக்கும் பினகாவி நுளம்பிலிருந்து சுகதேகிக்கும் பிளாஸ்மோடியம் பல்ஸிபாரம் கடத்தப்பட வேண்டுமாதலால் இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தடுப்பதன் மூலம் மூளை மலேரியாவை தடுக்க முடியும்.

தாமதியாமல் மருத்துவச் சிகிச்சையை நாடுவதன் மூலம் இந்த ஆள் கொல்லி நோயின் தாக்கத்தில் இருந்தும் அதனால் வரக்கூடிய மரணத்திலிருந்தும் தப்பித்துக் கொள்ள முடியும். *

# ஓர் ஆள்கொல்லி நோய்!!

நுளம்புக்கடி மூலம் இந்நோய்க்கான ஒட்டுண்ணி ஒருவரைத் தொற்றுமானால், நோய் அரும்புவதற்கு மேலும் பன்னிரண்டு நாள்கள் வரை செல்லும்.

வன்னியில் இத்தகைய நுளம்புக் கடிக்கு ஆளாகும் ஒருவர் அதனால் ஒட்டுண்ணி தொற்றினாலும் கூட - நோய் அரும்பும் பன்னிரண்டு நாள்கள் வரை சுகதேகியாக இருப்பதால் - அந்தக் காலத்தில் பயணம் செய்து குடாநாட்டுக்கு வந்து சேரலாம். இப்படி வருவோர் இங்கு வந்து சேர்ந்ததும் அவரில் நோய் வெளிப்படத் தொடங்குகின்றது. அவர் இங்கு நோயால் அவதியுறும் போது நுளம்புகள் மூலம் குடாநாட்டில் பிறருக்கு இந்நோய் பரப்பப்படுகின்றது.

இத்தகைய முறையால் குடாநாட்டில் மூளை மலேரியா பெருமளவில்

நுளம்புக்கடியின் போது, நுளம்பின் உமிழ்நீருடன் சேர்ந்து வெளியேறி சுகதேகியின் குருதியை அடைகின்றது. பின் அதன் மூலம் ஈரலிலும் மீண்டும் குருதியின் கொள்கலங்களிலும் விருத்தியடைந்து சுகதேகிக்கு நோயை ஏற்படுத்துவதுடன், அவர் மற்றொரு நுளம்புக்கடிக்கு இலக்காகும் போது அந்த நுளம்புக்குள் சென்று அதன் மூலம் மற்றொரு சுகதேகியைத் தொற்றுகின்றது.

சில அரிதான சந்தர்ப்பங்களில் இரத்த தானத்தினாலும், தாயிலிருந்து நஞ்சுக்கொடி மூலம் சிசுவுக்கும் இது பரவுகின்றது.

பல்ஸிபாரம் ஒட்டுண்ணிக்கு நோயரும்பு காலமான பன்னிரண்டு நாள்களில் குருதியில் உள்ள செங்கலங்களினுள் சிறுபாத்து சிற்றுயிர்கள் என்னும் ஒட்டுண்ணி வடிவங்கள் உருவாக்கப்பட்டு விடும். இந்த சிறு பாத்து சிற்றுயிர்களைக் கொண்ட செங்குழி

| ஆண்டு | நோயாளர் எண்ணிக்கை | வைவக்ஸ் மூலம் | பல்சிபாரம் மூலம் |
|---|---|---|---|
| 1983 | 2354 | 2282 | 676 |
| 1994 | 1859 | 1718 | 133 |
| 1985 | 2393 | 2315 | 72 |
| 1986 | 4053 | 3786 | 284 |
| 1987 | 2185 | 2036 | 137 |
| 1988 | 10885 | 10518 | 353 |
| 1989 | 4253 | 4103 | 147 |
| 1990 | 4565 | 4193 | 369 |
| 1991 | 23371 | 20389 | 2875 |
| 1992 | 23844 | 21747 | 2063 |
| 1993 | 20711 | 19239 | 1430 |
| 1994 | 52385 | 48181 | 4148 |
| 1995 | 36957 | 33358 | 3577 |
| 1996 | 25474 | 21913 | 3537 |
| 1997 | 38778 | 36506 | 2229 |

பரவுவதாக அண்மைக்காலத் தகவல்கள் கூறுகின்றன. இந்த மலேரியாவில் ஏற்படும் சடுதியான மரணங்களின் எண்ணிக்கையும் அண்மைக் காலத்தில் அதிகரித்து வந்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் 1983 - 1997 காலப் பகுதியில் மூளைமலேரியா

யங்கள் வழக்கத்துக்கு மாறாக ஒட்டும் தன்மை உடையவை. எனவே இவற்றினால் ஒட்டுதலுக்கு உள்ளாகும் செங்குழியங்கள் ஒன்று சேர்ந்து நுண்ணிய குருதி மயிர்க் குழாய்களை அடைக்கின்றன. இவ்வாறான அடைப்பு

2. தொற்றுகைக்குள்ளான செங்கலங்கள் உடைந்து அழிதல்.

3. உடைந்த செங்கலங்களில் இருந்து சிறுபாத்துச் சிற்றுயிர்கள், நச்சுப் பொருள்கள், நிறப் பொருள்கள் ஆகியன விடுவிக்கப்படல்.

மூளை மலேரியாவின் குணங்குறிகள் தொற்று ஏற்பட்டபின் நோயரும்பு காலமான பன்னிரண்டாம் நாளுக்குப்பிறகு வெளிப்பட தொடங்குமாயினும் நோயாளியின் வயது, அவரது போஷாக்கு நிலை, உடலில் உள்ள நோய்எதிர்ப்புசக்தி, முற்காப்பாக மலேரியா மருந்தினை எடுத்திருத்தல் ஆகியவற்றைப் பொறுத்து நோய் தொற்றி ஆறு மாதங்களின் பின்பும் கூட வெளிப்படுத்தப்பட ஆரம்பிக்கலாம்.

## குணங்குறிகள்

மூளை மலேரியாவின் குணங்குறிகள்:-

1. சோர்வும் பசியின்மையும்.
2. குமட்டலும் வாந்தியும்.
3. தொடர்ச்சியான அல்லது ஒன்று விட்ட ஒரு நாள் காய்ச்சல் குளிர் விறைப்புடன் ஏற்படல். சிறுவர்களில் காய்ச்சல் காரணமாக உண்டாகும் வலிப்பு ஏற்படல்.
4. வயிற்றோட்டம்.
5. மண்ணீரல் வீக்கம்.
6. செங்கண்மாரி.
7. ஆழ்ந்த மயக்கநிலை.(கோமா)
8. கடுமையான குருதிச்சோகை. (ANAEMIA)

## வெளிப்பாடுகள்

1. சீரற்ற கண் அசைவுகள்.
2. கழுத்து விறைப்பு.
3. கண் அசைவுகளின் பாதிப்பு.

மூளை மலேரியாவைப் பின் தொடரக்கூடிய சிக்கல்கள்:-

1. கடுமையான குருதிச்சோகை.
2. நுரையீரல் எடிமா.
3. திடீர் சிறுநீரக செயலிழப்பு.
4. அதிக குருதிப்பெருக்கு.
5. அனுசேபத்தினால் உண்டாகும் அமிலமாக்கல்.
6. அல்ஜிட் மலேரியாவும் அதிர்ச்

# ஒரு கோப்பை மது செய்த வேலை

ஒரு கோப்பை மதுவை அதிகமாக ஓர் இளவரசன் குடித்தான்.

அதன் விளைவாக, பிரெஞ்சு நாட்டின் சக்தி வாய்ந்த அரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள் அனைத்தையும் இழந்து நாட்டைவிட்டு வெளியேறும் ஓர் அவல நிலை ஏற்பட்டது.


பிரெஞ்சு நாட்டு மன்னன் லூயிஸ் பிலிப்ஸுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான்.

அந்த இளவரசன் தன் நண்பர்களோடு மது அருந்தும்போது, ஒரு கோப்பை மதுவைஅதிகமாகக் குடித்து விட்டான்.

அரண்மனைக்குத் தன் கோச் வண்டியை ஓட்டிச் செல்லும்போது, குடிபோதையில் இருந்த அவன், சாட்டையைக் கொண்டு குதிரைகளைப் பலமாக அடித்தான்.

குதிரைகள் வலியைத் தாங்கிக் கொள்ள முடியாமல், வண்டியைத் தாறுமாறாக இழுத்துக் கொண்டு வேகமாக ஓட ஆரம்பித்தன.

அதைக் கண்டு பயந்த இளவரசன் குதிரை வண்டியிலிருந்து கீழே குதித்தான். குடிவெறியில் இருந்த இளவரசனால் தன்னைச் சமாளித்துக் கொள்ள முடியாமல் போய்விட்டது. அவனுடைய தலை வேகமாகத் தரையில் மோதியதால், அவன் மயக்கத்துடன் கீழே விழுந்தான். அவன் மயக்கத்திலிருந்து விடுபடாமல் இறந்தும் போனான்.



ஒரே ஒரு கோப்பை மதுவை மிக அதிகமாகக் குடித்த காரணத்தால், ஒரு சக்தி வாய்ந்த நாட்டின் வாரிசாக இருந்த ஓர் இளவரசன் உயிர் துறக்க நேர்ந்தது.

அந்த இளவரசனுக்கு இப்படிப் பட்ட அகால மரணம் ஏற்படாமல் இருந்திருந்தால், அவன் பிரெஞ்சு நாட்டின் மன்னனாக முடிசூடிக் கொண்டு நாட்டை ஆட்சி செய்திருப்பான்.

வேறு ஒருவன் அந்த நாட்டின் அரசனாகத் தன்னை முடிசூடிக் கொண்டு, இறந்து போன இளவரசனுடைய குடும்பத்தை நாட்டைவிட்டே துரத்தி விட்டான். *

## சந்தே....

(IX ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளவு கலகலப்பாகப்பழகும் இவனுடையமனதை வேதனைப்படுத்துவதாக அமைந்துவிடுமோ?

எனது தயக்கம் அவனுடைய ஆவலை இன்னும் அதிகரிக்கச் செய்தது.

"பயப்படாமல் சொல்லுங்கோ. என்ன பிரச்சினை?"

"இல்லை சேர். நீங்கள் என்னைப் பிழையா நினைக்கக்கூடாது. என்ர நிலைமையைப் புரிஞ்சுகொள்ளுங்கோ சேர்."

"விஷயத்தைச் சொல்லாமல்....." அவனுடைய குரலில் இலேசான சலிப்புத்தென்பட்டது.

"சேர். நீங்கள் என்னோட சேர்ந்து சைக்கிளிலை வாறது அவ்வளவு நல்லா இல்லை" மெதுவாகச் சொன்னேன். திகைத்துப்போய் என்னைப் பார்த்தான் ரவி.

"ஏன் மிஸ். ஆராவது ஏதும் சொன்னவையே?"

"..........."

"நீங்கள் ஏன் சமூகத்தைப்பற்றி வீணாகக் கவலைப்படுகிறீங்கள்? நான் ஒரு பேச்சுத்துணைக்காகத்தானே கூட வாறன். படிப்பறிவில்லாத சனம் ஆயிரம் கதைக்கும். அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனா நீங்கள்.......!"

"வேறை யாராவது சொன்னா அதை ஒரு பொருட்டாவே எடுத்திருக்கமாட்டன். சொன்னது என்ர அவர்!"

"ஓ....!" ரவியின் முகம் கறுத்தது.

நான் தலையைக் குனிந்துகொண்டேன். எனது உள்ளம் ஓலமிட்டுப் புலம்பியது. 'சே! எவ்வளவு வெட்கக் கேடான நிலை இது? இப்படி இன்னொருவன முன குடும்பவிடயங்களைச் சொல்லி அவமானப்படும் நிலைமை இனி வரவேண்டாம்.'

"சேர். தயவுசெய்து என்னைப் பிழையா நினைக்காதையுங்கோ.நான்... .நான்....அவரோட அநாவசியமான சச்சரவுகளைத் தவிர்க்கவே விரும்பிறன்"

"எனக்கு விளங்குது மிஸ். நான் இனி விலத்தி நடந்து கொள்ளுவன். மற்றவையின்ர பழிச்சொல்லுக்கு நாங்கள் பயப்பிடத்தேவையில்லையெண்டாலும், அதுக்கு இடம் கொடுக்காமல் நடந்துகொள்ளிறதுதான் புத்திசாலித்தனம்." இவ்வாறு கூறிவிட்டு எழுந்து வெளியேறினான் ரவி. எனக்குச் சங்கடமாக இருந்தாலும் ஏதோ ஒருவித நிம்மதி நெஞ்சிலே பரவுவதுபோல உணர்ந்தேன். தேநீர் ஒன்றை வாங்கிக் குடித்துவிட்டு வகுப்பை நோக்கி நடந்தேன்.

மாலை, கல்லூரி விட்ட பின்பும் அதிபர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நீண்டு சென்று நான்கு மணியளவில் முடிவுக்கு வந்தது. இவ்வாறான கூட்டங்களில் தேவையற்ற விடயங்களைப் பேசுவதைத் தவிர்த்தால் நேரம் மீதமாகுமேயென்று நான் கவலைப்படுவதுண்டு. இதையெல்லாம் யார் சிந்திக்கிறார்கள்?

வீதிக்கு வந்து சைக்கிளில் ஏறிய போது, ரவி முன்னரே சென்றுவிட்டதை உணர முடிந்தது. ராஜினியின் கணவன் சைக்கிளுடன் வீதியோரம் காத்து நிற்பதும் தெரிந்தது. இனம் புரியாத வேதனை நெஞ்சைப் பிசைய, வேகமாக உழக்கத் தொடங்கினேன்.

கோண்டாவில்சந்தி 'சென்றி'நெருங்கியது. இறங்குவதற்கு நான் பட்ட சிரமத்தைப் பார்த்த அவன் சோதனையிடாமலே என்னைப போகச் சொன்னான். மிதியிலே காலைத் தூக்கி வைத்தவேளை, பழக்கமான ஸ்கூட்டரின் ஒலி பின்புறம் கேட்கவே திரும்பிப் பார்த்தேன்.

என் கணவர்! கூடவே ஒரு பெண்!

அவளுக்கு சுமா முப்பது வயதிருக்கலாம். அவர் என்னைக் க்ண்டதும் திடுக்கிட்டாற்போல நின்றார். அந்தப் பெண் பயந்ததுபோல விழிகளை அங்குமிங்கும் வீசினாள். நான் எதுவும் பேசாமல் சைக்கிளை எடுத்தேன்.

வீட்டுக்கு வந்ததும் உடைமாற்றி முகம் கழுவினேன். தேநீர் ஊற்றுவதற்காகத் தண்ணீரைக் கொதிக்கவைத்த பின், இரவு உணவுக்கான ஆயத்தங்களில் ஈடுபடத்தொடங்கினேன்.

அரைமணி நேரத்தின்பின் ஸ்கூட்டரின் ஓசைகேட்டது. வந்தவர் சற்றுப் பொறுத்துச் சமையலறைக்கு வந்தார். நான் தேநீரை நீட்டியதும் வாங்கிக் கொண்டு அருகிலிருந்த கதிரையில் அமர்ந்தார். எதுவும் பேசாததிலிருந்து அவர் என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டேன். ஏதாவது பேசுவேன் என எதிர்பார்க்கிறாரோ?

இந்த மௌனம் என்பது இருக்கிறதே! அது மிகப்பொல்லாதது; சக்தி மிக்கது. மௌனம் நிலவுகின்ற போது எதிரொளியின் மனப்போக்கே பெரும்பாலும் மாறிவிடும். இதனால் அது சாதிக்கின்ற வெற்றிகள் ஏராளம்.

தேநீர்க் கோப்பையை வைத்து விட்டு இலேசாகச் செருமினார் அவர்.

"தேவகி. அந்தப்பிள்ளை என்னோட வேலைசெய்யுது. ஐசீயைத் துலைச்சுப்போட்டுது. ஊரெழுவிலை வீடு. இருட்டிறநேரம். பாவம். அது தான்......."

"அதுக்கென்ன?" குரலில் எந்தவித உணர்ச்சிகளுமில்லாமல் அடுப்பினுள் விறகைத் தள்ளினேன். நெருப்பு மூளவில்லை.

"என்னிலை சந்தேகப்படாதையும் தேவகி."

நான் சட்டென்று நிமிர்ந்து அவருடைய விழிகளை ஊடுருவிப்பார்த்தேன். எனது பார்வையின் கூர்மையைத் தாங்கமுடியாமல் தலைகுனிந்தார்.

"நான் அதைப் பிழையா நினைக்கேல்லையே!"

"தே..வ..கி..!" அவரது குரல் இடறியது.

'யாரோ ஒரு பெண்ணுக்காக இவ்வளவு கவலைப்படுகிறீர்களே! ஆறு மாதக் குழந்தையையும் சுமந்து கொண்டு இவ்வளவுதூரம் சைக்கிள் ஓடுகிறேனே! நான் பாவமில்லையா? ஊதிப் பருத்துவிட்டதற்காக ஏற்றிச் செல்ல வெட்கப்படும் நீங்கள் எதைப் பார்த்து என்னை நேசித்தீர்கள்?

எனது மனம் ஊமையாக அழுதது.

அவர் மௌனமாக என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய விழிகள் இலேசாகக் கலங்கியிருப்பதிலிருந்து உள்ளே வேதனைப் படுகிறார் என்பது புரிந்தது.

சந்தோஷமான இல்வாழ்க்கைக்கு சந்தேகத்தின் சாயல் சற்றும் அணுகாத மனம் வேண்டும் என்னும் உண்மையை அனுபவத்திலே உணர்ந்து விட்டதால், இனி எக்காலத்திலும் என மீது சந்தேகப்படமாட்டார் என்பதை நினைத்து மெல்ல அவரைப்பார்த்துப் புன்னகைத்தேன்.

(யாவும் கற்பனை)

## கல்யாணமாம்....

(XI ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரத்தின் உரை தொடர்ந்தது.

"சும்மா ஒரு சின்ன வருத்தம் எண்டாலே பொம்பிளையை வேண்டாம் எண்டு சொல்லுற இந்தக் காலத்தில ஒரு மனநோயாளியான என்ர மகளை தன்ர மனையாளாக்கிய என்ர மருமகன் ஒரு தெய்வப் பிறவி."- என்று சொல்லிக் கொண்டு மனேச்சரைப் பார்த்தார் ஏகாம்பரம். அங்கே மனேச்சர் மூர்ச்சையாகி விழுந்திருக்க, மணமகள் கௌரி உரக்கச் சிரித்தவாறு மணமாலையைப் பிய்த்து எறிந்து கொண்டிருந்தாள்.

( யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளை பல்கலைக்கழகத்துடன் ஒப்பிடுவதா?

20-03-1999சஞ்சீவியில் பிரசுரமான எனது மடலை - விருப்பங்களை - எதிர்த்து நல்லூர் நண்பன் ஆனந்த் எழுதிய மடல் கடந்த 10-04-1999 ஆம் திகதி சஞ்சீவியில் பிரசுரமாகியிருந்தது. அதில் அவர் சில வினாக்களைத் தொடுத்திருந்தார். அதற்கான விளக்கங்களைத் தருவது பொருத்தமானதாக அமையும்.

"பகிடிவதை" என்பது உண்மையில் புதிய மாணவர்களை பல்கலைக்கழக சூழலுக்கு ஏற்றவாறு தயார்படுத்துவது என்பதே நிதர்சனமான உண்மை. ஆனால் சில சமயங்களில் சில மாணவர்கள் எல்லை மீறிச் செயற்பட்ட சம்பவங்களும் உண்டு என்பதையும் நான் மறுப்பதற்கு இல்லை. ஆனால் எங்களுக்குள்ளே புதைந்து கிடக்கின்ற ஆழமான தோழமையுறவின் அடி நாதமாக விளங்குவது பகிடிவதையே என்ற உண்மை வெளியில் இருப்போருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை என்பது வேறு விடயம். எது எவ்வாறாயினும் இன்றைய போராட்ட வாழ்வியலில் பகிடிவதை என்ற அம்சம் அவ்வளவு ஆரோக்கியமான ஒன்று அல்ல என்ற காரணத்துக்காகவும் அரசு, பல்கலைகழக நிர்வாகம் என்பன விரும்பாமையாலும் நாங்களாகவே பகிடிவதை என்ற அம்சத்தை பெருமளவில் நிறுத்திவிட்டோம். எனினும் சில ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயிலும் வளாகத்தில் எடுத்த எடுப்பிலேயே பகிடிவதையை நிறுத்திவிட முடியாது என்பது யாவருக்கும் தெரியும். சில மாணவர்கள் இன்னமும் சிறிய அளவில் ஈடுபட்டாலும் மிக விரைவில் அந்த நிலைமையும் மாறிவிடும் என்பதில் நாம் முழு நம்பிக்கையுடன் இருக்கிறோம். அன்பர் ஆனந்த் கூறிய விடயங்கள் தற்போது இங்கு அருகி விட்டது என்பதையும் கூறவிரும்புகின்றோம். இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் கூற விரும்புகின்றோம். விடுதலைப் போரில் இருந்து பல்கலைக்கழகம் என்றைக்குமே தூர விலகியது மில்லை; விலகப் போவதுமில்லை. இன்றும் கூட வன்னியில் இடர்படுகின்ற மக்களுக்காக நிதி திரட்டி எங்களாலான உதவிகளைச் செய்து வருகின்றோம்.

"பல்கலையில் பெண்கள் இழிவு படுத்தப்படுவதைவிடவா வித்துவான் இழிவுபடுத்துகிறார்?" என்று நண்பர் ஒரு பெரும் வினாவினை எழுப்பியிருந்தார். பல்கலைக்கழகத்தையும் வித்துவானையும் ஒப்பிடுவது எந்த வகையில் நியாயம் என்று அவர் எண்ணினாரோ தெரியவில்லை. பல்கலைக்கழகத்தில் "ராக்கிங்" பெருமளவில் குறைந்து வருகிறது என்பதை முதலிலே குறிப்பிட்டேன். எடுகோளின் அடிப்படையில் தற்போதும் நடக்கிறது என வைத்துக் கொண்டாலும் கூட, அது ஒரு "பல்கலைக்கழகம்" என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது. பல்கலைக் கழகம் என்பது பல கலைகளையும் ஊட்டி நிறை மாந்தராக ஆக்குகின்ற ஓர் அமைப்பு. படித்தவர்களும், சம வயதுடையவர்களும் மட்டும் பயிலும் இடம். அவர்கள் நிதானமாகச் சிந்திக்கும் வயதுடையவர்கள். ஆதலால் தவறானது என்ற அம்சம் அவர்களில் எந்தவிதமான தாக்கத்தையும் உண்டு பண்ணாது. ஆனால் பத்திரிகை என்பது ஒட்டுமொத்த சமூகத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்று. ஆனால் பல்கலைக்கழகம் அவ்வாறல்ல. அந்த வகையில் பத்திரிகை ஒன்று தான்தோன்றித்தனமாகச் செயற்பட முடியாது.. வித்துவான் பதில்கள் பதிரிகையில் வருவதால் பத்திரிகை சார்பாக அதனைப் பார்ப்பதே பொருத்தமானது.

இன்று யாழ். குடாநாட்டு மக்களுக்கு இருக்கின்ற ஒரேயொரு பத்திரிகை என்ற அடிப்படையில் சாதாரணமாக ஒரு பத்திரிகைக்கு இருக்கும் கடமை, பொறுப்பு என்பவற்றைவிட மேலும் ஒருபடி உயர்வான பொறுப்பு "உதயன் - சஞ்சீவிக்கு" உண்டு என்பது சம்பந்தப்பட்டவர்களது கவனத்துக்குச் சமர்ப்பணம். அத்தகைய மேலதிக பொறுப்புமிக்க ஒரு பத்திரிகையை பல்கலைக்கழகத்துடன் ஒப்பிடுவது எந்த வகையிலும் பொருத்தமாகாது.

எங்கள் சமூகத்தினை நல்வழிப்படுத்துகின்ற - எமது சமூகத்தினை விழிப்பாக வைத்திருக்க வேண்டிய - ஒரு தார்மீகக் கடமை இன்று உதயன் - சஞ்சீவியின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருப்பதை உதயன், சஞ்சீவியும் மறந்து விட கூடாது என்பதுதான் எனது ஆதங்கம். வித்து வான் கேள்வி-பதில் என்ற அம்சத்தின் ஊடாக உதயன், சஞ்சீவி அந்தத் தார்மீகக் கடமையிலிருந்து சற்று தூர விலகுவது வேதனைக்குரியது.

உதாரணமாக ஒரு சில வாரங்களுக்கு முன்னர் கைதடி அகிலனின் வினாவும் வித்துவானின் பதிலும் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தன. ஆனால் அது எமது இன்றைய சூழலில் சஞ்சீவியில் பிரசுரிக்கக் கூடிய ஒன்றல்ல என்பது எனது பணிவான கருத்து. எனது முதல் மடலில் வித்துவான் பதில்கள் சில விரசம்மிக்கவை என்றும் அவை தவிர்க்கப்பட வேண்டும் என்றும் எழுதினேனே தவிர, ஆசிரிய பீடத்தின் மீது குற்றம் சுமத்தவில்லை. ஆனால் அகிலனின் வினாவும் அதன் பதிலும் பிரசுரமான பின்னர் ஆசிரிய பீடத்தினை நோக்கியும் எனது சுட்டு விரலை நீட்டக் கடமைப்பட்டுள்ளேன். எங்கள் பண்பாடு, கலாசாரத்துக்கு மதிப்பளிக்கும் ஆசிரிய பீடம், நான் மேலே சொன்ன விடயங்களில் பாராமுகமாக செயற்படுகிறதா அல்லது ஆசிரிய பீடமும் வழிமொழிகிறதா? என்பதுதான் எனது கேள்வி. எது, எப்படியாயினும் உதயன்-சஞ்சீவி தனது தார்மீகக் கடமையில் இருந்து விலகக் கூடாது என்பதில் விருப்பமும் விலகாது என்பதில் நம்பிக்கையுடனும் இருக்கிறோம். இது சம்பந்தமாக ஆசிரிய பீடம் பதில் தரும் என்று நம்புகின்றேன்.

எமது சந்தததி வெளிச்சத்துக்குவர, அறிவியலும், நாகரீகமும்தான் பிரதானம். ஆனால் வித்துவான் பதிலிலும் ஆபாசமான வார்த்தைகளை மட்டும் கேட்டும் படித்தும்தான் எமது சந்ததி வெளிச்சத்துக்கு வரும் என்று நண்பர் ஆனந்த் நம்பினால், அந்த அறியாமைக்கு எங்கள் அனுதாபங்கள் சமர்ப்பணம்.

**யாழ்.பல்கலைக்கழகம். இவன்.**

## உங்கள் உள்ளத்திலிருந்து

### பாடப் புத்தகங்களை விடவா சினிமாவில் காதல் ரசம்?

தினம் தோறும் உதயமாகி மக்களுக்கு நல்ல செய்திகளை எல்லாம் செப்பி வரும் உதயன் யாழ். மக்களின் உன்னத தோழன் என்றால் அது மிகையாகாது.

வளரும் கவிஞர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட "மௌன மொழி" கவிதைப் பகுதி பாராட்டுக்குரிய ஓர் அம்சமாகும். ஆயினும் ஆரம்பத்தில் குறைந்த எண்ணிக்கையுடைய வரிகளைக் கொண்ட தரமான கவிதைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்த சஞ்சிகை தற்போது கூடுதலான வரிகளையுடைய மௌனமொழி கவிதைகளையே அதிகம் பிரசுரிப்பதால் பலரது மௌனமொழிக் கவிதைகள் நிராகரிக்க வேண்டி ஏற்படுகிறது. குறைந்த வரிகளையுடைய கவிதைகள் அதிகம் பிரசுரிப்பதன் மூலம் பலரது கவிதைகள் இடம்பெற வாய்பளிக்கலாம் அல்லவா?

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தரமான சினிமாப் பகுதியை பிரசுரித்து வந்த உதயன் இனிமேல் காலங்களிலும் அனைவரையும் கவரக்கூடிய வகையில் நல்ல தரமான சினிமாவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேர்த்துக் கொள்ளக் கூடாதா?

தலைவன் தலைவியிடையே காதலைப் புகுத்தி காமரசத்துடன் தமிழ்ப் புலவர்கள் ஆக்கிய காவியங்கள் பள்ளிக்கூடம் முதல் பல்கலைலக்கழகம் வரை கற்பிக்கப்படுகின்றனதானே. ஆனால் தரமான சினிமாவை மட்டும் இணைத்துக் கொள்ள உதயன் பின் நிற்பதேன்?

அனைத்து வசதிகளையும் கொண்ட உதயன் முற்றுமுழுதாக இல்லாவிட்டாலும் ஓரளவேனும் கணனி மயமாக்கப்பட்டிருப்பது சந்தோஷமான ஒரு விடயம்தான். பத்திரிகையில் பிரசுரமாகும் முக்கியமான படங்களை கணனி உதவியுடன் வர்ணப் படங்களாகப் பிரசுரித்தால் அது மக்கள் மனதை மேலும் கொள்ளை கொள்ளும்.

**அச்சுவேலி. ப.தர்சினி.**

### சேற்றில் இறங்கினால்தான் துப்புரவு செய்யலாம்!

சமீபகாலமாக இப்பகுதியில் பலரும் வித்துவானுக்கு "பலத்த" சொல்லடி கொடுத்து வருகின்றனர். அதனால் அவரும் தமது பேனாவுக்கு "கட்டுப்பாடு" போட்டுவிட்டார் போலத் தெரிகிறது.

ஆபாசங்களும் சமூகச் சீர்கேடுகளும் உண்டாக்கும் வகையில் வித்துவானின் பதில்கள் அமைந்து சஞ்சீவியை ஒரு "மஞ்சள் பத்திரிகை" ஆக மாற்றுகின்றன என அவர்கள் விளாசித் தள்ளுகின்றனர். இன்று ஒழுங்கைகளிலும் தனியார் "ரியூசன் சென்றர்"களிலும் நடக்கும் "அசிங்கத்தை" விடவா வித்துவானின் பதில்கள் தரங்கெட்டவை?

சமூகத்தைத் திருத்த வேண்டிய இன்றைய ஆசிரியைகளில் சிலர் பாடசாலை நேரத்தில் சேலையால் போர்த்து மூடி கண்ணகிகளாகவும்" மாலை நேரத்தில் அரைக் கவுனும் சைக்கிளுமாக "மாதவிகளாகவும்" வலம் வருவதை யாராவது தட்டிக் கேட்கிறார்களா? முப்பது வயதைத் தாண்டிய - திருமணமாகாத - ஆசிரியைகள் கூட, எமது பகுதியில் திரிவதை சர்வசாதாரணமாகப் பார்க்கலாம். இதைவிடவா வித்துவானின் பதில்கள் ஆபாசம்? வித்துவான் தனது வித்துவத்தை தாராளமாகக் காட்டத் தடைபோட வேண்டாம்.

சேற்றில் இறங்கி சேற்றை அகற்றினால்தான் வாய்க்காலைத் துப்புரவு செய்யலாம். வித்துவான் சேற்றைத் தொடுவது வாய்க்காலை துப்புரவு செய்யவே தவிர , அதில் புரண்டு விளையாட அல்ல என்பதை உணருவோமாக!

**அரியாலை. செ.பரந்தாமன்.**

### சினிமாவைப் பிரசுரித்து மக்களைக் கெடுக்காதீர!

பல் சுவை விடயங்களைத் தாங்கி வாரந்தோறும் வெளிவரும் சஞ்சீவிக்கு எனது பாராட்டுக்கள்.

மின்னலின் அதிரடியும், சொற்சிலம்பமும் வரவேற்கத்தக்கன. "அங்கிகள் பல விதம் ஒவ்வொன்றும் ஒரு விதம்" என்ற தலைப்பில் பிராணிகள், பறவைகள் பற்றிய விவரங்களை விலாவாரியாக எடுத்தியம்புகிறார் குகன். அவருக்கு எனது பாரட்டுக்கள் உரித்தாகுக. அவரது பணி மேலும் தொடரட்டும். சொற்சிலம்பம் பகுதியில் சில வினாக்கள் பாண்டித்தியம் பெற்றவர்களைக் கூடத் திணறடிக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. தபாற் கட்டண அதிகரிப்பதால் பல வாசகர்களால் இப்போட்டியில் பங்கு கொள்ள முடிவதில்லை. (என்னாலும் கூடத்தான்.)

மேலும் போட்டிக் கூப்பனைப் பொறுத்தவரை சஞ்சீவியில் வெளிவரும் கூப்பனை மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனத் தாங்கள் நிபந்தனை ஏதும் விதிக்கவில்லையே. அதனால் கையால் தயாரித்த கூப்பன்களிலேயே நாம் விடை எழுதி அனுப்பலாமா என்பதைத் தெளிவு படுத்தவும்.

சினிமாப் பகுதியைச் சேர்க்கும் படி பல வாசகர்கள் வற்புறுத்துகின்றார்கள். அவர்களின் வேண்டுகோளைத் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளாதீர்கள். தற்போதைய சினிமாப் படங்களில் முக்கால் நிர்வாண (சில வேளைகளில் முழு நிர்வாண) காட்சிகளையும் அடிதடி சண்டைகளையும் விட வேறேதும் இல்லை. அவை பற்றிய விடயங்களைப் பிரசுரித்து மக்களின் மனங்களைக் கெடுக்காதீர்கள், கொழும்பிலிருந்து வெளிவரும் வாரப்பத்திரிகைகள் சினிமாப் பகுதி என்ற போர்வையில் ஆபாசப் படங்களை வெளியிட்டு வருகின்றன. இவை சமூகத்தைச் சீரழிக்கும் விடயங்களே தவிர வேறில்லை.

இக்காரணத்தால்தான் சினிமாப் பகுதி சஞ்சீவியில் இடம் பெறுவதை நான் எதிர்க்கின்றேன். ஆகவே, அன்புக்கினிய சஞ்சீவியே! யார் என்ன சொன்னாலும் சினிமாப் பகுதியை உன் பக்கத்தில் சேர்த்துக் கொள்ளாதே.

**யாழ். சி.சுந்தரலிங்கம.**

*வாசகரே!*

*போட்டிக் கூப்பனில் அளிக்கப்படும் விடைகள் மட்டுமே சொற்சிலம்பம் பகுதியில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.*

*(ஆ-ர்)*

### "மொக்கர் பதில்கள்!"

ஐ(யே)யா வித்துவானே!

உமது பதில்களைத் தொடர்ந்து படித்து விரக் தியின் விளிம்பில் நிற்கும் - உதயன் சஞ்சீவியின் நீண்ட கால - வாசகன் நான்.

உமது பதிலுக்கு பேராயர் குறிப்பிட்டது போல "மன்மதன் பதில்கள்" என்ற தலைப்பிடுவது அடியோடு பொருத்தமற்றது என்பதே எனது கருத்து; அபிப்பிராயம்.

"மொக்கர் பதில்கள்" என்று போட்டாலே போதும். தலைப்புக்குரிய விதத்தில் சரியாகத்தான் பதில்கள் அளிக்கின்றார்கள் என்ற திருப்தியோடு வாசகர்கள் பேசாமல் இருப்பார்கள். அத்தோடு உம்மை முடித்த மொக்குச்சியைப் பற்றியும் நீர் தொடர்ந்து ஒப்பாரி வைக்கலாம். யாவரும் அது குறித்து அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.

**திருநெல்வேலி. செ.இரத்தினச்செல்வன்.**

### நிஜங்களின் நிழலை தொட்டுக்காட்டும் சிறுகதை

காலத்தின் தேவையைக் கருதி சேவையாற்றும் பத்திரிகைக்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

கடந்த வார சஞ்சீவியில் வெளியாகிய "தீ விளிம்பு" என்ற தாட்சாயணியின் சிறு கதை எம்நாட்டில் நிலவுகின்ற அவலங்களை அப்படியே தொட்டுக்காட்டுகின்றது. வினோதன், வதனி போன்றவர்களுக்கு நடந்தது வெறும் கற்பனையல்ல; அது நிஜங்களின் நிழல். இவை போன்ற சம்பவங்கள் மின்சராம், தொலைபேசி, சினிமா இவற்றுடன் பேருந் துகள் போன்ற மாயைகளினால் மறைக்கப்பட் டுள்ளன.

இப்படிப்பட்ட அவலநிலையை சாதாரண பாமர மக்கள் உணர்ந்த அளவிற்கு படித்த - அறிவுள்ள - மக்கள் உணர்ந்ததாகக் காணோம். இவர்களுக்கு உணர வைப்பதற்கு இச்சிறுகதை உதவும் என நினைக்கின்றேன்.

இன்றைய நிலையில் - தடி எடுத்தவன் தண்டல்க்காரன் என்ற நிலையில் - ஆறு மணிக்கு முன்னர் அடங்குதல்தான் பாதுகாப்பு என்பது ஜீரணிக்க முடியாத உண்மைதான்.

ஆயினும் சூழ்நிலையின் தீவிரத்தை உணராது அதிகாலையிலும் மாலை மறைந்த நேரத்திலும் மாணவர்களை வீதியில் அலைய விடும் தனியார் கல்வி நிறுவனங்களும் பல மைல்களுக்கு அப்பாலிருந்து நகரத்துக்கு வேலைக்கு வருகின்ற இளசுகளை, தங்கள் சட்டதிட்டங்களை ஆதாரமாக அடுக்கி இருட்டிய பின்னர் சோதனைச்சாவடிகளில் அல்லாட வைக்கும் அதிகாரிகளும், இம்மண்ணில் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களின் மனச்சாட்சியை தட்டி எழுப்ப இக்கதை உதவும் எனவும் நம்புகின்றேன். அவர்களின் மனநிலை மாறி இளசுகளுக்கு பாதுகாப்பளிக்க முன்வந்தால் அது இக்காதா சிரியைக்குக் கிடைத்த வெற்றி; சமுதாயத்துக்குக் கிடைத்த பரிசு.

சகோதரி தாட்சாயணி போன்றவர்களால் இம்மண்ணில் நிலவும் அக்கிரமங்கள் வெளிச்சத்துக்கு வரட்டும். தொடரட்டும் அவர் பணி. அவரும் அவர்தம் தொண்டும் வாழ்க!

**உடுப்பிட்டி. உடுவை செல்வம்.**

### விடுதலைப் பாடல்களை நினைவூட்டுவது தவறா?

சீறிவரும் சிரமங்களுக்கு மத்தியில் - இலட்சியம் தவறாமல் சஞ்சீவியை நெறிப்படுத்தும் ஆசிரியபீடமே! தணிக்கைக் கத்தரிக் கோலுக்குத் தங்கள் அலுவலகத்தில் தட்டுப்பாடா? "உங்கள் உள்ளத்திலிருந்து" என்ற பகுதிக்கு மடல் வரைபவர்கள் சஞ்சீவி ஆசிரியருக்குச் சஞ்சீவியின் குறைநிறைகளை மட்டுமே வரைகின்றார்கள். ஆனால் அற்ப சொற்பமானவர்கள் "நானொரு தமிழாசிரியன்", "கவிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள்" என்பதையெல்லாம் அந்த மடலுடன் உள்ளடக்கி விடுகின்றார்கள். அவ்வாறானவர்களின் கடிதங்கள் ஆசிரியரின் கத்தரிக்கோலினுள் அகப்படவில்லையா?

கவிஞர் கண்ணதாசனின் வரிகள், சினிமாப் பாடல் மெட்டு, குறள் மெட்டு என்று தொடங்கி வீடுதலைப் பாடல் மெட்டு வரையான கவிதைகள் சஞ்சீவியில் பிரசுரமாகின்றன என்று குறைகாணும் வாசக அன்பர் இவை எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட ஒரு கவிதையை முன்னுதாரணமாகச் சஞ்சீவிக்கு அனுப்புவாரானால் சஞ்சீவியின் வளர்ச்சிக்கு ஒரு வெற்றிப் படி கிடைக்குமென்பதும், வாசகனும் வரைபவனுமாகிய எனது ஆதங்கம். உலகிலே மிகச் சுலபமானது குறை கண்டுபிடிப்பதென்பது உங்களுக்குத் தெரியாததா என்ன? விடுதலைப் பாடல்களை நாடே மறந்திருந்த காலத்தில் அதனைச் சற்று ஞாபகப்படுத்த நினைத்தால் - வில்லங்கம் தானாக வராமல் - சில தமிழர்கள் மூலம் சஞ்சீவினூடே அல்லவா வருகின்றது?

பல்லாயிரம் புத்திஜீவிகள் சஞ்சீவியை வாசிக்கின்றார்கள் என்பதை அத்தனை பேரின் பிரதிநிதி ஒருவர் கூறியிருந்தார். அது எமக்கும் சஞ்சீவி ஆசிரியருக்கும் மிக்க மகிழ்ச்சி தருகிறது.

குயுக்தியார், மகுடியார் போன்றவர்களைச் சந்தித்த பல்லாயிரம் ஜீவிகளில் நாங்களும் அடங்குவோம். இந்த வித்துவானுக்கு முன்னால் அவர்களெல்லாம் எம்மாத்திரம்?

அரைத்த மாவை திரும்பத் திரும்ப அரைப்பதனால்தான் மாப் பதப்படும் என்பதை உங்கள் வித்துவாட்டியிடம் கேட்டுப் பாருங்களேன். மாவை ஏனைய்யா போட்டுப் புளிக்க வைக்கின்றீர்கள்? மணற்கேணி பற்றிய குறளை மனதில் வைத்திருங்கள்.

வித்தூவானின் பதில்கள் எல்லாம் வாசகர்களின் மனங்களில் அல்லவா தங்கியுள்ளது? "கல்லைக்கண்டவர் நாயைக் காணார்; நாயைக் கண்டவர் கல்லைக் காணார்." என்பதை வாசகர்களும் வித்துவானும் நன்கு அறியமாட்டார்களா என்ன? கவிஞர்களின் கவித்துவமும் வித்துவானின் வித்துவமும் நின்று புகழ் வளர்த்தது போல மேன் மேலும் வளர வாழ்த்துக் கூறுகின்றேன்.

**யாழ்ப்பாணம். க.திவ்வியன்.**

*வாசகரே!*

*சஞ்சீவி குறித்து "உங்கள் உள்ளத்திலிருந்து" பகுதி மூலம் கருத்துக் கூறுபவர்கள் நல்ல நோக்கத்துடன் அதைக் கூறுவதாக எடுத்துக் கொள்வோமே! அவர்கள் குறை கூறுவது நன்னோக்கத்துடன் சஞ்சீவியை நிறைவு பெறச் செய்யவே என்று கருதி அவர்கள் சுட்டிக் காட்டும் விடயங்களைக் கவனத்தில் கொள்வதே சிறந்ததாகும். ஆகவே குறை கூறுவதை குறை கூறுகின்ற பண்பைத் தவிர்த்துக் கொள்வோம். (ஆ-ர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org